விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆவணி 20 வெள்ளிக்கிழமை (06.09.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 261

## ஜனாதிபதித் தேர்தலில் 20 அரசியல் கட்சிகள்

### தேர்தல் ஆணைக்குழு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் இருபது அரசியல் கட்சிகள் போட்டியிட உள்ளதாக தேர்தல் ஆணைக்குழு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட உள்ளதாக இருப்து அரசியல் கட்சிகள் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளன. 23

### யாழ். மாநகர சபைக்கு

## புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு வைபவம் நாளை

### பிரதமர் ரணில் தலைமை தாங்குகின்றார்

(யாழ்ப்பாணம்)

2 ஆயிரத்து 350 மில்லியன் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்படவுள்ள யாழ் மாநகர சபைக்கான புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நாளை சனிக்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பழைய மாநகரசபை இருந்த இடத்தில் இடம்பெறும் 23

### யாழ் – கொழும்பு

## 7ஆவது ரயில் சேவை ஆரம்பம்

(யாழ்பாணம்)

யாழ்ப்பாணம் - கொழும்பு இடையே 7ஆவது சேவையாக சிறி தேவி (SRI DEVIE) தொடருந்து சேவை (நகர் சேர் - INTERCITY) ஆரம்பமாகியுள்ளது. 23

### என்னுடைய கைகளில் இரத்தக்கறை இல்லை

# ரணில், கருவின் ஆசீர்வாதம் முழுமையாக கிடைக்கும்

### குருநாகலில் அமைச்சர் சஜித்



(குருநாகல்)

என்னுடைய கைகளில் இரத்தக்கறை இல்லை ஐக்கிய தேசிய கட்சியை பலவீனப்படுத்தும் நோக்கம் கட்சி உறுப்பினர்கள் எவருக்கும் கிடையாது எனத் தெரிவித்த அமைச்சர் சஜித் பிரேமதாச, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் கரு ஜயசூரிய ஆகியோரது ஆசிர்வாதம் முழுமையாக கிடைக்கப் பெறும் என தெரிவித்தார். (23ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதித் தேர்தலில்

## சுதந்திரக்கட்சி தனித்துப் போட்டி

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியும் போட்டியிடும் என அதன் பொது செயலாளர் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளார்.

அந்த கட்சியின் ஊடக பேச்சாளர் வீரகுமார் திஸாநாயக்க 23

## கோண்டாவிலில் வாள்வெட்டு குழு


### வீடு புகுந்து அட்டகாசம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கோண்டாவிலில் உள்ள வீடு ஒன்றில் புகுந்த வாள் வெட்டுக் கும்பல் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்துவிட்டு தப்பிச் சென்றுள்ளது. இச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை இரவு 9 23

### காணாமல் ஆக்கப்பட்ட

## தனது மகனை தேடிவந்த மற்றுமொரு தந்தை மரணம்



(முல்லைத்தீவு)

காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனை தேடிவந்த தந்தை ஒருவர் முல்லைத்தீவில் சுகயீனம் காரணமாக உயிரிழந்துள்ளார். 23

### அனுமதியில்லாத வியாபார நிலையம்

## எவ்வித கால அவகாசமுமின்றி முதலாம் திகதி சீல் வைக்கப்படும்

### யாழ்.மாநகர முதல்வர் அதிரடி அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் யாழ் மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் அனுமதியில்லாத வியாபார நிலையங்கள் மற்றும் உரிய தரம் பின்பற்றப்படாத உணவகங்களுக்கு எவ்வித கால அவகாசமின்றிச் சீல் வைக்கப்படும் என யாழ் மாநகர முதல்வர் இமானுவல் ஆனல்ட் அறிவித்துள்ளார். நேற்றையதினம் யாழ் 23

## உழவு இயந்திரம் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் பலி

### முல்லைத்தீவு பாலி ஆற்றில் சம்பவம்



(முல்லைத்தீவு)

மணல் ஏற்றிய உழவு இயந்திரம் ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று மதியம் முல்லைத்தீவு பாலி ஆற் 23

# பலாலி விமானநிலைய தொழில் வாய்ப்பில் வட மாகாணத்தவர்களுக்கு முன்னுரிமை

### யாழில் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க உறுதி
### ஒக்ரோபர் 16இல் விமான சேவையும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

பலாலி விமான நிலையத்துடன் தொடர்புபட்ட தொழில் வாய்ப்புக்களை வழங்கும் பொழுது வட மாகாணத்தில் உள்ளவர்களுக்கு கூடுதலான சந்தர்ப்பம் வழங்கப்படும் என்று போக்குவரத்து சிவில் விமான சேவைகள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார். அத்துடன், பலாலியில் இருந்து இந்தியா வரையில் ஆரம்பிக்கப்படவுள்ள விமான சேவைகளை வழங்குவதில் உள்ளூர் நிறுவனங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். 23

## சுகாதாரத் தொண்டர்கள் மாவைக்கு முன்னிலையில் தற்கொலைக்கு முயற்சி

### ஆளுநரின் உறுதி மொழியையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.சாவகச்சேரியில் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் சுகாதாரத் தொண்டர்களை பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா நேரில் சென்று சந்தித்துள்ளார்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டுவரும் ஒருவர் தனக்கு தானே மண்ணெண்ணெய் ஊற்றி தீ மூட்ட முயற்சித்ததால் அப்பகுதியில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது. 23

## கொக்குவிலில் வாள்வெட்டு இரு இளைஞர்கள் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ் கொக்குவில் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டு தாக்குதலில் இரண்டு இளைஞர்கள் காயமடைந்துள்ளனர்.

கொக்குவில் பிடாரி அம்மன் ஆலயத்திற்கு அருகில் நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் இச் சம்பவம் நடைபெற்றது.

ஆலயத்திற்கு அருகில் இளைஞர்கள் சிலர் ஒன்றுகூடியிருந்து கதைத்துக் கொண்டிருந்தபோது, மோட்டார்சைக்கிள்களில் வாள்களுடன் வந்த 6 பேர், 23

வீட்டுப் பணிப்பெண் தேவை

திக்கம் வதிரியில் தங்கியிருந்து பணிபுரியக்கூடிய வீட்டுப் பணிப்பெண் தேவை. (098)

தொடர்பு
077 992 3476


# எழுத்தாளர் சாந்தனுக்கு சாகித்திய ரத்தினா விருது



இலங்கை விருதுகளில் முதன்மையான சாகித்திய ரத்தினா விருது தமிழ் இலக்கிய எழுத்தாளரான ஐயாத்துரை சாந்தனுக்கு வழங்கப் பட்டவுள்ளது.

நாடு முழுவதும் மும் மொழிப் பிரிவுகளில் நடத்தப் பட்ட அரச இலக்கியப் போட்டியில் தமிழ் மொழி மூலம் பங்குபற்றி குறித்த விருதினை அவர் பெறவுள்ளார்.

இவருக்கான விருது வழங்கும் நிகழ்வு இம் மாதம் 12ஆம் திகதி வியாழக்கிழமை கொழும்பில் இடம்பெறும்.

இவருக்கு அண்மையில் இந்திய அரசின் சாகித்திய அகாடமி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ம-10)


விற்பனைப் பிரதிநிதிகள்
தேவை

முன் அனுபவமுள்ள விற்பனைப் பிரதிநிதிகள் தேவைப்படுகின்றனர்.

தொடர்பு:
ஸ்ரீமுருகன்
தொலைத்தொடர்பகம்
303, K.K.S வீதி,
யாழ்ப்பாணம். (C-7513)



தங்கம்மா முதியோர் இல்லம்

புதுக்குளம், ஏ9 வீதி, கனகராயன்குளம்.

முதியோர்களை சேர்த்தல்

எவ்வித வாழ்வாதாரமும், ஆதரவும் அற்ற ஆண், பெண் இருபாலாரும் மேற்படி முதியோர் இல்லத்தில் சேர விரும்புபவர்கள் எமது முகாமையாளருடன் தொடர்பு கொள்ளலாம்.

- ஆண்களுக்கும் பெண்களுக்கும்-தனித்தனியான நவீன தங்குமிட வசதிகள் கொண்டது.
- உணவு, உடை, அடிப்படை மருத்துவ வசதிகள் இலவசமாக வழங்கப்படும்.
- கடுமையான நோயாளிகள் இங்கு சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள்.
- 55 வயதுக்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்.
- நன்னடத்தை உள்ளவராக இருக்க வேண்டும்.

வயோதிபக் குடும்பங்களுக்கான நவீன வசதிகள் கொண்ட தனித்தனி அறைகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. (அதற்கு சிறிதளவு வாடகை செலுத்தப்பட வேண்டும்) அவர்களுக்கு உணவு, உடை, அடிப்படை மருத்துவம் இலவசம்.

எங்களிடம் அடிப்படை போக்குவரத்து வசதி, முழுநேர சமையலாளர், முழுநேர காவலாளர், முழுநேர தாதியர் மேற்படி சேவைக்காக நிரந்தரமாக அமர்த்தப்பட்டுள்ளனர்.
நல்ல இயற்கையான அமைதியான சூழல், நல்ல காற்றோட்ட வசதி, பொழுதுபோக்குசாதனங்களுடன் கூடிய வசதி என்பன உள்ளது.

தொடர்பு முகாமையாளர்
தங்கம்மா முதியோர் இல்லம்
0774499619
Dr. குணசிங்கம், ஸ்தாபகர்
0762482766


## யாழ். பல்கலையில் இன்று கவனயீர்ப்பு போராட்டம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நிலவுகின்ற ஆட்சேர்ப்பு நடைமுறையில் உள்ள பிரச்சினை மற்றும் நிர்வாக முறைகேடுகள் போன்ற பல பிரச்சினைகள் இது வரை எவ்வித தீர்வுகளும் இன்றி தொடர்வதனை சுட்டிக்காட்டி இன்று வெள்ளிக் கிழமை நண்பகல் 12 மணியில் இருந்து அரைநாள் தொழிற்சங்கப் போராட்டம் ஒன்றினை முன்னெடுப்பதென்றும் அத்துடன் இவ்விடயங்களை வெளிப்படுத்துமுகமாக கவனயீர்ப்புப் போராட்டத்தை நடத்துவதோடு பத்திரிகையாளர் சந்திப்பொன்றினை நிகழ்த்துவதென்றும் தீர்மானித்துள்ளதாக யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது.

இக்கவனயீர்ப்புப் போராட்டத்தில் பாதுகாப்பு ஊழியர் தவிர்ந்த சகல கல்வி சாரா ஊழியர் களையும இன்று மதியம் 12 மணிக்கு இராமநாதன் மண்டபம் முன்றலில் ஒன்றுகூடுமாறு அறிவித்துள்ளனர். (ம-3)


Home Visiting Classes

Study ACCA (Knowledge Level) with 7 Accounting Softwares

For more Detail Call (095)
071 317 3082
(Call after 7 pm)



வலி.கிழக்கு தென்பகுதி
பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி

கட்டிடம் வாடகைக்கு கொடுக்கப்படும்

எமது சங்கத்துக்கு சொந்தமான உரும்பிராய் கற்பக விநாயகர் கோவிலுக்கு முன்பாக அமைந்துள்ள 1702 சதுர அடி அளவினை உடைய கட்டிடம், கோப்பாய் கிராமிய வங்கிக்கு அருகாமையில் உள்ள 612 சதுர அடி அளவினை உடைய கட்டிடம், கோப்பாய் கிராமிய வங்கியின் பின்பக்க மேல்மாடி 1836 சதுர அடி அளவினை உடைய கட்டிடம் வாடகைக்கு கொடுக்கப்படும்.

இது தொடர்பில் சங்க கடமை நேரத்தில் பொதுமுகாமையாளருடன் தொடர்பு கொண்டு உரிய விண்ணப்பப் படிவத்தை பெற்று பூர்த்தி செய்து 25.09.2019ஆம் திகதிக்கு முன்னதாக 'பொதுமுகாமையாளர் வலி கிழக்கு தென் பகுதி ப.நோ. கூ.சங்கம், நீர்வேலி' என்னும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ கிடைக்கச் செய்யவும்.

பொதுமுகாமையாளர்
வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம்,
நீர்வேலி.
தொலைபேசி இல: 0212054814 (C-7515)



1985ம் ஆண்டிலிருந்து இன்று வரையான
தனித்துவமிக்கதொரு பயிற்சி நிலையம்
யாழ். கலாலயா பயிற்சியகம்
இலங்கையின் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்டது.



விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

A/L பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவியரே!
வெளிநாட்டுக்குச் செல்லவிருக்கும் மங்கையரே!!
சொந்தமாக தொழில் புரிய விரும்பும் நங்கையரே!!! மற்றும் ஆர்வமுள்ள மகளிரே!!!!
உங்களுக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!



- FACIALS (முக அழகுக்கலை)
- கூந்தல் வடிவமைப்புகளும் முடி சிராக்குதலும்
- BRIDAL DRESSINGS (மணப்பெண் அலங்காரங்கள்)
- கேக் ஐசிங்
- உணவு தயாரித்தல்



இம்முறை A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவிகளுக்கு மேற்படி பயிற்சிகளின் கட்டணத்தில் கழிவு வழங்கப்படும்.

பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

பலவருட அனுபவமிக்க எமது ஆசிரியைகளினால் பயிற்சிகள் யாவும் சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்படுகின்றன!

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 15-09-2019 ஞாயிற்றுக்கிழமை
கிழமை நாள் பிரிவுகள் ஆரம்பம் - 16.09.2019 திங்கட்கிழமை
நேரம் 09:30 மணி

மேலும் விபரங்களை நாள்தோறும் மு.ப 9.30 - பி.ப 5.30 வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.
-இயக்குநர்-



குருவே துணை

வாழ்க வையகம்



வாழ்க வளமுடன்

ஆளுமைத் திறனூக்கப் பயிற்சிகள் ஆரம்பமாகிறது

தமிழகத்திலிருந்து வருகை தந்திருக்கக்கூடியவரும் இலங்கையில் பல தரப்பட்டவர்களின் ஆதரவைப் பெற்றவருமான பேராசிரியர் உழவன் முத்துவேல் அவர்களால் பயிற்சிகள் நடாத்தப்பட இருப்பதால் இந்த அரியவாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- எளியமுறை உடற்பயிற்சிகள்
- எளியமுறை தியானப் பயிற்சிகள்
- காயகல்ப்பப் பயிற்சி
- அகத்தாய்வுப் பயிற்சிகள்

காலம்: 07.09.2019 சனிக்கிழமை தொடக்கம் 13.09.2019 வெள்ளிக்கிழமை வரை
நேரம் : மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை
பயிற்சிகளை வழங்குபவர்கள்: மனவளக்கலை பேராசிரியர் உழவன் முத்துவேல்
துணைப் பேராசிரியர் த.நந்தகுமரன்

அகத்தாய்வு 1ம் நிலை 07.09.2019 சனி மற்றும் 08.09.2019 ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 9.00 மணிக்கு நடைபெறும் (C-7514)

யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவில்
இல.81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். தொ.இல. 021 222 2772

# கடந்த ஐந்து வருட காலப்பகுதியில் தான் நீதித்துறை சுதந்திரமாகச் செயற்பட்டது!

## ஜனாதிபதி மைத்திரி மகிழ்ச்சி

(பொலநறுவை)

**நீதித்துறைக்கு அரசியல் அழுத்தங்கள் மற்றும் தலையீடுகளின்றி சுயாதீனமாகவும் பக்கச் சார்பின்றியும் தீர்ப்புக்களை வழங்கக்கூடிய சுதந்திரமானதொரு சூழலை கடந்த ஐந்து வருட காலப்பகுதியில் தான் கட்டியெழுப்பியிருப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.**



பொலநறுவை புதிய நீதிமன்றக் கட்டடத்தொகுதியை நேற்று முற்பகல் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த புதிய நீதிமன்ற கட்டடத்தொகுதி 3 மாடிகளைக் கொண்டிருப்பதுடன், இதற்காக 327 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், நீதவான் நீதிமன்றம் மற்றும் அலுவலக வசதிகளைக் கொண்டுள்ள இந்நீதிமன்றக் கட்டடத்தொகுதியின் நிர்மாணப் பணிகளுக்கான அடிக்கல் கடந்த பெப்ரவரி மாதம் ஜனாதிபதியால் நாட்டப்பட்டது. இந்நிலையில் நேற்று நினைவுப்பலகையை திரைநீக்கம் செய்து புதிய கட்டடத்தை திறந்து வைத்த ஜனாதிபதி அதனைப் பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி, எத்தகைய விமர்சனங்கள், குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டபோதும் தான் இன்று நாட்டில் சுதந்திரம், ஜனநாயகம் மற்றும் நீதித்துறையின் சுயாதீனத்தை உறுதிப்படுத்தியிருப்பதாக தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் இந்த நாட்டிலிருந்த அனைத்து ஜனாதிபதிகளும் நீதித்துறையில் அழுத்தங்களை பிரயோகித்தமை, தலையீடு செய்தமை தொடர்பான குற்றச்சாட்டுக்கள் உள்ளன. எனது ஆட்சிக் காலப்பகுதியில் அத்தகைய எவ்விதமான குற்றச்சாட்டுக்களும் இல்லை எனத் தெரிவித்த ஜனாதிபதி இது குறித்து தான் மகிழ்ச்சியடைவதாகவும் இது நாட்டின் நீதித்துறைக்கும் நாட்டு மக்களுக்கும் கிடைத்த விசேடமான வரப்பிரசாதமாக கருதுவதாகவும் தெரிவித்தார்.

அமைச்சர் தலதா அத்துகோரள, இராஜாங்க அமைச்சர் வசந்த சேனநாயக்க, முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, வடமத்திய மாகாண ஆளுநர் சரத் ஏக்கநாயக்க, வடமேல் மாகாண ஆளுநர் பேசல ஜெயரட்ன, பொலநறுவை நகரபிதா சானக்க சிதத் ரணசிங்க ஆகியோர் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும் மாவட்ட செயலாளர் பண்டுக அபேவர்த்தன உள்ளிட்ட அரசாங்க அதிகாரிகளும் நீதித்துறையைச் சேர்ந்த பல முக்கியஸ்தர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (இ-7)

# பாராளுமன்றில் கறுப்பு தினம்!

(கொழும்பு)

ஆளும் தரப்பினரிடம் கேட்ட எந்தவொரு கேள்விக்கும் பதில் தெரிவிக்காது நிராகரிக்கப்பட்ட "பாராளுமன்ற கறுப்பு தினமாக" நேற்றைய நாள் மாறியுள்ளது.

இவ்வாறு எமது கேள்விகளைப் புறக்கணித்து ஆளும் தரப்பு செயற்படுவது எமது சிறப்புரிமையை மீறும் செயல் என எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபையில் தமது கடும் அதிருப்தியை வெளியிட்டனர். பாராளுமன்றத்தை ஒத்திவைத்துவிட்டு சகல தேர்தல்களையும் முடித்துவிட்டு புதிய அரசாங்கம் ஒன்றை உருவாக்க இடமளிக்க வேண்டும் எனவும் சபையில் வலியுறுத்தினர்.

பாராளுமன்ற அமர்வுகள் ஆரம்பிக்கப்படும் வேளையில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது எதிர்க்கட்சித் தரப்பினரிடமிருந்து கேட்கப்படும் கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதில் வழங்குவது கட்டாயமான ஒன்றாகும்.

எனினும் நேற்று எதிர்க்கட்சித் தரப்பில் 15 கேள்விகள் எழுப்பப்பட்டிருந்த போதிலும் கூட எந்தவொரு கேள்விக்கும் பதில் தெரிவிக்க ஆளும் தரப்பின் அமைச்சர்கள் எவரும் வருகை தந்திருக்கவில்லை. இதனை அடுத்து பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஆட்சி செய்த இரு கட்சிகளையும் மக்கள் புறக்கணிக்க வேண்டும்

## நளிந்த வலியுறுத்து

(கொழும்பு)

இரு பிரதான அரசியல் கட்சிகளையும் நாட்டு மக்கள் புறக்கணிக்க வேண்டும் என்றும் ஊழல் மோசடி, முறையற்ற அரசியல் செயலொழுங்கு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே இவ்விரு கட்சிகளும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன என்றும் நாட்டு மக்களே அரசியல் ரீதியில் புதிய திருப்புமுனையை ஏற்படுத்த வேண்டும் என்றும் மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்தார்.

மக்களாணையை மதிக்க வேண்டும் என்பதற்காகவே 2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினோம்.

ஆட்சி மாற்றத்தின் நோக்கம் வெற்றி பெறவில்லை. தேசிய நிதி மோசடியாளர்களை தண்டிப்பதாக குறிப்பிட்ட அரசாங்கத்திலே மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி உள்ளிட்ட மோசடிகள் இடம் பெற்றன.

தற்போது ஐக்கிய தேசியக் கட்சியின் மோசடிகளை தமது அரசாங்கத்தில் வெளிக் கொண்டு வருவதாக பொதுஜன பெரமுனவினர் குறிப்பிட்டுக் கொள்கின்றனர். கட்சியின் பெயரில் மாத்திரமே மாற்றம் ஏற்பட்டுள்ளதே தவிர கடந்த அரசாங்கமே மீண்டும் ஆட்சிக்கு வர முயற்சிக்கின்றது. ஆகவே இரண்டு தரப்பினரும் ஒருபோதும் தேசிய நிதி மோசடியாளர்களைச் சட்டத்தின் முன்னிலைப்படுத்த மாட்டார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# "பாராளுமன்ற ஊழியர்களின் செலவுகளை உறுப்பினர்களின் செலவாக காட்டுகின்றனர்"

## மன்றில் மரிக்கார் எதிர்ப்பு

(கொழும்பு)



பாராளுமன்றத்தில் மாதம் முழுவதும் கடமையாற்றும் ஊழியர்களின் உணவு, தேநீர் செலவுகளை மாதத்தில் எட்டு நாட்கள் மட்டுமே வரும் 225 பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது செலுத்தி எமது செலவாக ஊடகங்களில் காட்டாது உண்மையான செலவுகளை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஒழுங்குப்பிரச்சினை ஒன்றை எழுப்பிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாராளுமன்றத்தைக் கொண்டு செல்ல நாளாந்தம் இவ்வளவு பணம் செலவழிக்கப்படுகின்றது, இவ்வளவு நிதி ஒதுக்கப்படுகின்றது என ஊடகங்களில் தொடர்ச்சியாக விமர்சிக்கப்பட்டே வருகின்றது.

வரவு-செலவுத் திட்டத்தைத் தவிர வேறு எந்தக் காலத்திலும் இந்தப் பாராளுமன்றத்தில் உள்ள 225 பேரும் இங்குள்ள சிற்றுண்டிச்சாலையில் உண்பதில்லை. ஆனால் ஒரு நாளைக்கு ஒரு அமைச்சருக்கு இவ்வளவு செலவாகின்றது என ஒரு இலக்கத்தை கூறுகின்றனர். ஒரு மாதத்தில் எமக்குள்ள எட்டு நாட்களில் நான்கு நாட்களில்மட்டுமே காலை உணவு எடுக்க முடியும், மற்றைய நாட்களில் மதிய உணவு மட்டுமே நாம் எடுத்துக்கொள்கின்றோம்.

ஆனால் பாராளுமன்ற சேவையாட்கள் ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் உள்ளனர். இவர்கள் அனைவருக்கும் உணவும் தேநீரும் வழங்கப்படுகின்றது. இந்த அனைத்துச் செலவும் பாராளுமன்ற உறுப்பினர்களின் கணக்கில் தான் பதியப்பட்டு செயற்பட்டு வருகின்றது. ஆகவே இது குறித்து மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

இல்லையேல் மக்கள் நினைத்துக்கொண்டிருப்பதைப் போன்று பாராளுமன்றத்திற்கு வரும் 225 பேருக்கும் இத்தனை ரூபாய்கள் செலவா? என்ற கேள்வி எழும். நாம் ஒரு வேளை உணவை எடுத்தாலும் எமக்கு வரும் கணக்கில் பாராளுமன்றத்திலுள்ள அனைவரும் உண்ணும் உணவுக்கான பணத்தை எமது 225 பேரில் பிரித்துக் காட்டுகின்றமை ஆரோக்கியமான விடயமல்ல. எனவே இது குறித்து மக்களுக்கும் ஊடகங்களுக்கும் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# குண்டுத் தாக்குதல் குறித்து இதுவரை 293 பேர் கைது

## பொலிஸ் பேச்சாளர் தகவல்

(கொழும்பு)



உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய 293 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் 115 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன் 178 பேர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# என்ரபிறைஸ் சிறிலங்கா

## இலங்கை தொழில் நிறுவன மூன்றாவது தேசிய கண்காட்சி - யாழ்ப்பாணம்.

செப்ரெம்பர் 07, 08, 09 மற்றும் 10 திகதிகளில் யாழ். முற்றவெளி மைதானத்தில் இலங்கை நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால் நடாத்தப்படவுள்ள மேற்படி கண்காட்சியில் இலங்கை மத்திய வங்கியின் காட்சிக்கூடத்தில் பின்வரும் சேவைகளை பொதுமக்கள் பெற்றுக்கொள்ளலாம்.

- புழக்கத்திற்கான நாணயக்குத்தி விநியோகம்
- வேண்டுமென்றே சேதமாக்கப்பட்ட மற்றும் பழுதடைந்த நாணயத்தாள் மாற்றம்
- ஊழிய சேமலாப நிதியம் தொடர்பான சேவைகள்
- இலங்கை மத்திய வங்கியின் வெளியீடுகளின் விற்பனை
- இதர சேவைகள்



பிரதேச அலுவலகம் - கிளிநொச்சி,
இலங்கை மத்திய வங்கி.
தொலைபேசி இல.: 021-228-5914

(c-7516)



மாநகர
செயற்றிட்டம்

உறுதி
இருக்க நினைக்கும் நாட்டிற்கு

மேல் மாகாண மற்றும் மாநகர அபிவிருத்தி அமைச்சினால்
நடைமுறைப்படுத்தப்பட்டு வரும்
சுகித புரவர "எழில் நகரம்" அபிவிருத்தித் திட்டத்தின்
நிதியொதுக்கீட்டினால் நகர அபிவிருத்தி அதிகாரசபையின்
திட்டங்கள் மற்றும் மேற்பார்வையின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ள
**யாழ்ப்பாணம் முனிஸ்வரன் சாலை திறப்பு விழா மற்றும்**

**2,350 | மில்லியன் ரூபா**

முதலீட்டுச் செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள
**நகர மண்டபத்தின் அடிக்கல் நாட்டு விழா**

மேல் மாகாண மற்றும் மாநகர அபிவிருத்தி அமைச்சர்
**கௌரவ பாட்டலி சம்பிக்க ரணவக்க அவர்களின்**
அழைப்பின் பேரில்

யாழ்ப்பாண கௌரவ நகரபிதா
**இம்மானுவல் ஆனல்ட் அவர்கள்**

வட மாகாண கௌரவ ஆளுநர்
**கலாநிதி சுரேன் ராகவன் அவர்கள்**

அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள்
மற்றும் மாநகர சபை உறுப்பினர்களின் பங்கேற்றலுடன்

கௌரவ பிரதமர்
**ரணில் விக்கிரமசிங்க அவர்களின்**
தலைமையில்

**2019** செப்டம்பர் 07 ஆம் திகதி **மு.ப. 10.00 க்கு**

**யாழ்ப்பாணம் பழைய நகர மண்டப வளாகத்தில் நடைபெறும்**



மேல் மாகாண மற்றும் மாநகர அபிவிருத்தி அமைச்சு

நகர அபிவிருத்தி அதிகாரசபை

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு மாநகரமக்கள், யாழ் மாவட்ட மக்கள், தமிழ் பேசும் உறவுகள், அரசியல் தலைவர்கள், கல்வியாளர்கள், சமூகமட்ட சிவில் அமைப்புக்கள், வர்த்தக அமைப்புக்கள், வர்த்தகர்கள், அரச உத்தியோகத்தர்கள், சமூக ஆர்வலர்கள் உள்ளிட்ட அனைவரையும் மாநகர சமூகம் அன்போடு அழைக்கின்றது.

**யாழ்ப்பாணம் மாநகர சபை**

# இலங்கைக் கடலில் மர்மப்பொருள்?

## திணறும் கடற்படை

(சிலாபம்)

சிலாபத்தை அண்டிய கடற்பரப்பில் மர்மப் பொருள் ஒன்று மிதந்து வந்ததாக அந்தப் பகுதி கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர்.

முந்தலம் - பெரியபாடு கடலில் கடல் எல்லையை குறிக்கும் மிதவைக்கு சமமான உபகரணம் ஒன்றே இவ்வாறு மிதந்து வந்தது.

10 அடி உயரமான இந்த மர்மப்பொருள் 5000 கிலோகிராமிற்கும் அதிக நிறையை கொண்டுள்ளது. அதன் கீழ் பகுதி பைபர் அல்லது வேறு பொருளால் தயாரிக்கப்பட்ட நிலையில் மேல் பகுதி இரும்பால் தயாரிக்கப் பட்டுள்ளது.

தற்போது நிலவும் அதிக கடல் கொந்தளிப்பு காரணமாக குறித்த உபகரணம், கடலில் அடித்து வந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.



கடற்படையினர் இணைந்து வெளியே கொண்டுவர முயற்சித்த போதிலும், அதிகளவிலான நிறை காரணமாக அதனை கடற்கரைக்கு கொண்டுவர முடியவில்லை.

எப்படியிருப்பினும் இது தொடர்பில் ஆராய்வதற்காக அதிகாரிகள் அந்த பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.


இது மிதவையாக அல்லது கடலின் நிலைமை தொடர்பில் ஆராய்வதற்காக நிர்மாணிக்கப்பட்டதாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

அதிக தொழில்நுட்பத்தால் இந்த மர்மப் பொருள் தயாரிக்கப்பட்டிருக்கலாம் என கடற்படையினர் தெரிவித்தனர். (இ-7)

# கண்ணீரில் கரைந்த ஓராண்டு நினைவலைகள்



மண்ணில்
25 * 02 * 1944



விண்ணில்
06 * 09 * 2018



அன்பின் ஒளியாய் சுடர் விட்டு
அறிவின் நதியாய் ஊற்றெடுத்து
இறைபணிக்காய் உம் வாழ்வை
முழு மனதுடனே அர்ப்பணித்தீர்

பண்புடன் எம்மை பழக வைத்து
நல்ஒழுக்கத்தில் எம்மை ஒழுக வைத்து
நல் சான்றோரை உருவாக்கிய உம்மை
இறைவன் அன்று அழைத்ததேனோ

எத்தனை வருடங்கள் கடந்தாலும்
உம் நினைவலைகள் என்றும் ஓயாதம்மா
நித்திய வான் வீட்டில் வீற்றிருக்க
உமக்காய் நாம் பிரார்த்திக்கின்றோம்

**அமரர் அருட்சகோதரி**
**யூட் மடுத்தீன்**
**(திருக்குடும்ப கன்னியர்மடம்)**



"உம் ஆற்றலையும் மாட்சியையும் காணவிளைந்து உம் தூயகம் வந்து உம்மை நோக்குகின்றேன்" (தி.பா: 63.2)

(079)

4ம் வட்டாரம்,
மண்டைதீவு.

பிரிவால் துயருறும்
குடும்ப உறுப்பினர்கள்.

# இரு தடவைகள் ஜனாதிபதியாக இருந்தவர் ஒரு தூபியையேனும் அமைத்தாரா?

## மகிந்த அணியை நோக்கி சஜித் கேள்வி

(கொழும்பு)

மகா பௌத்தர் எனச் சொல்லிக் கொண்டிருப்பவர் இரண்டு தடவைகள் நிறைவேற்று ஜனாதிபதியாக இருந்தும் ஒரு தூபியையேனும் அமைக்கவில்லை. ஆனால் பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பின்னர் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஆதரவுடன் தாக்கப்பட்ட பள்ளிவாசல்களைப் புனரமைக்கவும் நாங்கள் நிதி ஒதுக்கீடு செய்தோம் என அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அத்துடன் எனக்கெதிராக எந்தளவு சேறு பூசினாலும் அபிவிருத்திப் பணிகளைத் தொடர்வேன் எனவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் எதிர்க்கட்சியால் கொண்டுவரப்பட்டிருந்த மத்திய கலாசார நிதியம் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் பதிலளித்து உரையாற்றுகையிலேயே சஜித் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பௌத்த சாசனத்தைப் பாதுகாப்பது அரசியலமைப்பின் பிரகாரம் அரசாங்கத்தின் கடமையாகும். அதேபோன்று மற்றைய மதங்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும்.

அதன் பிரகாரமே சிசு அறநெறி செவன என்ற வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். 30 இலட்சம் ரூபாவை ஒரு அறநெறிப் பாடசாலைக்காக ஒதுக்கியுள்ளோம்.

இதன்படி இலங்கையில் 361 தஹம் பாடசாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுக்குச் செலவழித்தது தவறா? எனக் கேட்கின்றேன். இது சிறைத்தண்டனை வழங்குமளவான குற்றமா? எனக் கேட்கின்றேன்.

பயங்கரவாதத் தாக்குதலுக்குள்ளான ஆலயங்களை நிர்மாணிக்க இந்த நிதியத்தில் இருந்தே செலவழித்தோம். அதேபோல் தாக்குதலுக்குப் பின்னர் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஆதரவுடன் முஸ்லிம் பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டன.

அந்தப் பள்ளிவாசல்களைப் புனரமைக்கவும் நாங்கள் நிதி ஒதுக்கீடு செய்தோம். எதிர்க்கட்சி கொண்டுவந்திருக்கும் இந்த ஒத்திவைப்பு வேளை பிரேரணையால் 10 இற்கும் அதிக மக்கள் சேவை தடைப்பட்டிருக்கின்றது. எதிர்க்கட்சி உறுப்பினர் டி.பி. ஏக்கநாயக்க யாருடையதோ இத்துப் போன கயிற்றை பிடித்துக்கொண்டு இந்தப் பிரேரணையைக் கொண்டுவந்திருக்கின்றார்.

நான் அதிகாலை 4 மணிக்கு எழுந்து நள்ளிரவு 12 மணிக்கே நித்திரைக்குச் செல்கின்றேன். நான் மக்களுக்காக வேலை செய்வதற்காகவே இவ்வாறு எழுகின்றேன். இவ்வாறான நிலைமையில் ஏன் என் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றீர்கள் எனக் கேட்கின்றேன்.

எனது பௌத்த தன்மை பூமியிலும் விகாரைகளிலும் இருக்கின்றது. நீங்கள் வேண்டியளவுக்கு என் மீது குற்றச்சாட்டுக்களை முன்வையுங்கள். வேண்டுமென்றால் என்னை வெலிக்கடைக்கும் அனுப்புங்கள். எனக்குப் பிரச்சினையில்லை. ஆனால் இந்த வருடத்திற்குள் 1000 அறநெறிப் பாடசாலை மண்டபங்களை அமைக்க வேண்டுமென்பதே எனது இலக்காகும்.

விகாரைக்குச் சென்று மகா பௌத்தர்கள் எனக் கூறிக்கொண்டிருந்தவர்கள் ஒரு தூபியையேனும் அமைத்துள்ளார்களா? இரண்டு தடவைகள் நிறைவேற்று ஜனாதிபதியாக இருந்தும் இதனைச் செய்தார்களா? எனக் கேட்கின்றேன். ஆனால் நான் அதனை செய்துள்ளேன்.

எனவே என் மீது எவ்வகையான குற்றச்சாட்டுக்களை, விமர்சனங்களை முன் வைத்தாலும் நான் எனது கடமையைச் செய்வேன். விகாரைகள் அமைப்பது தவறு என்றால் என்னை வெலிக்கடைக்கு அனுப்பினாலும் பிரச்சினையில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இராசி பலன்

**மீனம்**



இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பிர்கள், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மேடம்**



வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், மற்றவர்களுக்காக பொறுப்புச் சொல்வதைச் தவிர்ப்பது நல்லது, ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டு அகலும்.

**இடபம்**



நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், சுப செய்திகள் வந்து சேரும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மிதுனம்**



உற்சாகத்துடன் பணி புரிவீர்கள், நன்மைகள் நடைபெறும் நாள், வருமானம் வரும் வழியைக் கண்டுகொள்வீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**கும்பம்**



அருமையான நாள், அன்பு நண்பர்களின் ஆதரவு கிடைக்கும், புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ளும் எண்ணம் உருவாகும்.

**இராசி பலன்**

ராகு

கிரகநிலை
சந்திராஷ்டமம்
பரணி, கார்த்திகை

சூரி, சுக் புத, செவ்

சனி, கேது

குரு, சந்

06.09.2019
ஆவணி 20, வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 5.56 மணிக்கு
அட்டமி பின்னிரவு 2.24 மணிவரை
அனுசம் முற்பகல் 10.37 மணிவரை
சுபநேரம் 6.04 - 7.34 மணிவரை
இராகுகாலம் 10.34-12.04 மணிவரை

வளவன்

**கடகம்**



மற்றவர்கள் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், எதிலும் வேகத்தைக் குறைத்து செயற்படுவது நல்லது, சொன்ன சொல்லை காப்பாற்றும் எண்ணம் உருவாகும்.

**மகரம்**



பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, பலரது அன்பிற்கு பாத்திரமாவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்**



பெண்கள் வழியில் பெருமைப்படும் வகையில் உதவிகள் கிடைக்கலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், நண்பர்கள் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு**



தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, தேசநலனில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**விருச்சிகம்**



வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், உறவினர் பகை அகலும், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், கௌரவமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**துலாம்**



பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், புதிய பாதை புலப்படும் நாள், புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ் கூடும் நாள், தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு.

**கன்னி**



உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், தொழில் போட்டிகளை முறியடித்து முன்னேற்றம் காண்பீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

# வீதி விவகாரத்தால் மாநகரசபையில் அமளி

# நாவலர் வீதி கலீபா காதர் வீதியாக மாற்றம்

(யாழ்ப்பாணம்)

**நாவலர் வீதியின் ஒரு பகுதி கலீபா அப்துல் காதர் வீதியாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதா? என ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ்.மாநகர சபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன் தெரிவித்தார்.**

நாவலர் வீதி நாவாந்துறைப் பகுதியில் இருந்து யாழ்.மாவட்ட செயலகத்தை அண்மித்த பகுதி வரை நீண்டு ஏ-9 பிரதான வீதியுடன் இணைகிறது. குறித்த வீதியின் பெயர் நாவலர் வீதி. என்கின்ற போதும் அதில் ஐந்து சந்தியில் இருந்து நாவாந்துறைப் பகுதிக்குச் செல்லும் சில மீற்றர் தூரமான வீதி கலீபா அப்துல் காதர் வீதியாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டதாக சபை உறுப்பினர்களால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

குறித்த வீதி கலீபா அப்துல் காதர் வீதியாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டால் ஏன் மாநகர சபையில் பதிவு இருக்கவில்லை எனக் கேள்வி எழுப்பியதுடன் இன்றும் அதே பகுதி மக்களில் ஒரு பகுதியினர் நாவலர் வீதி என சோலைவரி கட்டுவதாகத் தெரிவித்தனர்.

எனவே குறித்த வீதி உரிய அனுமதியுடன் பெயர் மாற்றம் செய்யப்பட்டால் ஏன் இரு பெயர்கள் பதிவில் வர வேண்டும் எனச் சந்தேகம் வெளியிட்டனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த யாழ்.மாநகரசபை ஆணையாளர், கடந்த 1972 ஆம் ஆண்டு குறித்த வீதிக்கு கலீபா அப்துல் காதர் எனப் பெயரிடப்பட்டதாகத் தான் அறிவதாகவும் இவ்வாறு பெயர் வைக்கப்பட்டமைக்காக உரிய அனுமதிகள் சபையிடம் இல்லை எனவும் தெரிவித்தார்.

குறித்த விதி தொடர்பில் அரச தகவல் திணைக்களத்திடம் விசாரித்து சபைக்குத் தெளிவுபடுத்துவதாக ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## மதுபோதையில் சாரத்தியம் ரூ.25 ஆயிரம் அபராதம்!

(கொடிகாமம்)

மது போதையில் மோட்டார் சைக்கிள் செலுத்தியவருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் சாவகச்சேரி பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. கடந்த செவ்வாய்க்கிழமை வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 25 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. (இ-5-114)




## விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள யாழ். நகர் II பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய் தடுப்பூசி (ARV) வழங்கப்படவுள்ளது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளுமாறும் இவ்வளர்ப்பு நாய்களுக்காக உரிமக் கட்டணமாக ரூபா 30 செலுத்தப்படவேண்டும் எனவும் யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்தார்.

அந்தவகையில், 11.09.2019 காலை 9 மணிக்கு அத்தியடி பிள்ளையார் கோயில், அத்தியடி, முற்பகல் 11 மணி ஸ்ரான்லி வீதி பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முன்பாக, பிற்பகல் 2.30 மணிக்கு பருத்தித்துறை வீதி குருநாதர் சுவாமி கோவிலடி, 16 ஆம் திகதி காலை 9 மணிக்கு நாவலர் மண்டபம் நாவலர் வீதி, முற்பகல் 11 மணிக்கு ராசாவின் தோட்ட வீதி ஸ்ரான்லி வீதி சந்தி, பிற்பகல் 2.30 மணிக்கு கோவில் வீதி றக்காவீதி சந்தி, 17 ஆம் திகதி காலை 9 மணிக்கு மருதடி லேன் வைரவர் கோவிலடி, முற்பகல் 11 மணிக்கு நல்லூர் தெற்கு சனசமூக கற்பக பிள்ளையார் கோவிலடி, பிற்பகல் 2.30 மணிக்கு றக்கா வீதி இளஞ்சிங்கம் சனசமூக நிலையம், 18 ஆம் திகதி காலை 9 மணிக்கு கோவில் வீதி ஆஸ்பத்திரி வீதி சந்தி, முற்பகல் 11 மணிக்கு குழந்தையேசு ஆலயத்திற்கு முன்பாக கோவில் வீதி, பிற்பகல் 2.30 மணிக்கு மடம் வீதி திருவள்ளுவர் சனசமூக நிலையம், 19 ஆம் திகதி காலை 9 மணிக்கு அருள்மாதா கோவிலடி இராசாவின் தோட்டம், பிற்பகல் 11 மணிக்கு மாட்டீன் வீதி சப்பல் வீதி சந்தி, பிற்பகல் 2.30 மணிக்கு 2ம் குறுக்குத் தெரு வேம்படி வீதி யாழ்ப்பாணம், 20 ஆம் திகதி காலை 9 மணிக்கு O.L.R. தேவாலயம் 4ம் குறுக்குத்தெரு, முற்பகல் 11 மணிக்கு யாழ்.புகையிரத நிலைய வீதி வைரவர் கோவிலடி,பிற்பகல் 2.30 மணிக்கு 2ஆம் ஒழுங்கை பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணம், 23 ஆம் திகதி காலை 9 மணிக்கு கோவில் வீதி ரயில் தண்டவாள சந்தி, முற்பகல் 11 மணிக்கு கோயில் வீதி சோமசுந்தரம் ஒழுங்கை, பிற்பகல் 2.30 மணிக்கு ஆஸ்பத்திரி வீதி கோயில் வீதி சந்தி, 24 ஆம் திகதி காலை 9 மணிக்கு சோமசுந்தரம் வீதி, முற்பகல் 11 மணிக்கு கச்சேரி கிழக்கு வீதி தண்டவாளச் சந்தி, பிற்பகல் 2.30 மணிக்கு பழைய பூங்கா வீதி, 25 ஆம் திகதி காலை 9 மணிக்கு சுவாஸ் லேண், முற்பகல் 11 மணிக்கு சென் ஜோன்ஸ் கல்லூரி முன்புறம், பிற்பகல் 2.30 மணிக்கு கொழும்புத்துறை வீதி விதானையார் வீதி சந்தி, 26 ஆம் திகதி காலை 9 மணிக்கு சந்தனமாதா கோவில் பகுதி, முற்பகல் 11 மணிக்கு கச்சேரி கிழக்கு ஒழுங்கை சென்ஆன்ஸ் வீதி சந்தி, பிற்பகல் 2.30 மணிக்கு கச்சேரி கிழக்கு ஒழுங்கை, 27 ஆம் திகதி காலை 9 மணிக்கு பழைய பூங்கா வீதி ஈச்சமோட்டை வீதி சந்தி, முற்பகல் 11 மணிக்கு குருசோ வீதி கிறின்பீல்ட் வாசிகசாலை, பிற்பகல் 2.30 மணிக்கு மத்தியூஸ் வீதி சென் சாள்ஸ் ஆரம்ப பாடசாலை, 30 ஆம் திகதி காலை 9 மணிக்கு காட்டு கந்தோர் ஒழுங்கை, முற்பகல் 11 மணிக்கு கச்சேரி நல்லூர் வீதி நாவலர் வீதிச் சந்தி, பிற்பகல் 2.30 மணிக்கு பொஸ்கோ குளத்தடி அருகாமை ஆகிய இடங்களில் வழங்கப்படும். (5)

## எழுக தமிழுக்கு ஆதரவுகோரி பொது அமைப்புக்களுடன் சந்திப்பு!



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் எதிர்வரும் 16 ஆம் திகதி நடத்தப்படவுள்ள எழுக தமிழ்-2019 எழுச்சிப் பேரணிக்கு ஆதரவுகோரும் வகையில் தமிழ் மக்கள் பேரவை சார்பில் எழுக தமிழ் ஏற்பாட்டுக்குழுவினர் பொது அமைப்புக்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்களைச் சந்தித்து வருவதன் அடிப்படையில் நேற்று முன்தினம் புதன்கிழமையும் சந்திப்புக்கள் இடம்பெற்றன.

எழுக தமிழ்-2019 இற்கான தமிழ் மக்கள் பேரவையின் உத்தியோகபூர்வ அழைப்புக் கடிதங்களை நேரில் வழங்குவதுடன் ஒன்றுபட்ட மக்கள் திரட்சியாக அணிதிரள வேண்டியதன் அவசியத்தையும் ஒரு மக்கள் இயக்கமாக தமிழ் மக்கள் பேரவையை கட்டியெழுப்புவதன் முக்கியத்துவத்தையும் இச்சந்திப்புகளில் எடுத்துக்கூறப்பட்டு வருகின்றது.

அந்த வகையில்,

❖ வடமராட்சி சிற்றூர்திகள் சேவைச் சங்கம்
❖ முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கம்,மந்திகை
❖ முனை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்
❖ பருத்தித்துறை கொட்டடி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்
❖ மயிலிட்டி கிராமிய அபிவிருத்தி சங்கம்
❖ மூளாய் இந்து இளைஞர் மன்றம் போன்ற அமைப்புகளின் நிர்வாகிகளை நேரில் சந்தித் திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழ் மக்கள் பேரவை தொடர்பிலும் எழுக தமிழ் பேரணி குறித்து எழுக தமிழ் ஏற்பாட்டுக் குழுவினரால் தெளிவாக விளக்கமளிக்கப்பட்டது. (இ-7)

### மேலதிகமாக கள் வைத்திருந்த

## நால்வருக்கு 3 ஆயிரம் ரூபாய் அபராதம்

(கொடிகாமம்)

மேலதிகமாக கள் வைத்திருந்த நான்கு பேருக்கு 3 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி நீதிமன்றத்தில் மதுவரித் திணைக்களத்தால் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

சாவகச்சேரி நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து நான்கு நபர்களுக்கும் 3 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது

இதேவேளை லொறியில் மேலதிகமாக ஆட்களை ஏற்றிச் சென்றமை தொடர்பாக கொடிகாமம் பொலிஸாரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. குறித்த நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 2 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (இ-114)

## கண் மற்றும் காதுக்கான இலவச பரிபூரண பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

நாளை மறுதினம் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 8 மணி வரை பருத்தித்துறை வீ.எம். வீதியில் அமைந்துள்ள "ஞானாலயத்தில்" கண் மற்றும் காதுக்கான இலவச பரிபூரண பரிசோதனை சேவை வட மகாண ஓய்வு நிலை வங்கியாளர் நலன்புரிச் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் "விஷன் கெயர்" நிறுவனத்தால் நடத்தப்படும். (இ-7)

## சட்டவிரோதமாக மணல் ஏற்றியவருக்கு 75 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிப்பு

(கொடிகாமம்)

சட்ட விரோதமாக மணல் ஏற்றிச் சென்ற சாரதிக்கு 75 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. சாவகச்சேரி பொலிஸாரால் சாவகச்சேரி நீதிமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டு குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 75 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. (இ-5-114)

## ஒன்று கூடல்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்த ஒன்று கூடல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் முதியோர் சங்க மண்டபத்தில் நடைபெறும். அனைத்து சிரேஷ்ட பிரஜைகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத்தினர் கேட்டுக் கொண்டனர். (இ-5)

# தற்கொலைதாரிகளின் உள்ளகத்தரவுகள் மீட்பு

## எப்.பி.ஐ. நீதிமன்றில் அறிக்கை

(கொழும்பு)

தற்கொலைக் குண்டுதாரிகளால் பயன்படுத்தப்பட்ட ஐந்து தொலைபேசிகளின் உள்ளகத் தரவுகள் அமெரிக்காவின் எப்.பி.ஐ. புலனாய்வாளர்களால் மீட்கப்பட்டதாக குற்ற விசாரணைத் திணைக்களம் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்தது.

கொழும்பு பிரதம நீதவான் லங்கா ஜெயரத்னவிடம் நேற்று முன்தினம் குற்ற விசாரணைத் திணைக்கள அதிகாரிகள் சமர்ப்பித்த பி அறிக்கையில் இந்தத் தகவல் இடம்பெற்து.

குண்டுதாரிகளால் பயன்படுத்தப்பட்ட ஐந்து தொலைபேசிகள் அமெரிக்காவுக்கு பரிசோதனைக்காக அனுப்பப்பட்டு, எப்.பி.ஐ. அதிகாரிகளால் அவற்றின் உள்ளகத் தரவுகள் மீட்கப்பட்டன.

இதுபோன்ற விசாரணைகளை நடத்துவதற்கு புலனாய்வு முகவர் அமைப்புக்களிடம் போதிய வசதிகள் இல்லாததால், மேலதிக விசாரணைகளுக்காக தொலைபேசிகள் எப்.பி.ஐ. யிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பாக இலங்கை முகவர் அமைப்புகள் மேற்கொள்ளும் விசாரணைகளுக்கு, எப்.பி.ஐ. மற்றும் இன்னொரு அமெரிக்க புலனாய்வு மற்றும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் முகவரக அதிகாரிகளும், உதவி வருகின்றனர்.

எப்.பி.ஐ. அதிகாரிகள் வெடிபொருட்கள், கைரேகை ஆய்வு, மரபணு ஆய்வு, தொலைபேசி ஆய்வுகள் போன்ற விசாரணைகளில் நிபுணத்துவ உதவிகளை வழங்கி வருகின்றனர்.

தாம் மேற்கொண்ட விசாரணைகள் தொடர்பாக சாட்சியம் அளிப்பதற்கும் எப்.பி.ஐ. அதிகாரிகள் விருப்பம் வெளியிட்டனர்." என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டது. (இ-7)

# "சு.கவை அழித்த மைத்திரி"

# பதவியிலிருந்து நீக்கிய பின்னர் அங்கு அமர்ந்திருக்க முடியுமா?

## பௌசி கேள்வி

(கொழும்பு)

கட்சியை விட்டு விலகிச் சென்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 5 பேருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகளை நடத்தத் தீர்மானித்துள்ளதாக அந்தக் கட்சி நேற்றுமுன்தினம் அறிவித்தது.

இந்த ஒழுக்காற்று விசாரணைகளில் கலந்து கொள்வில்லை என்றால், அவர்களின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பறிப்பது குறித்து கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கவனம் செலுத்தியுள்ளதாகவும் தெரியவருகிறது.

எஸ்.பி.திஸாநாயக்க, டிலான் பெரேரா, லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன, விஜித் விஜயமுனி சொய்சா, ஏ.எச்.எம்.பௌசி ஆகிய 5 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படவுள்ளமை தொடர்பான கடிதங்களை அவர்களுக்கு அனுப்பியுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார்.

இந் நிலையில், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அழிந்து போனமைக்கான பொறுப்பை கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முழுமையாக ஏற்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். பௌசி தெரிவித்தார்.

எங்கள் 5 பேருக்கு ஒழுக்காற்று விசாரணைகளை நடத்துவதற்கு முன், கட்சியின் தலைவர் மற்றும் செயலாளருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படுவது தொடர்பான அறிவிப்பு தனக்கு இன்னும் கிடைக்கவில்லை எனவும் பௌசி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், "உண்மையில் நான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து சற்று ஒதுங்கி இருக்கின்றேன். நான் மத்திய கொழும்பு அமைப்பாளர்.

அந்தப் பதவியிலிருந்து என்னை நீக்கினர். நான் சிரேஷ்ட உப தலைவர். நிமால் சிறிபால டி சில்வா சிரேஷ்ட உப தலைவர் கிடையாது.

இப்படி பதவியில் இருந்து நீக்கிய பின்னர் அங்கு அமர்ந்திருக்க முடியுமா? என பௌசி கேள்வியெழுப்பினார்.

எது எப்படி இருந்த போதிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மகிந்த ராஜபக்ஷ உட்பட 50 இற்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தக் கட்சியிலிருந்து விலகி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இணைந்து கொண்டனர்.

இவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படாமை குறித்து கட்சியின் மேல் மட்டத்தின் மீது தொடர்ந்தும் குற்றம் சுமத்தப்பட்டு வருவதாகவும், இது சம்பந்தமாகவும் தீவிரமாக கவனம் செலுத்தி வருவதாகவும் தெரியவருகிறது. (இ-7)


# பெறுகை அறிவித்தல்

## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் (PSDG) 2019, மாந்தை கிழக்கு பிரதேச சபை, பாண்டியன்குளம்

1. தலைவர், பெறுகைக்குழு, மாந்தை கிழக்கு பிரதேச சபை அவர்கள் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோருகின்றார்.

2. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 2019.05.08 ஆம் திகதிய 04/2016 (II) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் பிராந்திய முன்னுரிமை, CIDA தரமுன்னுரிமை என்பன கருத்தில் கொள்ளப்படும்.

3. கேள்விபெறத் தகுதியுடைவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி வேலைத்திட்டங்களுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாணதொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

4. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர் பெறுகைக் குழு, மாந்தை கிழக்கு பிரதேச சபை, பாண்டியன் குளம் தொலைபேசி - 021 228 3475, தொலைநகல் - 021 228 3476, மின்னஞ்சல்: manthaieastps@yahoo.com இல் இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ளலாம், அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் 2019.09.06 ஆம் திகதியிலிருந்து 2019.09.20 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணிமுதல் 14.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவ்ணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பெறுகைக்குழு, மாந்தைகிழக்கு பிரதேசசபை, பாண்டியன்குளம் இடமிருந்து 2019.09.06 ஆம் திகதியிலிருந்து 2019.09.20 ஆம் திகதி வரை மு.ப 9.00 மணிக்கும் 14.00 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000/- (வரிநீங்கலாக) செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

7. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், பெறுகைக் குழு, மாந்தை கிழக்கு பிரதேச சபை பாண்டியன்குளம், நாட்டாங்கண்டல் எனும் முகவரிக்கு 2019.09.20 ஆம் திகதி பிற்பகல் 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

8. கீழ் காட்டப்படும் கேள்விகள் கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 63 (அறுபத்தி மூன்று 22.11.2019) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.

9. கேள்வி பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

கேள்வி அறிவித்தல் அட்டவணை


| கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை மில்லியனில் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை வைப்பு(ரூபா) | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/44(2)/2/4(3)/2019 | சிராட்டிகுளம் பிரதான வீதி புனரமைப்பு | 2.13 | 2 மாதம் | C8 and C7 வீதி | 22.000.00 | 20.12.2019 |

10. கேள்வி கோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் 2019.09.12 ஆம் திகதி பி.ப 14.30 மணிக்கு மாந்தை கிழக்கு பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளமுடியும்.

**தலைவர், பெறுகைக்குழு,**
**மாந்தை கிழக்கு பிரதேச சபை,**
**பாண்டியன்குளம்.**

(C-7512)


# பட்டங்கள் வழங்கிக் கௌரவிப்பு



(யாழ்ப்பாணம்)

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சர்வதேச சமாதான சபையின் அனுசரணையுடன் தேசிய சங்கம் இராசையா வில்லவராஜாவுக்கு "கீர்த்தி ஸ்ரீ தேச சக்தி", "சமாஜசேவா விபூஷணம்" எனும் பட்டங்களை வழங்கிக் கௌரவித்தது. இவர் அதி சிறந்த சிரேஷ்ட வங்கியாளருக்கான வாழ்நாள் விருது பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-2)


பழைமை வாய்ந்த

# ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற
- பில்லி சூனியங்கள் அகற்ற வேண்டுமா?

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களுக்கும் மூன்று பொழுதில் பலன்

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

(089)

**ரெங்கசாமி**
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153, 076 841 1848

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

# சுட்டும் முகநூல் 19

**Mohammed Ajmeer Bathusha**
19 hrs ·

உண்மையிலேயே நம் நாட்டுக்கு வந்த கேடுதான் என்ன?
இவ்வளவு கேவலமான ஒரு அரசாங்கம் நம்மை நிர்வகிக்கிறது என்பதை நினைத்தாலே அசிங்கமாக இருக்கிறது.
இந்தக் கேவலமான செயல் ஒட்டுமொத்த நாட்டுக் குடிமக்களையும் அவமானப்படுத்தும் செயலாகவே நான் பார்க்கிறேன்.
எங்கு கொட்டினாலும் எவனும் கேட்கப் போவதில்லை தானே... என்ற எண்ணத்தில் தாழ்த்தப்படுபவன் ஒவ்வொரு இலங்கையனும் தான் .




**Shanmugalingam Senthuran**
1 September at 13:49 ·

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில காலநீடிப்புப் பெற்று கொடுத்தவர்கள் இன்று காணாமல் ஆக்கப்பட்டோருக்கான ஊர்வலத்தில் பங்குபற்றுவதால் எந்தப் பயனும் இல்லை. காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் நீங்கள் ஆதரவளித்து காப்பாற்றிய அரசுடன் பேசி தீர்வைப் பெற்றுப் கொடுத்திருக்கவேண்டும். என்ன நடிப்படா சாமி




**அ.ஈழம் சேகுவேரா**
1 September at 23:41 ·

"காப்பெற்" றோட்டு கேட்டா, உன் அண்ணனும் - அக்காளும் கரும்புலி ஆனார்கள்? - சிந்தியுங்கள் இளைய தலைமுறையே!
என்று போஸ்டர் அச்சிட்டு மக்களை உசுப்பேற்றி வாக்கு கேட்டவர்கள் இன்றோ ரணிலின் "கம்பரெலிய" இலஞ்சப்பணத்தில் அதே "காப்பெற்" றோட்டுப் போடும் கூத்துகள் தான் பாரும்.



அன்பு வாசகர்களே! **சுட்டும் முகநூல்** என்ற புதியதொரு களம் உங்கள் கருத்துக்களைத் தாங்கி வெளிவருகிறது. முகநூல்களில் நீங்கள் இரசித்து பார்த்த அல்லது உங்கள் முகநூல் பக்கத்தில் நீங்கள் முன்வைத்த ஆழமான-யதார்த்தமான கருத்துக்கள் இவ்விடத்தில் பதிவிடப்படும். இதற்கு உதவியாக முகநூலில் வெளிவரும் அறிவார்ந்த கருத்துக்களை www.facebook.com/valampurii எனும் தளத்தில் உள்பெட்டி (Messenger) ஊடாக அனுப்பி வைக்கலாம்.

# கோத்தாவிற்கு எதிரான வழக்கை நிறுத்தினால் ஊடகங்களுக்கும் பொது நலனிற்கும் ஆபத்து

## அமெரிக்காவில் லசந்தவின் மகள் மனு

(கலிபோர்னியா)

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் தனக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை தடுத்து நிறுத்துவதற்கான கோத்தபாய ராஜபக்ஷவின் முயற்சிகளுக்கு எதிராக லசந்த விக்கிரமதுங்கவின் மகள் அகிம்சா விக்கிரமதுங்க மனுத்தாக்கல் செய்தார்.



இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் முடிவடையும் வரை தனக்கு எதிரான நீதிமன்ற நடவடிக்கைகளை ஒத்திவைக்குமாறு கடந்த வாரம் கோத்தபாய ராஜபக்ஷ கலிபோர்னியா நீதிமன்றத்தில் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

தேர்தல் பிரசாரத்தின் போது நீதிமன்றத்தின் நடவடிக்கைகள் திரிபுபடுத்தப்படலாம்,பரப்புரை செய்யப்படலாம் ஊதிப்பெருப்பிக்கப்படலாம் என கோத்தபாய ராஜபக்ஷவின் சட்டத்தரணிகள் மனுவில் தெரிவித்திருந்தனர்.

இலங்கைத் தேர்தலில் அமெரிக்க நீதிமன்றம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தலாம்,முடிவுகளை தீர்மானிக்கலாம் எனவும் அவர்கள் தங்கள் மனுவில் குறிப்பிட்டிருந்தனர்.

கோத்தபாய ராஜபக்ஷ தேர்தலில் வெற்றிபெறுவார். அவர் வெற்றிபெற்றால் வெளிநாட்டு தலைவர் ஒருவருக்கு விசாரணைகளில் இருந்து விடுப்புரிமை அளிப்பது என்ற அடிப்படையில் இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டியிருக்கும் எனவும் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

கோத்தபாய ராஜபக்ஷவின் இந்த மனுவிற்கு எதிராகவே அகிம்சா விக்கிரமதுங்க மனுத் தாக்கல் செய்தார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, இன்னமும் பல சவால்களை எதிர் கொள்கின்றார் என அகிம்சா விக்கிரமதுங்க இந்த மனுவில் சுட்டிக் காட்டினார்.

கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதித்தேர்தல் வேட்பாளராக இன்னமும் உத்தியோகபூர்வமாக மனுத் தாக்கல் செய்யவில்லை.

அவர் அமெரிக்கப் பிரஜை என்பது இன்னமும் பிரச்சினைக்குரிய விடயமாக உள்ளது, மேலும் தேர்தல் ஆணையகத்திடம் அவருக்கு எதிராக பல முறைப்பாடுகள் உள்ளன என அகிம்சா தனது மனுவில் குறிப்பிட்டார்.

கோத்தபாய ராஜபக்ஷவின் வழக்கை கைவிடுவது பொதுநலனிற்கு ஆபத்தை ஏற்படுத்தலாம், என தெரிவித்துள்ள அகிம்சா விக்கிரமதுங்க சுதந்திர ஊடகங்களுக்கும் இது பாதிப்பை ஏற்படுத்தலாம் எனவும் குறிப்பிட்டார்.


இவற்றைப் பாதுகாப்பதே எங்கள் வழக்கின் நோக்கம். கோத்தபாய ராஜபக்ஷ சுதந்திர ஊடகங்களுக்கும் பொதுநலன்களுக்கும் எதிராக பரந்துபட்ட சதியை முன்னெடுத்து தாக்குதலை மேற்கொண்டுள்ளார் எனவும் அவர் தனது மனுவில் குறிப்பிட்டார்.

இலங்கையிலும் கோத்தபாய ராஜபக்ஷ குற்றவியல் குற்றச்சாட்டுக்களை எதிர்கொள்கின்றார் என தனது மனுவில் சுட்டிக்காட்டிய அகிம்சா விக்கிரமதுங்க அவர் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார் என்பதற்காக இலங்கை நீதிமன்றங்கள் தங்கள் வழக்குகளை கைவிடவில்லை எனவும் சுட்டிக்காட்டினார். (இ-7)

# சஜின் வாஸ் குணவர்த்தனவிற்கு எதிராகக் குற்றப்பத்திரம் தாக்கல்

(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தனவுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.



சட்ட விரோத பணப் பரிமாற்றம் தொடர்பிலேயே முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தனவுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. (இ-7)

# மஹோற்சவம் ஆரம்பம்


(யாழ்ப்பாணம்)

ஈவினை மத்தி ஸ்ரீ கற்பக விநாயகர் திருக்கோவில் வருடாந்த மஹோற்சவப் பெருவிழா கடந்த 3 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

இதில் எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் தேர்த்திருவிழாவும் மறுநாள் 13 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (இ)

# பயங்கரவாதிகளை நாங்கள் ஒருபோதும் பாதுகாக்கவில்லை

## ஆசு மாரசிங்க மறுப்பு



(கொழும்பு)

**பயங்கரவாதிகளைப் பாதுகாக்க நாங்கள் ஒருபோதும் முயற்சிக்கவில்லை. யாரிடமிருந்தும் பணம்பெறவும் இல்லை. அவ்வாறு பெற்றுக்கொண்டதை நிரூபித்தால் பதவி விலகவும் தயாராக இருக்கின்றேன். அத்துடன் நீர்கொழும்பு மக்களுக்குப் போதைப் பொருளை விநியோகித்தவர் போதையுடனே பாராளுமன்றத்துக்கும் வந்திருக்கின்றார் என ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்றுமதியாளர்களை பதிவுசெய்வதற்கான ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் பாராளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பில் எதிர்க்கட்சி உறுப்பினர் நிமால் லான்ஸா பொய்க் குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்தார்.


பயங்கரவாதிகளை பாதுகாக்கவும் அதற்காகப் பணம் பெற்றுக் கொள்வதாகவும் தெரிவித்தார். அதேபோன்று மிகவும் மோசமான வார்த்தைப் பிரயோகங்களை இந்தச் சபையில் தெரிவித்தார்.

நிமால் லான்ஸா எம்.பி. தெரிவித்த மோசமான வார்த்தைப் பிரயோகத்தை ஹன்சாட்டில் இருந்து நீக்குமாறு தெரிவித்த போது, அவர் கோபப்பட்டு என்னைக் கொலை செய்வதற்கு குண்டைக் கட்டிக்கொண்டு பாய்வதாக தெரிவித்தார்.

அவரின் இந்தச் செயற்பாடு மிகவும் பயங்கரமானதாகும். பாராளுமன்றத்தில் முறையாகச் செயற்படத் தெரியாதவர்களைப் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்து அனுப்பவேண்டாம் என்றே நாங்கள் மக்களைக் கேட்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஏற்றுமதி வருமானத்தை 28 பில்லியன் டொலராக அதிகரிப்பதே இலக்கு

## அமைச்சர் மலிக் தெரிவிப்பு



(கொழும்பு)

2025 ஆம் ஆண்டாகும் போது ஏற்றுமதி வருமானத்தை 28 பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரிப்பதே எமது இலக்காகும். அதற்காக ஏற்றுமதிப் பொருட்களை அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம் என அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்ரம தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்றுமதியாளர்களை பதிவுசெய்வதற்கான ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தை ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உலகப் பொருளாதாரம் இன்று பாதிக்கப்பட்டிருக்கின்றது. அமெரிக்க, சீன வர்த்தக யுத்தம் காரணமாக உலகப் பொருளாதாரத்துக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இருந்தபோதும் எமது ஏற்றுமதியாளர்களுக்கு சிறந்த இலாபத்தை பெற்றுக்கொடுக்க முடியுமாக இருக்கின்றது. இந்த வருடத்தின் கடந்த 7 மாதங்களில் ஏற்றுமதி வருமானம் 9.5 டொலர் பில்லியனாக இருக்கின்றது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் காரணமாக ஏற்றுமதி வருமானத்தில் குறைவு ஏற்பட்டிருந்தபோதும் தற்போது அது சரி செய்யப்பட்டிருக்கின்றது.

அதனால் வருட இறுதியில் ஏற்றுமதி வருமானத்தில் 18.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை அடைவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# குண்டுத் தாக்குதல் குற்றவாளிகளை பாதுகாக்கும் அரசாங்கம் -செஹான்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு அன்று நடந்த குண்டுத் தாக்குதல் குற்றவாளிகளை அரசாங்கத்திற்குள் வைத்து பாதுகாக்கும் அரசாங்கம் பாதிக்கப்பட்ட மக்களை கைவிட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க குற்றம் சாட்டினார்.

குறிப்பாக றிசாத் பதியுதீன் முழுமையாக குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுபடுகின்றார். அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் அனைத்தில் இருந்தும் விடுவிக்கப்படுவது நாட்டு மக்கள் எவருக்கும் சகிக்க முடியாத விடயமாகவே மாறியுள்ளது. இந்த அரசாங்கம் பாதிக்கப்பட்ட மக்களை கைவிட்டுவிட்டு குற்றவாளிகளை பாதுகாத்து அவர்களுக்காக துணை நிற்பது மோசமான செயலாகும்.

இன்று ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதி வேட்பாளர் போட்டியில் முட்டி மோதிக்கொண்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் பிரதமர் ரணிலாக இருக்க முடியும், அமைச்சர் சஜித்தாக இருக்க முடியும் அல்லது சபாநாயகர் கருஜெயசூரியவாக கூட இருக்க முடியும். இவர்களில் யாராக இருந்தாலும் பரவாயில்லை. ஆனால் இவர்கள் மூவரிடமும் கேட்கின்றோம். றிசாத் பதியுதீனின் ஒத்துழைப்பை நீங்கள் தேர்தலில் பெறுவீர்களா? என்பதை நாட்டு மக்களிடம் கூறுங்கள். இந்த வாக்குறுதியின் மூலமே இந்த நாட்டு மக்களுக்கு உங்கள் மீதான நம்பிக்கை வரும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# இலங்கை, பிலிப்பைன்ஸ் இராணுவம் இணைந்து செயற்படத் தீர்மானம்

(மணிலா)

பிலிப்பைன்ஸ் மற்றும் இலங்கை இராணுவம் இணைந்து செயற்படவுள்ளதாக மணிலா புல்லட் செய்தி வெளியிட்டது.

பயங்கரவாதத்தை எதிர்த்து போராடும் நோக்கில் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்படடது.

பாதுகாப்புச் சேவை தலைமை அதிகாரி வருண துஷார சம்பத் சிறிமன்னே தலைமையிலான இலங்கையின் குழு பிலிப்பைன்ஸின் இராணுவத் தலைமையகத்திற்கு கல்விப் பயணம் ஒன்றை மேற்கொண்ட நிலையில் இவ்வாறு செய்தி வெளியிடப்பட்டது.

இதேவேளை பயங்கர வாதத்தைத் தோற்கடிக்க இரு நாட்டு இராணுவ அமைப்புக்களின் அனுபவங்கள், அறிவு மற்றும் உத்திகளைப் பரிமாறிக் கொள்வதன் மூலம் இருதரப்பு பயிற்சி மற்றும் இராணுவ இராஜ தந்திரத்தை வளர்ப்பதே இந்த நடவடிக்கையின் நோக்கமாகும் எனவும் பிலிப்பைன்ஸ் இராணுவம் தெரிவித்தது. (இ-7)

# இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட அற்புத கல் பார்வையிட படையெடுக்கும் மக்கள்



(தல்தென)

மீகஹகிவுல தல்தென ஸ்ரீ போதிராஜாராம விகாரைக்கு அருகில் அமைந்துள்ள பதுலு ஓயாவில் இருந்து மிதக்கும் கல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

நீரில் மிதக்கும் இந்த அற்புதக் கல்லை பார்வையிட பிரதேச மக்கள்நேற்றுக் காலை முதல் பெருமளவில் போதிரா ஜாராம விகாரைக்கு படையெடுப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 2 கிலோ கிராம் நிறையுடைய இந்தக் கல் விகாரையின் தேரர்கள் சிலரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அந்தக் கல்லை எடுத்து வந்து விகாரைக்கு அருகில் அமைந்துள்ள குட்டை ஒன்றில் தேரர்கள் போட்டுள்ள நிலையில் அந்தக் கல் மிதக்க ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில், இந்தக் கல் எந்த வகையான கல் என்பது தொடர்பில் சரியாகத் தெரியாத நிலையில், கல் தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டால் அதற்கு முழு ஆதரவையும் வழங்கத்தயாராகவுள்ளதாக விகாரையின் விகாராதிபதி வண. தல்தென தம்மவன்ச தேரர் தெரிவித்தார். (இ-7)

# புதிய கட்டடத்திற்கு அடிக்கல்

(யாழ்ப்பாணம்)

அல்வாய் திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் புதிய கட்டடத்துக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அதிபர் க.ரவீந்திரன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், கௌரவ விருந்தினர்களாக வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி, வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன் ஆகியோர் கலந்து கொள்வர். (5)

# கலைக்குரிசில் விருதுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் வருடாவருடம் வழங்கப்படும் 60 வயதுக்கு மேற்பட்ட தகுதி வாய்ந்த கலைஞர்களுக்குரிய விருதானது இவ்வருடம் முதல் கலைக்குரிசில் விருது எனும் பெயரில் வழங்கப்படவுள்ளது.

இவ் விருதுக்கு விண்ணப்பிப்பதற்கு ஆர்வமுடையவர்கள் தங்கள் பிரதேச கலாசார உத்தியோகத்தரைத் தொடர்பு கொண்டு எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறும் மேலதிக தகவலுக்கு 021 205 4105 எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்பு கொள்ளுமாறும், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் அறிவித்தார். (இ-5)

## திருக்குறள் போட்டி

(கிளிநொச்சி)

பாடசாலை மாணவர்களுக்கு திருக்குறள் கலைத்திறன் தேர்வுப் போட்டிகள் கிளிநொச்சி மாவட்டத் தமிழ் சங்கத்தினால் அடுத்த மாதத்தில் நடத்தப்படவுள்ளது.

இப் போட்டிகளுக்கு விண்ணப்பிப்பதற்கான படிவங்கள் உரிய பாடசாலைகளின் அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

போட்டிகளில் பங்கேற்க விரும்பும் மாணவர்கள் 15.09.2019 ஆம் திகதிக்கு முன்னர் தமது பாடசாலை அதிபர்களிடம் சமர்ப்பிக்குமாறு தமிழ்ச் சங்கத் தலைவர் நா.சோதிநாதன் அறிவித்துள்ளார். (9)


## கிளிநொச்சி,முல்லைத்தீவு மாவட்டங்களில்
# கடலுணவுகளின் விலை சடுதியாக அதிகரிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் அண்மைய நாட்களாக மீன், நண்டு, உள்ளிட்ட கடலுணவுகளின் விலைகள் சடுதியாக அதிகரித்துள்ளன.

அதாவது கிலோ ஒன்று 400 ரூபா முதல் 500 ரூபா வரை சந்தைகளில் விற்பனை செய்யப்பட்ட மீன் வகைகள் தற்போது 700 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றன.

அதேபோல 300 ரூபாவிற்கு குறைவாக விற்பனை செய்யப்பட்ட மீன் வகைகள் தற்போது ஒரு கிலோ 500 ரூபாவிற்கு



விற்பனை செய்யப்படுகின்றன.

தற்போது அதிகளவான குடும்பங்கள் தொழில் வாய்ப்புக்கள் இல்லாத நிலையிலும் வருமான மற்ற நிலையிலும் வாழ்ந்து வரும் நிலையில் இவ்வாறு கடலுணவுகள் அதிகரிப்பால் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனைவிட, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பிடிக்கப்படும் கடல் மீன்கள், கடலுணவுகள், இரணைமடுக்குளம் உள்ளிட்ட குளங்களில் பிடிக்கப்படுகின்ற நன்னீர் மீன்கள் என்பன தென்பகுதிக்கே ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இதனாலே நன்னீர் மீன் வகைகள், கடலுணவுகள் என்பவற்றின் விலைகள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-315)

## தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

வடமாகாண பாடசாலைகளில் கடமையாற்றி வரும் பாதிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள NEC கல்வி நிலையத்தில் இடம் பெறவுள்ளது.

மேலும் மத்திய கல்வி அமைச்சு தொண்டர் ஆசிரியர்களின் விபரங்களை அவசரமாகக் கோரியுள்ளமையால் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமாகாண தொண்டர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது. (9)

## இரணைதீவு மக்களுக்கு படகு வழங்கி வைப்பு

இரணைதீவு மக்களின் போக்குவரத்து தேவையைப்பூர்த்தி செய்யும் வகையில் மக்கள் நலன் காப்பகத்தினரால் படகு ஒன்று நேற்று முன்தினம் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

பல போராட்டங்களின் பின்னர் தமது சொந்த நிலத்தை மீட்ட இரணைதீவு மக்கள் தற்போது எந்தவிதமான அடிப்படை வசதிகளுமின்றி வாழ்ந்து வருகின்றனர். மிக முக்கியமாக தமது போக்குவரத்து தேவையினை நிறைவு செய்வதற்கு படகு ஒன்றினை வழங்குமாறு பல




தரப்புகளிடமும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அந்த நிலையில் மக்கள் நலன காப்பகத்தினரால் புலம்பெயர் உறவுகளின் நிதி உதவியில் 12 இலட்சம் ரூபா பெறுமதியுடைய படகு ஒன்று அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. (9)

## முதியோர்களின் ஆன்மீகப் பயணம்

கரைச்சி பிரதேச செயலர் பிரிவின் கோணாவில் கிராம முதியோர் சங்க உறுப்பினர்கள் 50 பேர் ஆன்மீகப் பயணமாக திருக்கோணமலை மாவட்டத்தின் திருத்தலங்களுக்கு நாளை மறுதினம் அழைத்துச் செல்லப்படவுள்ளனர். வட மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகம் கரைச்சி பிரதேச செயலரின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அமரர்.வே.வேதநாயகத்தின் குடும்பத்தினரின் நிதி உதவியில் திருகோணமலை மாவட்டத்தில் கன்னியா வெந்நீரூற்று, சிறிலட்சுமி நாராயணன் கோவில், திருக்கோணேஸ்வரம் ஆகிய தலங்களுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர். (9-350)

## மாந்தை விநாயகபுரம் கிராமத்தில்
# செயலிழந்துள்ள அரிசியாலையை இயங்கவைக்க கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு விநாயகபுரம் கிராமத்தில் சுமார் 50 மில்லியன் ரூபாவிற்கும் மேற்பட்ட நிதியில் நிர்மாணிக்கப்பட்டு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ள அரிசியாலை செயலிழந்த நிலையில் காணப்படுகின்றது.

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள விநாயகபுரம் பகுதியில் யுத்தம் காரணமாக சேதமடைந்து காணப்பட்ட அரிசியாலையை மீள்குடியமர்வின் பின்னரான அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் சுமார் 50 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு பனங்காமம்பற்று பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளபோதும் கடந்த ஆறு ஆண்டுகளாக குறித்த அரிசியாலையை இயங்க வைக்கப்படாது செயலிழந்து காணப்படுகின்றது.

யுத்த காலத்தில் அதிக வருமானத்தை கொண்டதும் மக்களுக்கான சேவைகளை வழங்கியதுமான மேற்படி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் இன்று சாதாரணமான ஒரு கிளை நிலையத்தைக்கூட செயற்படுத்த முடியாத நிலையில் உள்ளதாகவும் குறித்த அரிசியாலையை வேறு நிறுவனங்கள் அல்லது தனியாரிடம் குத்தகை அடிப்படையில் ஒப்படைத்து அதனை இயங்க வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பிரதேச மக்கள் கோரியுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சொந்தமான 5 வரையான அரிசியாலைகள் இவ்வாறு காணப்படுவதாகவும் இவ்வாறான அரிசியாலைகள் ஒவ்வொன்றையும் இயங்க வைப்பதற்கு 20 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுகின்றது.

இவற்றை இயங்க வைப்பதற்கு தற்போது நட வடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மாவட்ட கூட்டுறவு திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-315)

# கால்நடைகள் நீர் தேடி அலையும் அவலம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவும் கடும் வரட்சி காரணமாக வன்னிவிளாங்குளம் நீர் வற்றி வறண்டதால் கால்நடைகள் நீர் தேடி அலைவதுடன் குடிநீர் நெருக்கடி காணப்படுவதாகவும் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள பாரிய குளங்களில் ஒன்றான வன்னிவிளாங்குளம் தற்போது நிலவும் கடும் வரட்சி காரணமாக நீர் இன்றி வரண்டு காணப்படுகின்றது.மேற்படி குளத்தின் கீழ் இவ்வாண்டு சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட போதும் வரட்சி காரணமாக நாற்பது வீதமான செய்கைகள் பாதிக்கப்பட்டதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

தற்போது குளத்தின் நீர் முழுமையாகவே வற்றியுள்ள நிலையில் இப்பிரதேசத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் குடிநீர் இன்றி அலைந்து திரிவதாகவும் குறிப்பிட்ட சில பண்ணையாளர்கள் தமது கால்நடைகளுக்கான குடிநீர் வசதிகளை வீடுகளில் ஏற்படுத்தினாலும் கடும் வரட்சி காரணமாக கிணறுகளில் நீர் வற்றிச் சென்றுள்ளதாகவும், தெரிவித்தனர்.

இதேவேளை வரட்சி நிலை தொடர்ந்து நீடிப்பதனால் தொழில் வாய்ப்பின்மை, குடிநீர்த் தேவை என்பன அதிகரித்துச்செல்வதாகவும் பாதிக்கப்பட்ட மேற்படி குளத்தின் கீழான விவசாயிகளும் பொதுமக்களும் தெரிவித்துள்ளனர். (9-315)




## கிராமியக் கல்வி அபிவிருத்திக்கான
# விழிப்புணர்வுச் செயற்றிட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்தில் முன்னெடுக்கப்படவுள் கிராமிய கல்வி அபிவிருத்திக்கான விழிப்புணர்வுச் செயற்றிட்டம் தொடர்பான முக்கிய கலந்துரையடால் கண்டாவளை பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் க.பொ.த.சாதாரண கல்வி அடைவு மட்டத்தினை அதிகரிப்பதனை நோக்கமாகக் கொண்டு கிளிநொச்சி கல்வி அபிவிருத்தி அமையத்தினால் பரீட்சார்த்தமாக முன்னெடுக்கவுள்ள கிராமிய கல்வி அபிவிருத்திக்கான விழிப்புணர்வுச் செயற்றிட்டம் கண்டாவளை கல்விக் கோட்டத்திலுள்ள பத்து பாடசாலைகளை மையப்படுத்தியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இச் செயற்றிட்டம் கிளிநொச்சி கல்வி வலயம், கண்டாவளை பிரதேச செயலகம் மற்றும் கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை என்பவற்றின் பங்களிப்புடன் முன்னெடுக்கப்படவுள்ளது.

இச் செயற்றிட்டத்தில் பாடசாலை கட்டாயக் கல்விக் குழு, பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் பழைய மாணவர் சங்க உறுப்பினர்களுக்கும் பாடசாலை மாணவகளின் பெற்றோர் களுக்கும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் கல்வி தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தி மாணவர்களின் கல்வி தடைப்படுவதற்கான காரணங்களை கண்டறிந்து தீர்வுகள் தொடர்பாகவும் கவனம் செலுத்துவதுடன் பாடசாலைக்கு பிள்ளைகள் ஒழுங்காகவும் நேரகாலத்துடனும் செல்லல், மாணவர் இடைவிலகலை நிறுத்தல், வீடுகளில் பிள்ளைகள் சுய கற்றலுக்கான சூழலை பெற்றோர்கள் ஏற்படுத்திக் கொடுத்தல், பிள்ளைகளின் சுய கற்றலுக்கு பெற்றோரின் பங்களிப்பு வழங்கல் போன்றவற்றினை நோக்கங்களாகக் கொண்டு இவ் விழிப்புணர்வு செயற்றிட்டம் நடைபெறவுள்ளது.:

கண்டாவளை பிரதேச செயலர் ரீ.பிருந்தாகரன் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தின் பிரதி கல்விப் பணிப்பாளர் டீ.வாசுதேவன், கிளிநொச்சி கல்வி அபிவிருத்தி அமையத்தின் தலைவர் மருத்துவர் மு.சிறீதர் மற்றும் ஆசிரிய ஆலோசகர் தி.சிவரூபன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினார்கள். இக் கலந்தரையாடலில் கண்டாவளை பிரதேச கிராம உத்தியோகத்தர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், வாழ்வின் எழுச்சி அலுவலர்கள், கல்வி அபிவிருத்தி அமைய உறுப்பினர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்கள் கலந்து கொண்டனர். (9-315)

## விழிப்புணர்வு செயலமர்வு



(மன்னார்)

தேசிய ரீதியில் நடைமுறையில் உள்ள தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயலமர்வு தேசோதய அமைப்பின் ஏற்பாட்டில் மன்னார் சர்வோதய பொது மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள ஐந்து பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கிய பெண்கள், இளையோர், யுவதிகள், பிரதேச, நகரசபை உறுப்பினர்களை உள்ளடக்கி குறித்த தகவல் அறியும் உரிமைச் சட்டம் மற்றும் அது தொடர்பான நடைமுறை, ஆலோசனைகள், செயன்முறை, பயிற்சிகள் வழங்கப்பட்டன.

குறித்த செயலமர்வில் விரிவுரையாளராக சமூக செயற்பாட்டாளர் வினோதினி பாலசுப்பிரமணியம், சர்வோதய இயக்கத்தின் வடக்கு-கிழக்கு இணைப்பாளர் M.M.அன்வர் மற்றும் சக இணைப்பாளார் D.பெரமுன ஆராச்சி ஆகியோர் கலந்து கொண்டனர். (9-285)


# வீட்டுத்திட்டத்துக்கான நிதியை விடுவிப்பதில் தேசிய வீடமைப்பு அதிகார சபை அசமந்தம்

## நடுத்தெருவில் விடப்பட்டுள்ள பயனாளிகள்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் முன்னெடுக்கப்பட்டு வரும் வீட்டுத் திட்டங்களுக்கான நிதி பயனாளிகளுக்கு வழங்கப்படாமையால் அதிகமான வீட்டுத் திட்ட பயனாளிகள் மன்னார் தேசிய வீடமைப்பு அதிகார சபை அலுவலகத்துக்கு படையெடுத்த வண்ணம் இருப்பதுடன் பணத்தை பெற்றுக் கொள்ளாது ஏமாற்றத்துடன் திரும்புவதாக பாதிப்படைந்தோர் கவலை தெரிவிக்கின்றனர்.





மன்னார் மாவட்டத்தில் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் மன்னார், நானாட்டான், முசலி மற்றும் மாந்தை மேற்கு ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் 3285 வீடுகள் அமைக்கும் பணி இடம்பெற்று வருகிறது. பயனாளிகள் தங்களுக்கு வழங்கப்பட்ட வீடுகளுக்கான கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளும்போது தேசிய வீடமைப்பு அதிகார சபை குறிப்பிடப்பட்ட வீட்டின் ஒவ்வொரு கட்டுமானத்துக்கும் பகுதி பகுதியாக நிதியினை பயனாளிகளுக்கு வழங்கப்படும் என்ற நிபந்தனை அடிப்படையில் இவ் வீடமைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆனால் மிகவும் வறுமைக் கோட்டுக்குள் வாழும் பெரும்பாலான பயனாளிகள் கடன்பட்டு குறிப்பிட்ட மட்டம் வரைக்கும் கட்டடங்களை அமைத்த பின்னரும் தேசிய வீடமைப்பு அதிகார சபை குறிப்பிட்ட நிதியை விடுவிக்காமையால் வழங்கப்பட்ட தங்கள் வீடுகளை பூர்த்தி செய்ய முடியாது தவிப்பதுடன் கட்டம் கட்டமாக விடுவிப்பதாக தெரிவித்த நிதியையும் விடுவிக்காததால் பெரும் சிரமங்களை பயனாளிகள் எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கின்றனர்.

அத்துடன் வருகின்ற மாதங்களில் மழை காலம் என்பதால் அரைகுறை பூர்த்தி செய்யப்பட்ட வீடுகளில் இருந்து மழையை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் புதிய வீடு அமைப்பதற்காக பலவருடங்கள் வாழ்ந்த குடிசை வீடுகளையும் தற்போது அகற்றி உள்ளதாகவும் தற்போது பழைய வீடும் இல்லாமல் புதிய வீடும் பூரணப்படுத்தப்படாத நிலையில் அல்லாடுவதாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த இரண்டு வருடங்களாக முன்னெடுக்கப்பட்ட இவ் வீட்டுத் திட்டங்களுக்கு தலா 5 இலட்சம் ரூபா மானியமாக கட்டம் கட்டமாக வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அத்துடன் நடப்பு வருடமாகிய 2019 ஆம் ஆண்டு மன்னார் பிரதேச செயலகப் பிரிவில் 55 மாதிரிக்கிராமங்களில் 1536 வீடுகளும் நானாட்டான் பிரிவில் 10 மாதிரிக் கிராமங்களில் 216 வீடுகளும், முசலி பிரிவில் 5 மாதிரிக் கிராமங்களில் 103 வீடுகளும் மாந்தை மேற்கு பிரிவில் 11 மாதிரிக்கிராமங்களில் 258 வீடுகளும் மொத்தம் 81 மாதிரிக் கிராமங்களில் 2113 வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

இவ் வீட்டுத்திட்டங்களுக்கு தலா 7 1/2 இலட்சம் ரூபா கட்டம் கட்டமாக வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மன்னார் மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் 139 மாதிரிக்கிராமங்களிலும் 3285 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

எனவே எதிர்வரும் நாட்களில் மழைகாலம் ஆரம்பமாக இருப்பதனாலும் ஆரம்ப கட்ட வீட்டு கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள நுண்நிதி நிறுவனங்களிடம் வாங்கிய கடன் தொகை அதிகரித்துச் செல்வதாலும் எமது கஷ்டத்தினை உணர்ந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அமைச்சர்கள் உடனடியாக குறித்த நிதியினை விடுவித்து வழங்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-285)




# அமதிபுரத்தில் குடிநீர்த்திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு வேண்டுகோள்

(அக்கராயன்)

முல்லைத்தீவு அமதிபுரம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் மேலுமொரு குடிநீர்த் திட்டத்தினை நடைமுறைப்படுத்துமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

2011 ஆம் ஆண்டின் பின்னர் துணுக்காய் பிரதேச சபையினால் அமதிபுரம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் குடிநீர்த் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதன்மூலம் அறுபது வரையான குடும்பங்களே பயன்பெறும் நிலையில் மேலுமொரு குடிநீர்த் திட்டத்தினை அமதிபுரத்தின் ஆரோக்கியபுரத்தில் நடைமுறைப்படுத்துவதன் மூலம் மேலும் எழுபது வரையான குடும்பங்கள் பயன் பெறும் எனவும் திட்டங்கள் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் வரையப்பட்டுள்ள போதிலும் இதுவரை குடிநீர்த் திட்டம் நடைமுறைப்படுத்தப்படாததன் காரணமாக அமதிபுரத்தின் ஆரோக்கியபுரம் கிராமத்தின் எழுபது வரையான குடும்பங்கள் குடிநீர் நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர்.

அமதிபுரம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் 125 வரையான குடும்பங்கள் வாழ்கின்றன. அடிப்படை வசதிகள் இக்கிராமத்தில் இல்லை.

இருபத்தைந்து கிலோ மீற்றர் தூரத்திலுள்ள துணுக்காய் பிரதேச செயலகத்திற்குச் செல்வதற்குக் கூட பேருந்து சேவைகள் கடந்த 10 ஆண்டுகளாக இடம் பெறவில்லை. குடிநீர் நெருக்கடி, போக்குவரத்து நெருக்கடி என்பன இக் கிராமத்தில் முக்கிய பிரச்சினையாகக்காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (9-350)

# 147 மாணவர்களுக்கு காலணிகள் வழங்கி வைப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட கரிப்பட்டமுறிப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்கள் 147 பேருக்கு 64 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் தொழிலதிபர் ஒருவருடைய நிதிப்பங்களிப்பின் கீழ் காலணிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.



பாடசாலை முதல்வர் என்.சர்வேஸ்வரநாதன் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த நிகழ்வில் 64 ஆவது படைப்பிரிவின் இராணுவப் பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் கீர்த்தி கொஸ்தா மற்றும் 643 ஆவது படைப்பிரிவின் படைத்தளபதி உள்ளிட்ட பல்வேறு அதிகாரிகள் கலந்துகொண்டு மாணவர்களுக்கான காலணிகளை வழங்கி வைத்தனர். (9-281)

# பொலிஸாரின் இடையூறுகளுக்கு மத்தியில் வெடுக்குநாறி ஆலயத்தில் பொங்கல் விழா





(குருமன்காடு)

வவுனியா நெடுங்கேணியில் அமைந்துள்ள வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

பெரும் சர்ச்சைகள் நிறைந்த வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் இம்முறை பொங்கல் விழா நேற்று முன்தினம் ஆரம்பமாகி பத்து நாட்கள் திருவிழா இடம்பெற்று 13 ஆம் திகதி பௌர்ணமி அன்று நிறைவு பெறவுள்ளது.

ஆலயத்தின் பிரதான பூசகர் மதிமுகராசா தலைமையில் பொங்கல் நிகழ்வுகள் இடம் பெற்றதுடன் அன்னதானமும் இடம்பெற்றது.


வழமைபோன்று நெடுங்கேணி பொலிஸார் ஆலயத்தின் திருவிழாவின் போது பல்வேறு தடைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில் ஒலிபெருக்கி பாவனை தடை செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை ஆலயத்திற்கு செல்லும் வீதி செப்பனிடவும் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் ஆலயம் அமைந்துள்ள பகுதியில் கழிவுப்பொருட்களை எரிப்பதற்கும் தடை விதிக்கப்பட்டது. தேவையின் பொருட்டு மரங்களில் தடிகளை வெட்டவும் அனுமதி அளிக்கப்படவில்லை எனவும் ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

இந் நிலையில் குறித்த ஆலயம் அமைந்துள்ள பகுதிக்கு தொல்பொருள் திணைக்களத்தினர் மற்றும் பொலிஸார் பல தடவைகள் வருகை தந்து பொங்கல் நிகழ்வினை பார்வையிட்டுச் சென்றதாகவும் இது அங்கு வருகை தரும் பக்தர்களுக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது எனவும் நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். எனினும் பொங்கல் விழாவினை சிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாடுகள் முழுமையாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் ஆலயத்தின் பூசகர் தெரிவித்தார். (9-250-299)

# சம்மாந்துறைப் பகுதியில் காட்டுயானைகள் தாக்குதல்

## வீடுகள் பலத்த சேதம்





(மன்னார்)

சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்லிரைச்சல் பகுதியில் காட்டு யானைகள் பொது மக்கள் வசிக்கும் பகுதிகளுக்குள் நுழைந்து திடீரென தாக்குதல் நடத்தியுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை இவ்வாறு உள்நுழைந்த யானை கூட்டங்கள் அங்குள்ள சுவர்களை உடைத்தும் வீடுகள், உடைமைகளுக்கு கடும் சேதங்களை ஏற்படுத்தி விட்டுச் சென்றுள்ளன.

மேலும் அங்கு வசிக்கும் ஏ.அமீர் என்ற நபர் மீது யானை தாக்குதலை நடத்தியது. தாக்குதலுக்கு உள்ளான நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதேவேளை சம்மாந்துறை மஸ்ஜிதுல் சலாம் ஜும்மா பள்ளிவாசல் மதிலினையும் சேதப்படுத்தியுள்ளது. இது தொடர்பாக பொதுமக்கள் கருத்துக்களைத் தெரிவிக்கையில், குறிப்பாக யானைகள் அடிக்கடி எங்கள் பிரதேசங்களுக்கு வருகின்றன.

இதனால் எங்களுக்கு அச்ச நிலை காணப்படுகிறது. சொத்துக்களுக்கு சேதங்கள் ஏற்படுகின்றன. இவ் விடயத்தில் உரிய அதிகாரிகள் இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொண்டு எங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் எனக் கோட்டுக்கொண்டனர். (9-285)

# பாரதம்

## பட்டாசுத் தொழிற்சாலையில் வெடிவிபத்து 30 தொழிலாளர்கள் பரிதாபமாக மரணம்

### பஞ்சாப்பில் துயரம்



(பஞ்சாப்)

பஞ்சாப்பின் குருதாஸ்பூரில் உள்ள பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் 30 பேர் உயிரிழந்தனர்.

நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை திடீரென ஏற்பட்ட இந்த வெடி விபத்தில் மேலும் பலர் கட்டட இடிபாடுகளில் சிக்கியுள்ளதுடன் மீட்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

பஞ்சாப் மாநிலம் குருதாஸ்பூர் மாவட்டத்தில் உள்ள படாலா பகுதியில் அமைந்துள்ள இந்த பட்டாசுத் தொழிற்சாலையில் அதிகளவில் பணியாளர்கள் வேலை செய்துகொண்டிருந்த நேரத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

தகவலறிந்து 10 இற்கும் மேற்பட்ட தீயணைப்புத் துறை வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர்.

பலர் படுகாயமடைந்த நிலையில் அவர்கள் அருகிலுள்ள வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர். (ஜ-2)

## நியூசிலாந்

### ஆறு பேர் உ

(வெலிங்டன்)

நியூசிலாந்தில் நேற்று இடம்பெற்ற கோர விபத்தில் ஆறு பேர் உயிரிழந்தனர்.

ரொட்டோருவா நகருக்கு அருகிலுள்ள நெடுஞ்சாலையில் பேருந்து ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்தமை காரணமாகவே இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்துக்குள்ளான பேருந்தில் அதிகளவான சீனர்கள் பயணித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், குறித்த பேருந்து விபத்துக்

## புல்வாமா தாக்குதலுக்கு இந்திய உளவுத்துறையின் குறைபாடுகளே காரணம்

### சி.ஆர்.பி.எப்.அறிக்கையில் சுட்டிக்காட்டு



(காஷ்மீர்)

காஷ்மீர் மாநிலம் புல்வாமாவில் கடந்த பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலில் பலர் உயிரிழந்துள்ளமைக்கு இந்திய உளவுத்துறையினரின் குறைபாடுகளே காரணம் என சி.ஆர்.பி.எப்பின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டது.


குறித்த அறிக்கையில் தாக்குதல்களுக்கு முன்னர் வழக்கமாக கூறப்படும் எச்சரிக்கை மட்டுமே இருந்ததாகவும் கார் மூலம் தற்கொலைப் படைத் தாக்குதல் நடத்தப்படும் என்பது பற்றிய எந்த எச்சரிக்கையும் வழங்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன் காஷ்மீர் பள்ளத்தாக்கு பகுதியில் உள்ள எந்தவொரு உளவுத்துறை அமைப்புகளும் இந்தத் தாக்குதல் தொடர்பான எந்தவித எச்சரிக்கையும் கொடுக்கவில்லை எனவும், அதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கை சரியாக மேற்கொள்ளப்படவில்லை எனவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டது.

ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தின் புல்வாமா பகுதியில் இடம்பெற்ற தாக்குதலில் 44 இற்கும் மேற்பட்ட சி.ஆர்.பி.எப்.வீரர்கள் உயிரிழந்தனர்.

இந்தத் தாக்குதலுக்கு பாகிஸ்தானை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் ஜெய்ஷ் இ முகமது இயக்கம் பொறுப்பேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## மகாத்மா காந்தியின் 150வது பிறந்தநாள்; சிறப்புத் தபால் தலை வெளியிடும் ரஷ்யா



(விளாடிவோஸ்டோக்)

மகாத்மா காந்தியின் 150 ஆவது பிறந்த நாளையொட்டி, அவரது நினைவாக சிறப்பு அஞ்சல் தலையை வெளியிடவுள்ளதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

ரஷ்யாவின் விளாடிவோஸ்டோக் நகரில் கிழக்குப் பொருளாதாரக் கூட்டமைப்பு மாநாடு நேற்று முன்தினம் 4 ஆம் திகதி ஆரம்பமானது. இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், இந்தியப் பிரதமர் மோடியை அழைத்தார். இந்த அழைப்பை ஏற்று மோடி ரஷ்யா சென்றார்.

இந்தச் சந்திப்பில் வர்த்தகம், முதலீடு, எண்ணெய் மற்றும் எரிவாயு, சுரங்கம், அணுசக்தி, பாதுகாப்பு, விமானம், கடல்சார் தொடர்பு, போக்குவரத்துக் கட்டமைப்பு, உயர் தொழில்நுட்பம், மக்களுக்கு இடையிலான தொடர்பு ஆகியவற்றில் ரஷ்யா - இந்தியா ஆகிய இரு நாடுகளின் உறவுகளை மேம்படுத்துவது குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது.

இந்தியப் பிரதமர் மோடி மற்றும் ரஷ்ய ஜனாதிபதி புடின் ஆகியோரின் செய்தியாளர்கள் சந்திப்புக்கு பின்னர், இந்தியாவுக்கான ரஷ்ய தூதர் வெங்கடேஷ் ஷர்மா செய்தியாளர்களை சந்தித்தார்.

இதில் அவர் தெரிவிக்கையில், 'மகாத்மா காந்தியின் 150 ஆவது பிறந்த நாளையொட்டி சிறப்பு அஞ்சல் தலையை வெளியிட ரஷ்ய அரசு முடிவு செய்துள்ளது. இதனை தனது செய்தியாளர் சந்திப்பிலும் ஜனாதிபதி புடின் கூறியுள்ளார். இந்தியாவின் தேச தந்தை மகாத்மா காந்தியின் பிறந்த நாளன்று அவரை கௌரவப்படுத்தும் ரஷ்யாவுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்' என மேலும் தெரிவித்தார். (ஜ-2)

## இந்தியாவிற்குள் ஊடுருவினால் தக்க பதிலடி கொடுக்கப்படும்

### பாகிஸ்தானுக்கு இந்தியா மிரட்டல்

(ஸ்ரீநகர்)

இந்தியாவிற்குள் ஊடுருவினால் பாகிஸ்தான் இராணுவத்திற்கு 1971 ஆம் ஆண்டு இடம்பெற்ற போரை விட சிறந்த பாடம் கற்பிக்கப்படும் என இந்திய இராணுவ அதிகாரி மிரட்டல் விடுத்தார்.

காஷ்மீர் மாநிலம் ஸ்ரீநகரில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர், "பாகிஸ்தான் இராணுவத்தின் எந்த மோசமான நடவடிக்கையோ, பாகிஸ்தான் ஆதரவு பயங்கரவாதிகள் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டைத் தாண்டி ஊடுருவும் முயற்சியோ இதுவரை வெற்றி பெற்றதில்லை.

இந்திய இராணுவம் சார்பில் நான் 'அவர்களுக்கு சொல்லிக் கொள்ள விரும்புவது பாகிஸ்தான் இராணுவத்துக்கு இதுவரை சந்தித்திராத வகையில், 1971 ஆம் ஆண்டு இடம்பெற்ற போரைவிட சிறந்த பாடம் கற்பிக்கப்படும்" எனச் சுட்டிக்காட்டி எச்சரித்தார். (ஜ-2)

### வலுக்கும் வர்

## நான் மீண்டும் ஜ வர்த்தக ஒப்பந்தம்

### சீனாவுக்கு ட்ரம்



(வோஷிங்டன்)

அடுத்த ஆண்டு (2020) நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் ஒருவேளை தான் வெற்றி பெற்று மீண்டும் ஜனாதிபதியானால் சீனாவுடனான வர்த்தக ஒப்பந்தம் மிகவும் கடினமானதாகிவிடும் என ட்ரம்ப், சீனாவுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

உலகின் இரு பெரும் பொருளாதார நாடுகளான அமெரிக்கா-சீனா இடையே

# வெளிநாடு

## ...ந்தில் கோர விபத்து

### ...ர் உயிரிழப்பு

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



...குள்ளான போது அதில் 25 பேர் பயணித்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இதன்போது காயமடைந்தவர்கள் உலங்கு வானூர்திகளின் உதவியுடன்

விபத்து குறித்து வழக்குப் பதிவு செய்துள்ள அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஜ-2)

## பிரிவினைவாதிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடப்போவதில்லை - ஏமன் அரசாங்கம்

(சனா)

பிரிவினைவாதிகளுடன் பேச்சுவார்த்தையில்' ஈடுபடப்போவதில்லை என ஏமன் அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஏமன் துணைப்பிரதமர் அஹமட் அல்-மாய்சாரி இவ்வாறு அறிவித்தார்.

தெற்கு ஏமன் பிரிவினைவாதப் படையினருக்கு ஆதரவளித்து வரும் ஐக்கிய அரபு அமீரகத்துடனேயே இந்த விவகாரம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் சவுதி அரேபியாவின் மேற்பார்வையில் இந்தப் பேச்சுவார்த்தை இடம்பெறும் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், அரசாங்கத்திற்கு எதிராக போராடுமாறு கிளர்ச்சியாளர்களை ஐக்கிய அமீரகம் தூண்டி விடுவதாகவும் குறித்த நடவடிக்கையினை உடனடியாக ஐக்கிய அமீரகம் கைவிட வேண்டும் எனவும் வலியுறுத்தினார். (ஜ-2)

## பாகிஸ்தானில் பொலிஸ்துறைக்கு முதன்முறையாக இந்துப் பெண்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானைச் சேர்ந்த இந்துப் பெண்ணொருவர் முதன்முறையாக பொலிஸ் துணை உதவி ஆய்வாளராக தெரிவு செய்யப்பட்டார்.



இந்து மதத்தைச் சேர்ந்த புஷ்பா கோலி என்ற பெண் சிந்து மாகாண அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய போட்டிப் பரீட்சையில் வெற்றி பெற்று துணை உதவி ஆய்வாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் சிந்து மாகாணத்திலேயே பணியமர்த்தப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ஜ-2)

### ...வர்த்தகப்போர்

## ...ஜனாதிபதியானால் ...தம் கடினமாகிவிடும்

### ...ரம்ப் எச்சரிக்கை

ஒரு ஆண்டுக்கும் மேலாக வர்த்தகப் போர் நீடிக்கிறது.

இருநாடுகளுக்கு இடையே வர்த்தக ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கான பேச்சுவார்த்தை வெற்றியடையாத காரணத்தால், நிலைமை மோசமாகியுள்ளது. அண்மையில், ரூ.7 3/4 இலட்சம் கோடி மதிப்பிலான சீனப் பொருட்களுக்கு அமெரிக்கா 15 சதவீதம் கூடுதல் வரி விதித்தது. இதற்குப் பதிலடியாக சீனாவும் அமெரிக்கப் பொருட்களுக்கு கூடுதல் வரி விதித்து வருகிறது.

இந்த நிலையில் அடுத்த ஆண்டு (2020) நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் ஒரு வேளை தான் வெற்றி பெற்று மீண்டும் ஜனாதிபதியானால் சீனாவுடனான வர்த்தக ஒப்பந்தம் மிகவும் கடினமானதாகிவிடும் என ட்ரம்ப், சீனாவுக்கு எச்சரிக்கை விடுத்தார். (ஜ-2)

### ஆப்கானிஸ்தான் தொடர்பில்

## ஒபாமா செய்த அதே தவறை ட்ரம்பும் செய்ய வேண்டாம்

### அமெரிக்க முன்னாள் தூதரக அதிகாரிகள் அறிவுரை

(வோஷிங்டன்)

ஆப்கானிஸ்தான் விவகாரத்தில் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா செய்த அதே தவறை ட்ரம்பும் செய்ய வேண்டாம் என அமெரிக்க முன்னாள் தூதரக அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டில் இராணுவத்தினருக்கு ஆதரவாக அமெரிக்காவின் இராணுவ படைகள் முகாமிட்டுள்ளன. ஆப்கானிஸ்தானில் தலிபான் பயங்கரவாதிகள் தொடர் தாக்குதல் நடத்தி வருவதால் அமெரிக்கப் படைகள் அங்கு உள்ளன. அமெரிக்கப் படைகளை முற்றிலும் வெளியேற்றுமாறு தலிபான் அமைப்புகள் வலியுறுத்தி வருகின்றன.

இதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. ஏற்கனவே திட்டமிட்டபடி, ஆப்கானிஸ்தானின் 5 இராணுவத் தளங்களில் இருந்து அமெரிக்க இராணுவப் படைகள் வெளியேற முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஆப்கானிஸ்தான் விவகாரத்தில் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா செய்த அதே தவறை ட்ரம்பும் செய்ய வேண்டாம் என ஆப்கானிஸ்தான் பாதுகாப்பு விவகாரங்களில் பணியாற்றிய அமெரிக்க முன்னாள் தூதரக அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக முன்னாள் தூதரக அதிகாரிகள் 9 பேர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "ஆப்கானிஸ்தான் நாட்டை விட்டு அமெரிக்கப் படைகள் வெளியேறும் திகதியை முன்கூட்டியே தெரிவிக்கக்கூடாது. படைகள் வெளியேறும் தினத்தை திரும்பத் திரும்ப முன்கூட்டியே அறிவித்ததே முன்னாள் ஜனாதிபதி ஒபாமா நிர்வாகம் செய்த தவறு ஆகும். அது தலிபான் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்த சாதகமாக அமைந்தது" எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. (ஜ-2)

## ரஷ்யா - சென்னை இடையே விரைவில் கப்பல் போக்குவரத்து

### பிரதமர் மோடி தெரிவிப்பு





(மொஸ்கோ)

ரஷ்யாவின் விளாடிவோஸ்டோக் நகரில் இருந்து சென்னைக்கு நேரடியாக முழுநேர கப்பல் போக்குவரத்து விரைவில் ஆரம்பிக்கப்படும் என பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார்.

ரஷ்யாவின் விளாடிவோஸ்டோக் நகரில் இருந்து சென்னைக்கு நேரடியாக முழுநேரக் கப்பல் போக்குவரத்து விரைவில் ஆரம்பிக்கப்படும் எனப் பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார்.

அரசுமுறைப் பயணமாக ரஷ்யா வந்துள்ள பிரதமர் நரேந்திர மோடி ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் விளாடிவோஸ்டோக் நகரில் உள்ள கப்பல் கட்டும் தளத்தை பார்வையிட்டார்.

ஜனாதிபதி புடினுடன் கூட்டாக செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த பிரதமர் நரேந்திர மோடி, "இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான நல்லுறவு இருநாடுகளின் தலைநகரங்களுக்கு மட்டுமான உறவல்ல, இந்த நல்லுறவில் இருநாடுகளைச் சேர்ந்த அனைத்து மக்களும் இணைக்கப்பட்டுள்ளனர் என மேலும் தெரிவித்தார். (ஜ-2)

## பேருந்து பயணிகளை இலக்கு வைத்து மாலியில் கண்ணிவெடித் தாக்குதல்

### 15 பேர் உடல் சிதறிப்பலி!

(பமகோ)

மாலி நாட்டில் பேருந்து பயணிகளைக் குறிவைத்து நடத்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதல் சம்பவத்தில் 15 பேர் உடல் சிதறிப் பரிதாபமாக உயிரிழந்தனர்.

மாலி ஆபிரிக்க கண்டத்தின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள நாடுகளில் ஒன்று.

இங்கு அல்கொய்தா ஆதரவு பெற்ற பயங்கரவாத அமைப்புகள் அவ்வப்போது தாக்குதல் சம்பவங்களை அரங்கேற்றி வருகிறது.

இந்நிலையில், அந்நாட்டின் ஹாவோ பகுதியில் இருந்து மோப்தி நகர் நோக்கி 60 பயணிகளுடன் பேருந்து ஒன்று சென்று கொண்டிருந்த வேளை, மறைத்து வைக்கப்பட்ட கண்ணிவெடி திடீரென வெடித்தது.

இந்தக் கண்ணிவெடித் தாக்குதலில் 15 பேர் உடல் சிதறிப் பரிதாபமாக உயிரிழந்தனர். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த மீட்புக்குழுவினர் காயமடைந்தமடைந்தவர்களை மீட்டு சிகிச்சைக்காக அருகில் உள்ள வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் இந்தத் தாக்குதல் சம்பவத்திற்கு இதுவரை எந்தத் பயங்கரவாத அமைப்புக்களும் பொறுபேற்கவில்லை என அதிகாரிகள் தெரிவித்தனர். (ஜ-2)

# அமெரிக்கர்கள் கொண்டு வந்த 6 பைகளில் என்ன இருந்தது?

## விமல் வீரவன்ச கேள்வி



(கொழும்பு) —

**கொழும்பு ஹில்டன் விடுதியில் ஆறு பொதிகளுடன் வந்த அமெரிக்கர்கள் அதனைச் சோதனையிட அனுமதிக்கவில்லை என்றும், அமெரிக்கத் தூதரக வாகனத்தில் எடுத்துச் செல்லப்பட்ட அந்தப் பொதிகளில் என்ன இருந்தது என்றும் கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச கேள்வி எழுப்பினார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்த அவர்,"ஜூன் 30 ஆம் திகதி, அமெரிக்க விமான நிறுவனம் ஒன்றின் விமானத்தில் வந்த ஆறு அமெரிக்கர்கள், ஹில்டன் விடுதியில் தங்கச் சென்றனர்.

அவர்கள் கொண்டு சென்ற ஆறு பொதிகளையும் விடுதியின் பாதுகாவலர்கள் சோதனையிட முனைந்தனர். அதற்கு அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

சிறிது நேரத்துக்குப் பின்னர், அமெரிக்கத் தூதரகத்துக்குச் சொந்தமான KL 6586 என்ற இலக்கமுடைய ஜீப் ஒன்று விடுதிக்கு வந்து அந்தப் பொதிகளை எடுதுதுச் சென்றது.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இந்தப் பொதிகள் ஆய்வு செய்யப்படவில்லையா? அவற்றில் சந்தேகத்துக்கிடமான அல்லது மறைத்து வைக்கப்பட்டிருந்த பொருட்களை, ஸ்கானர்களின் மூலம் சோதனையிட அவர்கள் அனுமதிக்கவில்லையா? என்பதே எமது கேள்வி.

அமெரிக்கர்கள் வழக்கமாக நாட்டிற்கு வருவதால் பொதிகளில் என்ன கொண்டு வருகிறார்கள் என்பது ஆச்சரியமாகவுள்ளது.

இதுபோன்ற சம்பவங்கள் குறித்து அரசாங்கம் மக்களுக்கு கூற வேண்டும்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நீர்க்காகம் கூட்டுப் பயிற்சி ஆரம்பம்





(கொழும்பு)

முப்படைகளும் இணைந்து ஆண்டு தோறும் நடத்தும் பாரிய களப் பயிற்சி ஒத்திகையான, நீர்க்காகம் தாக்குதல் X-2019 நேற்று முன்தினம் ஆரம்பமானது.

பத்தாவது ஆண்டாக நடைபெறும் இந்தக் கூட்டுப் பயிற்சியில் இம்முறை 2400 இராணுவத்தினர், 400 கடற்படையினர், 200 விமானப்படையினர் என 3000 இலங்கைப்படையினரும் 10 நாடுகளைச் சேர்ந்த 80 இற்கும் அதிகமான படையினர் மற்றும் பார்வையாளர்களும் பங்கேற்கின்றனர்.

நீர்க்காகம் தாக்குதல் X-2019 தொடக்க நிகழ்வு மின்னேரியா நடவடிக்கை தலைமையகத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது. நேற்றுக்களப்பயிற்சிகள் முறைப்படி ஆரம்பமாகின.

இந்த நடவடிக்கையில், இலங்கை இராணுவத்தின் சிறப்புப் படைப்பிரிவு, கொமாண்டோ படைப்பிரிவு, இயந்திர காலாட்படைப் பிரிவு உள்ளிட்டவையும் பங்கேற்கின்றன.

மலேசியா, மாலைதீவு, நேபாளம், ரஷ்யா, பங்களாதேஷ், சீனா, இந்தியா, பாகிஸ்தான், இந்தோனேசியா, நைஜீரியா, சாம்பியா ஆகிய நாடுகள் இந்தக் கூட்டுப் பயிற்சியில் பங்கேற்கின்றன.

எதிர்வரும் 23 ஆம் திகதி குச்சவெளியில் நடைபெறவுள்ள இறுதி ஒத்திகையுடன் இந்தப் பயிற்சி நிறைவடையவுள்ளது. (இ-7)

# ரணில் - சஜித் இடையே அதிகாரப் போட்டியேயுள்ளது

## ஐ.தே.க.விளக்கம்





(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அமைச்சர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையில் எந்த முரண்பாடும் கிடையாது. இருவருக்கும் இடையில் அதிகாரப் போட்டியே உள்ளது என அந்தக் கட்சியின் செயற்குழு தெரிவித்தது.

அத்துடன் இந்தப் போட்டித் தன்மையே கட்சியின் வெற்றியாகும். அதேபோன்று சபாநாயகர் கருஜெயசூரிய உள்ளிட்ட இவர்கள் மூவரும் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள் இல்லை. எனவே இறுதியில் பாராளுமன்றக் குழுவுடன் கலந்தாலோசித்து ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரை அறிவிப்போம் என்றும் தெரிவித்தது.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அந்த கட்சியின் செயற் குழு உறுப்பினரும் தேசிய சேவை சங்கத்தின் பிரதித் தலைவருமான சுனில் டி சில்வா இதனை தெரிவித்தார்.

மகிந்தவின் அரசியல் பின்னணியே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் அடையாளம். தேர்தலின் போது 19 இலட்சம் வாக்குகளால் அவரை தோற்கடிப்போம். தற்போது ஜனாதிபதி வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்ட இருவரும் ஜனாதிபதி முறையை நீக்குவது தொடர்பில் அவர்களது நிலைப்பாடுகளை மக்களுக்கு அறிவிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## இயந்திர வாழ்க்கை

இவற்றை தொடர்ந்து வாசித்துக் கொண்டிருக்கிற ஒருத்தர் ஒருநாள் வந்தார். "ஒரு முக்கியமான விடயத்தை பற்றி எமது மக்களுக்கு அவசியம் சொல்லிக் கொள்ள வேண்டும் சேர்!'' என்றார். "என்ன விடயம்?'' என்று கேட்டேன்.

"இந்தக் காலத்திலே கல்யாணமான புதிதிலே கணவன்- மனைவி இரண்டு பேரும் சந்தோசமாக குடும்பம் நடத்துகிறார்கள். கொஞ்ச நாளிலே வாழ்க்கை ரொம்பவும் 'மெக்காலிக்கலா' ஆகிவிடுகிறது. கணவன்- மனைவி இரண்டு பேருமே வேலைக்குப் போறவர் களாக இருந்தால் அது இன்னமும் மோசம்! குழந்தை, பாசம் என்றால் என்ன என்று தெரியாமலே வளர்ந்து விடுகிறது.

இதே நிலைமை நீடிச்சுது என்றால் எதிர்காலம் ரொம்பவும் மோசமாகப் போய்விடும் சேர்!'' என்று ரொம்பவும் அடிக்கிக் கொண்டே போனார். நிறைய அனுபவப்பட்டிருப்பார் போல இருக்கு.

இதே கருத்தை கொஞ்ச நாளைக்கு முன்னாடி வெளியூரிலேயிருந்து ஒரு அம்மாவும் எழுதியிருந்தார்கள். கணவனும் மனைவியும் ஒரு நாளிலே கொஞ்ச நேரமாவது செலவு செய்து ஒருத்தர் உணர்ச்சியை மற்றவர்கள் புரிந்து கொண்டு நடந்து கொண்டால் வாழ்க்கை எவ்வளவு நல்லா இருக்கும்? என்று கேட்டிருந்தார். இல்வாழ்க்கை இயந்திரகதியாகிப் போச்சு தென்றால் நிலைமை எப்படி ஆகும் என்பதை புரிந்து கொள்கிறதுக்கு ஒரு புராணக் கதையையும் அவரே குறித்து அனுப்பியிருந் தார். அதை இப்ப உங்களுக்குச் சொல்கிறேன். கேட்டு வைத்துக் கொள்ளுங்கள். வாசஸ்பதி மிச்ரர் என்று ஒருத்தர் வடமொழி கவிஞர் பொழுது விடிந்து போனால் எழுதுவது தான் அவர் வேலை. வாழ் நாள் முழுவதையும் இலக்கியங்கள் படைக்கிறதிலேயே கழித்தார்.

ஒருசமயம் ஒரு பெரிய நூல் ஒன்றை எழுதிக் கொண்டிருந்தார். இரவு நேரம் சின்ன விளக்கு ஒன்று எரிந்து கொண்டிருக்கிறது. அந்த வெளிச்சத்திலே ரொம்ப நேரமா கண் விழித்து உட்கார்ந்து கொண்டு எதைப் பற்றியும் கவலைப்படாமல் அவர் பாட்டுக்கு எழுதிக்கொண்டிருந்தார். அந்த நேரம் பார்த்து பலமா ஒரு காற்று வீச ஆரம்பித்து விட்டது. விளக்கு அணைந்து போய் விட்டது. கொஞ்ச நேரம் இருட்டு. மறுபடியும் விளக்கு எரிய ஆரம்பித்தது. திடீரென்று விளக்கை ஏற்றியது யார் என்று நிமிர்ந்து பார்த்தார். ஒரு வயதான அம்மா நின்று கொண்டிருந்தார். இவர் ரொம்ப மரியாதையா அந்த அம் மாவைப் பார்த்து, "நல்ல நேரத்திலே வந்து உதவி செய்திருக் கிறாயே யாரம்மா நீ?" என்று விசாரித்தார்.

அந்த அம்மாவுக்கு ஒரு திகைப்பு. "என்ன இது? இப்படிக் கேட்கிறீர்கள். நான் தான் உங்கள் மனைவி பாமதி'' என்றார். "என்னது என் மனைவி பாமதியா? இவ்வளவு கிழவியாக ஆகிவிட்டாய்'' என்றார். ஆமாம் நானேதான் இப்படி ஆகிவிட்டேன். நமக்கு கல்யாண மாகி 50 வருடத்துக்கு மேல் ஆகிவிட்டது. இலக்கியங்கள் படைக் கிறதிலேயே உங்களுக்கு வயதாகிவிட்டது. உங்களுக்குப் பணி விடை செய்யிறதிலேயே எனக்கு வயதாகி விட்டது.

இன்றைக்கு கொஞ்சம் அசந்து போய் கண்ணை மூடிவிட்டேன். அதுதான் விளக்கு அணைந்து போய்விட்டது. என்னை மன்னித்துக்கொள்ளுங்கள் என்றார் அந்த அம்மா. இதைக் கேட்டதும் அந்த கவிஞர் கலங்க ஆரம்பித்து விட்டாராம். ஐம்பது வருட வாழ்க்கையை எனக்காக அர்ப்பணித்த உனக்கு நான் என்ன கைமாறு செய்யப்போகிறேன் தெரியுமா?

இதோ நான் எழுதிக் கொண்டிருக்கிற இந்த நூலுக்கு 'பாமதி' என்று உன்னுடைய பெயரையே சூட்டப் போகிறேன் என்றார். அதேமாதிரி சூட்டியும் விட்டார். நூலினுடைய முதல் ஓலையிலே 'பாமதி' என்று எழுதிப்போட்டார். என்ன செய்து என்ன பிரயோசனம்? ஐம்பது வருட இல்வாழ்க்கை இனிமேல் திரும்பி வருமா?

இப்படிப்பட்டவர்கள் இந்தக் காலத்திலே யாராவது இருந்தால் அவர்கள் பேசாமல் கல்யாணம் செய்யாமல் இருந்து விடுவது நல்லது. கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று தீர்மானம் செய்து விட்டால் இல்வாழ்க்கையை முறையாக நடத்த வேண்டும். அதுதான் மரியாதை. இனிமேலாவது வீட்டிலே 'மெக்கானிக்கலா' நடந்து கொள்கிறவர்கள் இருந்தால் அவர்கள் அந்தப் பழக்கத்தை மாற்றிக் கொள்வது நல்லது. சிலபேர் எந்த அளவுக்கு 'மெக்கானிக்கலா' இருக்கிறார்கள் என்பதை தெரிந்து கொள்வதற்கு ஒரு உதாரணம் சொல் கிறேன் கேளுங்கள்.

ஒரு கணவர் தினமும் காலை டிபன் சாப்பிடுகிற விதம் எப்படித் தெரியுமா? 'டிபன் ரெடி' என்றால் போதும் உடனே நியூஸ் பேப்பரை பிரித்து கையிலே வைத்துக்கொள்வார். கண்ணாடியை போட்டுக் கொள்வார். பேப்பரை பார்த்துக் கொண்டே முணுமுணுத்துக் கொண்டிருப்பார். அந்தம்மா ஒரு 'பிளேட்'லே டிபனை கொண்டு போய் அவர் பக்கத்திலே வைப்பார். இவர் கண்ணும் கவனமும் பேப்பரிலே தான் இருக்கும். ஒருகை மட்டும் மெதுவா டிபன் இருக்கிற இடத்தைத் தேடி கண்டு பிடித்து 'மெக்கானிக்கலா' எடுத்து வாயிலே போட்டுக்கும். இதே வழக்கமாகப் போய்விட்டது. அந்த அம்மா பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார். ஒரு முக்கியமான நாள் வந்தது. அவர்கள் கல்யாண நாள். காலையிலே அந்த ஆள் வழக்கம்போல டிபன் சாப்பிட பேப்பரும் கையுமா உட்கார்ந்தார். இவங்க கிட்ட போய் நின்று கொண்டு "ம்... சாப்பிடுங்க...சாப்பிடுங்க'' என்று சொல்லிக் கொண்டே இருந்தார். அவரும் எடுத்துச் சாப்பிட்டார்.

"டிபன் எப்படி இருக்கு?'' என்று கேட்டார். "கல்யாண நாளைக்கு என்று இன்றைக்கு கேக் செய்திருக் கிறாயா'' ரொம்ப டேஸ்டா இருக்கே''- என்றார் அவர். "கொஞ்சம் முகத்தை திருப்தி தட்டிலே இருக்கிறது என்னென்று பாருங்கள்'' என்றார். இவரும் மெதுவாகப் பேப்பரிலேயிருந்து முகத்தை திருப்பி பிளேட்டைப் பார்த்தார். அங்கே இருந்தது என்ன தெரியுமா? மாட்டுக்கு வைக்கிற புண்ணாக்கு.

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

## உயிர்வாழ நீர்

யாழ்ப்பாணம் குடிதண்ணீர்ப் பிரச்சினை நீண்ட காலமாக பல தரப்பினராலும் பேசப்பட்டு வந்தநிலையில், யாழ்ப்பாணக் குடாநாட்டின் குடிதண்ணீர்ப் பிரச்சினைத் தீர்வுக்காக தயாரிக்கப்பட்டுள்ள மாற்றுக் குடிநீர்த் திட்டப் பணி கடந்த 30 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாண குடிநீர் திட்டப் பணிகளை ஆரம்பித்து வைத்திருக்கிறார்.

கடந்த 2018 ஆம் ஆண்டு ஆவணி மாதம் ஆரம்பித்து இந்த ஆண்டு ஆவணி மாதம் நிறைவடைய வேண்டிய இந்தத் திட்டம் ஒரு சில தடைகளால் ஓராண்டு தாமதமாகவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நாட்டிற்காக ஒன்றிணைவோம் செயற்றிட்டத்தின் மூலமாக இந்த குடிநீர்த் திட்டப் பணிகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அதற்குப் பல்வேறு தீர்வுகளும் முன்வைக்கப்பட்டன. இரணைமடுவிலிருந்து குடிதண்ணீரைக் கொண்டு வருதல், வடமராட்சி கிழக்கிலிருந்து கடல் நீரை நன்னீராக்குதல் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் முன்மொழியப்பட்ட போதும், அதிலுள்ள நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக எந்தவொரு திட்டமும் இன்னும் சரியாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்த நிலையில் "மாற்றுக் குடிநீர்த் திட்டம்" என்ற பெயரில், வடமராட்சி நீரேரியில் உள்ள நீரை குளத்தில் தேக்கி விநியோகிக்கும் திட்டம் தயாரிக்கப்பட்டது. இரண்டு ஆயிரம் மில்லி யன் ரூபா செலவில் இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாம் அன்றாடம் பயன்படுத்தும் நீரின் இரசாயனவியல் குறியீடு $H_2O$ ஆகும். நிறமற்றதும் வாசனையற்றதும் ஒளி புகும் தன்மையுடையதுமான நீரானது கண்ணாடியுடன் ஒட்டும் தன்மையுடையதுமாகும். புவியிலுள்ள ஓடைகள், ஏரிகள், கடல்கள், அனைத்தும் பெரும்பாலும் நீராலேயே ஆக்கப்பட்டுள்ளன. மேலும் உலகில் காணப்படும் உயிரினங்கள் அனைத்திலும் நீரானது திரவவடிவில் காணப்படுகிறது. உயிரினங்களின் உடலுக்கு ஆற்றலையோ, கனிம ஊட்டச் சத்துகள் எதையுமோ நீர் தருவதில்லை என்றாலும் அவ்வுயிரினங்கள் உயிர் வாழ்வதற்கு நீர் அத்தியாவசியமானதாகும். ஒருநீர் மூலக்கூற்றில் ஓர் ஒட்சிசன் அணுவுடன் இரண்டு ஐதரசன் அணுக்கள் பிணைக்கப்பட்டுள்ளன. எனவே இதன் சார்மூலக் கூற்றுத் திணி $T18gmol^{-1}$ ஆகும். நியமவெப்ப அழுத்தத்தில் இது ஒரு திரவமாக இருந்தாலும், திண்ம நிலையில் இது பனிக்கட்டியாகவும் வாயு நிலையில் நீராவியாகவும் காணப்படுகிறது.

மழை வடிவில் இது பூமியில் வீழ்படிவாகவும் மூடுபனியாக தூசுப் படலமாகவும் உருவாகிறது. திரவநிலைக்கும் திண்ம நிலைக்கும் இடைப்பட்ட நிலையிலுள்ள நீர்த்துளிகள் மேகங்களாக மாறுகின்றன. நீரானது தொடர்ச்சியாக நீராவி போக்கு, நீராவி ஒடுக்கம், வீழ்படிவு போன்ற செயல்களுடன் நீர்ச் சக்கரத்துக்கு உட்பட்டு இயங்கிக் கொண்டே கடலைச் சென்றடைகிறது.

புவிப் பரப்பின் 71 வீதப் பகுதி நீரால் சூழப்பட்டுள்ளது. புவியின் தண்ணீரில் பெரும் பகுதி சமுத்திரங்கள்; ஏனைய பரந்தநீர் நிலைகளிலும், சுமார் 1.6% பகுதி நிலத்தடி நீர் கொள் படுகைகளிலும் காணப்படுகிறது. வளிமண்டல நீரின் 0.001% பகுதி வாயுவடிவிலும், காற்றில் மிதக்கும் திண்ம மற்றும் திரவ துகள்களால் உருவாகும் மேகங்களிலும்,காற்றின் நீராவி குளிர்ந்து சுருங்குவதால் ஏற்படும் நீர்க்கோர்வைகளிலும் காணப்படுகிறது. நிலமேலோட்ட நீரின் 97% பகுதி உவர் நீர்ச் சமுத்திரங்களிலும், 2.4% பனி ஆறுகள் மற்றும் துருவ பனிப்பாறைகளிலும், ஐ0.6% பகுதி ஏனைய நிலமேலோட்ட நீர் நிலைகளான ஆறுகள், ஏரிகள், குளம் குட்டைகளிலும் காணப்படுகிறது. புவியின் தண்ணீரில் ஒரு சிறிய அளவு உயிர்களின் உடல்களிலும், உற்பத்தி செய்யப்பட பொருட்களிலும் காணப்படுகிறது. ஏனைய நீர் துருவப் பனிப்பாறைகளிலும், பனி ஆறுகளிலும், நீர்கொள் படுகைகளிலும், ஏரிகளிலும் சிறைபட்டனவாகவும் சில நேரம் புவியின் உயிரினங்களுக்கான நன்னீராதாரமாகவும் காணப்படுகின்றன.



தாவரங்களின் இலைவாய் ஊடாகவே அதிகளவில் ஆவியுயிர்ப்பு நிகழும்

தாவரங்களில் இருந்து நீர் நீராவி நிலையில் ஆவியாதலே ஆவியுயிர்ப்பு **(Transpiration)** எனப்படும். ஒளித்தொகுப்பு நிகழ்வின் போது வாயுப் பரிமாற்றத்திற்காக இலைவாய்கள் திறந்திருக்கும் நிலையில், தாவரத்தில் மேல்நோக்கி எடுத்துவரப்படும் நீரானது ஆவியாக இலைவாய்களூடாக வெளியேறும். படத்தில் காட்டப்பட்டுள்ள இலைவாயின் விட்டம் ஏறக்குறைய 10μm $(1x10^{-10}m)$ ஆகும். இது முக்கி யமாக இலைகளிலுள்ள இலை வாய்களூடாகவே இடம் பெற்றாலும், தாவரங்களின் ஏனைய பகுதிகளிலிருந்தும் ஆவியுயிர்ப்பு சிறிதளவில் நிகழும். இலைவாய் தவிர புறத்தோல், தண்டிலுள்ள பட்டை வாய்களூடாகவும் ஆவியுயிர்ப்பு நிகழ்வதுண்டு.




இது ஆவியாதல் போன்ற ஒரு செயற்பாடாகும். இது விலங்குகளில் வியர்த்தல் போன்றதென்றாலும் இரண்டுக்கும் பல வேறுபாடுகளும் உண்டு. மழை போதுமான அளவில் கிடைக்கும் இடங்களில் ஆவியுயிர்ப்பைத் தடுக்க தாவரங்கள் இசைவாக்கம் அடைந்திருக்காது.

எனினும் வறண்ட பிரதேசங்களில் வாழும் தாவரங்களான கள்ளி போன்றவை ஆவியுயிர்ப்பைக் குறைக்க நன்றாக இசைவாக்கம் அடைந்துள்ளன. தாவரங்களிலிருந்தான ஆவியுயிர்ப்புவீதம் பல காரணிகளால் செல்வாக்குச் செலுத்தப்படுகின்றது.

ஆவியுயிர்ப்பு வீதத்தை அளவிடும் ஒரு கருவியே உறிஞ்சல் மானி **(Ganong's Potometer)** ஆகும். இதன் போது குழாயினுள் நகரும் வளிக்குமிழியின் வேகத்தை அளவிடுவதன் மூலம் ஆவியுயிர்ப்பு வீதத்தை அளவிட முடியும். ஆவியுயிர்ப்பைக் குறைக்க தாவரங்கள் கொண்டுள்ள இசைவாக்கங்களாக, இலைக் குழிகளில் இலைவாய் காணப்படுதல் (உதாரணம்- **Ganong's Potometer** சவுக்கு), இலைகள் ஒடுக்கப்பட்டு முட்களாக திரிபடைந்திருத்தல் (உதாரணம்-கள்ளி, நாகதாளி- **Opuntiastricta**), தண்டில் நீர்சளியமாக சேமிக்கப்பட்டிருத்தல், புறத்தோல் தடிப்பாக இருத்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

மனிதர்களுக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் தூய்மையான குடிநீர் இன்றியமையாதது. கடந்த பத்தாண்டுகளில், உலகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பாதுகாப்பான குடிநீர் வசதி குறிப்பிடத்தக்கவகையில் சீரான முன்னேற்றம் கண்டுள்ளது. பாதுகாப்பான குடிநீர் வசதிக்கும் ஒரு நபருக்கான மொத்த நாட்டு உற்பத்திக்கும் இடையே பரஸ்பர சம்பந்தம் காணப்படுகிறது. 2025 ஆம் ஆண்டுக்குள் உலக மக்கள் தொகையில் பாதிக்கும் மேலானோர் நீரை அடிப்படையாகக் கொண்ட பலவீனங்களுக்கு உட்படுத்தப்படுவர் என சில ஆய்வாளர்கள் கணித்துள்ளனர். பல்வேறு வேதியற் பொருட்களின் கரைப்பானாகவும், தொழிற்சாலைகளில் குளிர்ப்பி மற்றும் கடத்தியாகப் பயன்படுத்தப்படுவதாலும், உலக வர்த்தகத்தில் நீர் முக்கிய பங்காற்றுகிறது. உலகில் அண்ணளவாக 70 சதவீத நன்னீர் விவசாயத்திற்கு பயன்படுத்தப்படுகிறது.

| காரணி | ஆவியுயிர்ப்பு வீதத்தைப் பாதிக்கும் விதம் |
|---|---|
| இலைகளின் எண்ணிக்கை | இலைகளின் எண்ணிக்கை கூடும்போது வாயுப் பரிமாற்றம் நிகழும் மேற்பரப்பு கூடும். எனவே, இலைகளின் எண்ணிக்கை கூடினால் ஆவியுயிர்ப்புவீதம் கூடும். |
| இலைவாய்களின் எண்ணிக்கை | இலைவாய்களின் எண்ணிக்கை கூடினால் ஆவியுயிர்ப்புவீதம் கூடும். (இலைவாயினூடாகவே கூடியளவுநீர் ஆவியுயிர்ப்பால் வெளியேறும்.) |
| இலையில் புறத்தோல் காணப்படல் | மெழுகுபோன்ற புறத்தோல் காணப்பட்டால் சூரியஒளிதெறிக்கச் செய்யப்படும். இதனால் வெப்பம் குறைக்கப்பட்டு ஆவியுயிர்ப்பு குறைக்கப்படும். |
| ஒளிச் செறிவு | ஒளிச்செறிவு கூடினால் இலைவாய்கள் திறக்கப்பட்டு ஆவியுயிர்ப்பு கூடும். |
| வெப்பநிலை **(Temperature)** | வெப்பநிலையானது ஆவியுயிர்ப்பின் மீது மூன்றுமுறைகளில் செல்வாக்குச் செலுத்தும்<br>➢ கூடியவெப்பநிலையில் ஆவியாதல் கூடி ஆவியுயிர்ப்புக் கூடும்.<br>➢ புறச்சூழலில் ஈரப்பதம் குறைவதால் ஆவியுயிர்ப்புக் கூடும்.<br>➢ நீரின் இயக்கவாற்றல் கூட்டப்படுவதால் ஆவியுயிர்ப்புவீதம் கூடும். |
| சார்புஈரப்பதன் **(relative humidity)** | உலர்வானவளி ஆவியுயிர்ப்புவீதத்தைக் கூட்டும். |
| நீர்வழங்கல் | நீர்வழங்கல் குறையும்போதுவெளியிடப்படும் நீரின் அளவைத் தாவரம் குறைக்கும். எனவே,ஆவியுயிர்ப்புவீதம்குறையும். |



Ganong's Potometer

அ.குகன்,
யாழ்ப்பாணம்
தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 226

பச்சை வீட்டு விளைவு (Green House Effect) என்றால் என்ன?

புதிர் 226 இற்கான விடைகளை 16.09.2019 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

அ.குகன்,
யாழ்ப்பாணம்
தேசிய கல்வியியற்
கல்லூரி,
கோப்பாய்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு A ஆசிரியரிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

### யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 226

சரியான விடை:-....................

முழுப்பெயர்:-....................

முகவரி:-....................

தொ.பே. இல:-....................

கையொப்பம்:-....................

# அரசியல் நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்க மக்களே உரிய தீர்மானத்தை எடுங்கள்!

## ஜனாதிபதி மைத்திரி அறிவுரை



(கொழும்பு)

**நாடு எதிர்கொண்டுள்ள அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள வேண்டுமாயின் நாட்டு மக்கள் அரசியல் ரீதியில் உரிய தீர்மானத்தை எடுக்க வேண்டும் எனவும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நெருக்கடிகளை முன்கூட்டியே அறியும் அரசாங்க நிர்வாகமே தற்போது காணப்படுகின்றது எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.**

நடப்பு அரசாங்க நிலவரம் எதிர்கால சட்ட விபரணங்களை தெளிவுபடுத்தும் விதமாக பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷ எழுதிய நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துக் கொண்ட போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் நடப்பு அரசாங்கத்தின் நிர்வாகம் மற்றும் எதிர்காலச் சட்ட செயற்பாடுகள் தொடர்பில் மக்களுக்குத் தெளிவுபடுத்தும் விதமாக நூல் வெளியிட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. இந்நூலில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நடைமுறையில் இடம் பெறுகின்றன.

ஜனாதிபதி சட்டத்தரணி என்ற நிலைப்பாட்டில் இருந்து கொண்டு எதிர்காலச் சட்ட நடவடிக்கைகள் தொடர்பில் குறிப்பிட்டுள்ளமை

நிச்சயம் நடந்தேறும். நாடு இன்று அரசியல் மற்றும் பல சமூக பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளது.

அரசியல் ரீதியில் பல மாறுபட்ட கருத்துக்களும் சமூகத்தின் மத்தியில் காணப்படுகின்றது. அரசியல் ரீதியில் நாட்டு மக்கள் சிறந்த தீர்மானத்தை விரைவாகவும், முறையாகவும் மேற்கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

---

## ஜனாதிபதி வேட்பாளராக சஜித் மற்றுமொரு கடிதம் கையளிப்பு

(கொழும்பு)

அமைச்சர் சஜித் பிரேமதாஸவை ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்குமாறு கோரும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வலியுறுத்தல் கடிதம் ஒன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்படவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை இந்தக் கடிதம் கையளிக்கப்படவுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் துஷார இந்துநில் தெரிவித்தார்.

அமைச்சர் சஜித் பிரேமதாஸவிற்கு ஆதரவாக மக்களை அணி திரட்டும் மக்கள் பேரணிகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையிலேயே சஜித்தை ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்குமாறு கோரிக்கை கடிதமொன்றை பிரதமரிடம் கையளிக்கவுள்ளோம்.



இதுவரையில் 50 இற்கும் அதிகமான உறுப்பினர்கள் குறித்த கடிதத்தில் கையொப்பமிட்டுள்ளனர்.

எவ்வாறாயினும் பெரும்பான்மையான உறுப்பினர்கள் இந்தக் கடிதத்தில் கையொப்பமிடுவார்கள் என்ற நம்பிக்கை எமக்குள்ளது என துஷார இந்துநில் தெரிவித்தார்.

இதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் உத்தரவையும் மீறி சஜித்திற்கு ஆதரவாக மக்கள் ஆதரவுக் கூட்டம் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி வேட்பாளர் குறித்த குழப்பம் ஐக்கிய தேசிய கட்சிக்குள் பூதாகரம் ஆகியுள்ள நிலையில் குறித்த கூட்டம் இடம்பெறவுள்ளது.

தற்போது சஜித்திற்கு ஆதரவான நிலைப்பாடு ஐக்கிய தேசிய கட்சிக்குள் வலுப்பெற்றுள்ள நிலையில், சஜித்தை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்க ரணில் விக்கிரமசிங்க மறுப்பு தெரிவித்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, அமைச்சர் சஜித் பிரேமதாஸவை ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்குமாறு கோரும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வலியுறுத்தல் கடிதம் ஒன்று இதற்கு முன்னரும் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

---

## ஐக்கிய தேசியக் கட்சிக்குள் எந்தப் பிரச்சினையும் இல்லை

### அமைச்சர் கபீர் கூறுகிறார்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் எந்தவிதமான பிரச்சினையும் இல்லை என அக் கட்சியின் தவிசாளரும் நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சருமான கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

கட்சித் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதிகமானவர்கள் ஊடகங்களில் வெவ்வேறு கருத்துக்களை வெளியிடுவதாகவும் தமது எதிராளிகள் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.


ஐக்கிய தேசியக் கட்சி ஒற்றுமையாகவும் ஜனநாயக முறையிலும் தீர்மானம் மேற்கொள்ளும் கட்சி எனவும் தேர்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.


கட்சியின் நடவடிக்கைகள் தொடர்பில் பொதுச் செயலாளருடன் இணைந்து கலந்துரையாடப்பட்டு வருவதாகவும் இன்னும் சில தினங்களில் பிரதமருடன் இடம்பெறும் சந்திப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்வரும் தேர்தல் நடவடிக்கை தொடர்பில் கலந்துரையாடப்பட்டு அதனை பொதுமக்களுக்கு அறிவிக்க எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் கபீர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

---

## திருக்கோணேஸ்வரத்தில் எஸ்.பி.பாலசுப்பிரமணியம்








(திருகோணமலை)

இலங்கைக்கு வருகை தந்துள்ள தென்னிந்திய பிரபல பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் நேற்றுத் திருகோணமலைக்குப் பயணம் மேற்கொண்டார். திருகோணமலை, திருக்கோணேஸ்வரம் ஆலயத்திற்கு சென்று அவர் வழிபாடுகளில் ஈடுபட்டார். (இ-7)

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையும் கடந்தகால ஜனாதிபதித் தேர்தல்களும்

11



கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

5வது ஜனாதிபதி
சந்திரிகா பண்டாரநாயக்க
குமாரதுங்க



4வது நிறைவேற்று
அதிகாரம் கொண்ட
ஜனாதிபதி.

இந்தச் சவாலை திருமதி. சந்திரிகா குமாரதுங்க ஏற்றுக்கொண்டார். 1995 ஆம் ஆண்டு ஜூலை 15 ஆம் திகதியில் தற்போதைய அரசியலமைப்பு மாற்றியமைக்கப்படும் எனவும் மாற்றியமைக்கப்படும் அரசியலமைப்பில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட, நிறைவேற்று அதிகாரமிக்க இலங்கை அரசுத் தலைவர் பதவி ஒழிக்கப்படுமெனவும் 1994.10.21 ஆம் திகதி இலங்கை ரூபவாஹினியில் இடம்பெற்ற விசேட பேட்டியில் திருமதி.சந்திரிகா குமாரதுங்க குறிப்பிட்டார். 1994.10.19 ஆம் திகதி பதுளை சேனநாயக்க விளையாட்டு அரங்கில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி பதவி நீக்கப்பட வேண்டியதன் அவசியத்தை விரிவான முறையில் இவர் விளக்கியிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

சந்திரிகா குமாரதுங்கவின் இந்நிலைப்பாட்டால் திருப்தியடைந்த கலப்பதி 1994.10.27 ஆம் திகதியன்று தான் போட்டியிலிருந்து விலகிக் கொள்வதாக அறிவித்தார். காமினி திஸாநாயக்கவுக்குப் பதிலாக காமினியின் மனைவி சிறிமதி திஸாநாயக்க நியமிக்கப்பட்டார்.

ஆயினும் இவரால் சந்திரிகாவின் பின்னால் திரண்ட மக்கள் எழுச்சிக்கு முகங்கொடுக்க முடியவில்லை. 62.28% வீத வாக்குகளைப் பெற்று வரலாறு காணாத வெற்றியுடன் சந்திரிகா குமாரதுங்க இலங்கையின் முதலாவது பெண் ஜனாதிபதியானார். (நன்றி:- "21 ஆம் நூற்றாண்டின் இலங்கையின் தலைமைத்துவம்" புன்னியாமீன்)

## 3வது ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் -1994

வட மாகாணம்

| வேட்பாளர் | யாழ் மாவட்டம் | | வன்னி மாவட்டம் | |
|---|---|---|---|---|
| | வாக்குகள் | % | வாக்குகள் | % |
| சந்திரிகா குமாரதுங்க | 16,934 | 96.35% | 33,585 | 85.30% |
| நிஹால் கலப்பதி | 25 | 0.14% | 118 | 0.30% |
| வஜிரா ஸ்ரீமதி திசாநாயக்க | 223 | 1.27% | 4,493 | 11.41% |
| ஏ.ஜே.ரணசிங்க | 16 | 0.09% | 77 | 0.20% |
| ஹரிச்சந்திர விஜேதுங்க | 36 | 0.20% | 96 | 0.24% |
| ஹட்சன் சமரசிங்க | 341 | 1.94% | 1,003 | 2.55% |
| செல்லுபடியான வாக்குகள் | 17,575 | 99.20% | 39,372 | 98.30% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 141 | 0.80% | 681 | 1.70% |
| மொத்தமாக வாக்களித்தவர்கள் | 17716 | 2.97% | 40,053 | 22.41% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 596,366 | | 178,697 | |

சந்திரிகா குமாரதுங்கவின் பணிப்புரையின் படி பதில் தேர்தல் ஆணையாளரினால் உத்தியோக பூர்வ அறிவித்தல் விடுக்கப்பட்டது.

இத்தேர்தலின் நியமனப்பத்திரங்கள் 1999 நவம்பர் 16ம் திகதி கொழும்பு மாநகர சபை மண்டபத்தில் காலை 8.00 மணி முதல் 11 மணி வரை தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்காவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. நியமனப்பத்திரம் தாக்கல் செய்ததை நோக்கும் போது 3 ஜனாதிபதித் தேர்தல்களையும் விட அதிகமான அபேட்சகர்கள் நியமனப்பத்திரம் தாக்கல் செய்தது இதுவே முதற்தடவை. இங்கு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் மூலமாக 10 வேட்பாளர்களும், சுயேட்சையாக 3 வேட்பாளர்களும் நியமனப்பத்திரம் தாக்கல் செய்திருந்தனர்.

பின்வரும் அபேட்சகர்கள் நியமனப்பத்திரங்களைத் தாக்கல் செய்தனர்.

அப்துல் ரஸ்ஸாக் அப்துல் றசூல் (ஸ்ரீலங்கா முஸ்லிம் கட்சி), அல்விஸ் வீரக்கொடி பிரேமவர்தனா (மக்கள் சுதந்திர ஒற்றுமை முன்னணிக்கட்சி), ஆரியவங்ச திசாநாயக்க (ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்கட்சி) , மெஸ்டியகே தொன் நந்தன குணதிலக (மக்கள் விடுதலை முன்னணிக்கட்சி) , கமல் கருணதாச (மக்கள் விடுதலை ஒற்றுமை முன்னணிக்கட்சி) , சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க( பொதுஜன ஐக்கிய முன்னணிக்கட்சி) , டெனிசன் எதிரிசூரிய (சுயேட்சை) ,மஹிமன் ரஞ்சித் (சுயேட்சை) , ரணில் விக்கிரமசிங்க ( ஐக்கிய தேசியக்கட்சி) ,ராஜீவ விஜேசிங்க (லிபரல் கட்சி) , வாசுதேவ நாணயக்கார ( இடதுசாரி ஜனநாயக முன்னணிக் கட்சி) , ஹட்சன் சமரசிங்க (சுயேட்சை) ,விஜேதுங்க முதலிகே ஹரிச்சந்திர விஜேதுங்க (சிங்களயே மகசம்மத பூமிபுத்திர கட்சி)

## 3வது ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் -1994

கிழக்கு மாகாணம்

| வேட்பாளர் | மட்டக்களப்பு மாவட்டம் | | திகாமடுல்லை மாவட்டம் | | திருகோணமலை மாவட்டம் | |
|---|---|---|---|---|---|---|
| | வாக்குகள் | % | வாக்குகள் | % | வாக்குகள் | % |
| சந்திரிகா குமாரதுங்க | 144,275 | 87.30% | 168,289 | 72.36% | 77,943 | 71.62% |
| நிஹால் கலப்பதி | 484 | 0.29% | 574 | 0.25% | 324 | 0.30% |
| வஜிரா ஸ்ரீமதி திசாநாயக்க | 14,812 | 8.93% | 59,074 | 25.40% | 28,006 | 25.74% |
| ஏ.ஜே.ரணசிங்க | 381 | 0.23% | 496 | 0.21% | 195 | 0.18% |
| ஹரிச்சந்திர விஜேதுங்க | 349 | 0.21% | 471 | 0.20% | 279 | 0.26% |
| ஹட்சன் சமரசிங்க | 5,028 | 3.03% | 3,677 | 1.58% | 2,074 | 1.91% |
| செல்லுபடியான வாக்குகள் | 165,779 | 98.42% | 232,581 | 98.47% | 108,821 | 98.44% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2,664 | 1.58% | 3,621 | 1.53% | 1,726 | 1.56% |
| மொத்தமாக வாக்களித்தவர்கள் | 168,443 | 64.32% | 235,202 | 75.70% | 110,547 | 60.05% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 261,897 | | 312,006 | | 184,090 | |

### 4 ஆவது ஜனாதிபதித் தேர்தல் -1999

தனது புகழ் முற்றாக வீழ்ச்சியடைய முன்னரே அடுத்த ஜனாதிபதி தேர்தலை நடத்தி தனது வெற்றியை உறுதிபடுத்திக்கொள்ள விரும்பிய சந்திரிகா தனது முதலாவது ஆட்சிகாலம் முடிவடைவதற்கு சுமார் ஒருவருடம் முன்னதாகவே தேர்தலை நடத்தினார்.

நான்காவது ஜனாதிபதித் தேர்தல் 1999ம் ஆண்டு டிசெம்பர் 21ம் திகதி நடைபெற்றது. இத் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் 1999ம் ஆண்டு நவம்பர் 16ம் திகதி ஏற்றுக் கொள்ளப்படுமெனவும், 1999 டிசெம்பர் 21ம் திகதி தேர்தல் நடைபெறுமெனவும் ஜனாதிபதி

## 3வது ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் -1994

| வேட்பாளர் | கட்சி | வாக்குகள் | % |
|---|---|---|---|
| சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க | பொதுசன ஐக்கிய முன்னணி | 4,709,205 | 62.28% |
| நிஹால் கலப்பதி | ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி | 22,749 | 0.30% |
| வஜிரா ஸ்ரீமதி திசாநாயக்க | ஐக்கிய தேசியக்கட்சி | 2,715,283 | 35.91% |
| ஏ.ஜே.ரணசிங்க | சுயேட்சை | 22.752 | 0.30% |
| ஹரிச்சந்திர விஜேதுங்க | சிங்களே மகாசம்மத பூமிபுத்திர கட்சி | 32,651 | 0.43% |
| ஹட்சன் சமரசிங்க | சுயேட்சை | 58,886 | 0.78% |
| செல்லுபடியான வாக்குகள் | | 7,561,526 | 98.03% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | | 151,706 | 1.97% |
| மொத்தமாக வாக்களித்தவர்கள் | | 7,713,232 | 70.52% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | | 10,937,279 | |

தொடரும்...

# வறுமையை ஒழித்து சமாதானத்தை ஏற்படுத்த அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்

## போரா சமூக மாநாட்டில் மைத்திரி அழைப்பு

(கொழும்பு)

**வறுமையை ஒழித்து சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு இனம், மதம், மொழி என்ற பேதமின்றி அனைவரும் ஒன்றுபடுவதே இன்று நாட்டின் தேவையாகும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். இதுவே முஹம்மது நபி அவர்களின் போதனையாகும் என போரா சமூகத்தினரின் சர்வதேச மாநாட்டிற்கு தனது நல்லாசிகளைத் தெரிவித்து உரையாற்றும் போது ஜனாதிபதி தெரிவித்தார்.**



போரா சமூகத்தினரது சர்வதேச மாநாடு பம்பலப்பிட்டியிலுள்ள போரா சமூகத்தின் பிரதான பள்ளியை மையப்படுத்தி ஆரம்பமானதுடன், 10 நாட்கள் தொடர்ந்து இடம்பெறும் இம்மாநாட்டின் 4 ஆவது நாளான நேற்று முன்தினம் மாநாட்டு மண்டபத்திற்குச் சென்ற ஜனாதிபதி மாநாட்டில் கலந்து கொண்டவர்களுக்கு தனது நல்லாசிகளைத் தெரிவித்தார்.

சமாதானத்திற்காக அர்ப்பணித்த சமூகத்தினரான போராக்களின் இம்மாநாடு இம்முறை இலங்கையில் நடைபெறுவது நாட்டுக்கு கௌரவமாகும் என்றும் அது குறித்து தனது நன்றியை தெரிவிப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

“எமக்கு இலங்கை மீது நம்பிக்கை உள்ளது” என்ற கருப்பொருளின் கீழ் 40 நாடுகளைச் சேர்ந்த 21 ஆயிரம் போரா சமூகத்தினரின் பங்குபற்றுதலுடன் இம்மாநாடு இலங்கையில் நடைபெறுவதுடன், வெளிநாடுகளிலிருந்து சுமார் 18 ஆயிரத்து 500 போராக்கள் கலந்து கொண்டுள்ளதுடன், இலங்கையைச் சேர்ந்த சுமார் 2,500 போரா சமூகத்தினரும் பங்குபற்றியிருக்கின்றனர்.

அனைத்து இனங்கள், சமயங்களுக்கு மத்தியில் சமாதானத்தையும் நம்பிக்கையையும் கட்டியெழுப்பி இலங்கையில் முன்னெடுக்கப்பட்டிருக்கும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பலம் சேர்ப்பது தீவிரவாதத்தை நிராகரித்து சமாதானத்திற்கு அர்ப்பணிப்பது போராக்களின் இந்த மாநாட்டின் நோக்கமாகும் என்பதுடன், இலங்கை சுற்றுலாத் துறைக்கும் வர்த்தகத்திற்கும் பொருத்தமான நாடு என்பதை எடுத்துக் கூறுவதும் இதன் மற்றுமொரு நோக்கமாகும்.

இந்த மாநாட்டின் மூலம் இலங்கைக்கு சுமார் 31 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அந்நியச் செலாவணியாக கிடைக்கப்பெற்றுள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது. இது போன்றதொரு மாநாடு 2007 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்றதுடன், அம்மாநாட்டில் 7,000 பேர் பங்குபற்றினர்.

பாராளுமன்ற உறுப்பினர் பைசர் முஸ்தபா, பதில் பொலிஸ்மா அதிபர் சீ.டி.விக்ரமரத்ன ஆகியோரும் இந்நிகழ்வில் பங்குபற்றினர். (இ-7)

# ஜனாதிபதித் தேர்தலை கண்காணிக்க வெளிநாட்டுப் பிரதிநிதிகள் வருகை

## தேர்தல்கள் ஆணைக்குழு அனுமதி

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பொதுநலவாய அமைப்பின் கண்காணிப்பாளர்களுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு அனுமதி அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய அனுப்பிய கடிதத்தில், ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்கு பொதுநலவாய அமைப்பின் கண்காணிப்புக் குழுவுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஐரோப்பிய ஒன்றியமும் தமது கண்காணிப்பாளர்களை அனுப்ப விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, உள்ளூர் கண்காணிப்பு அமைப்புகளான, பவ்ரல், தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையம் ஆகியவற்றுக்கும் தேர்தல் கண்காணிப்புப் பணிக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஆசிய தேர்தல் அதிகாரிகள் சங்கமும் தமது கண்காணிப்பாளர்களை அனுப்பவுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1822

Search for people, places and things


### லிங்கன்

**தலையில் அதிக பாரம் வைத்து நடப்பவர்களைவிட மனதில் அதிக பாரம் வைத்து நடப்பவர்களே இங்கு அதிகம்**




### விமலன்

**நாம் உண்டு நம் வேலை உண்டு என்று எப்பொழுது இருக்கின்றோமோ அன்றிலிருந்து நமக்கு நல்ல காலம் பிறந்திருக்கும்**



### ராஜேஷ்

**இழுத்துப் பிடித்துக் கஷ்டப்படுவதைவிட கைவிட்டுப் போவது எவ்வளவோ மேல்**



### விஜயா

**எல்லோருடைய மனதிலும் யாரோ ஒருவருடைய நினைவுகள் நிரந்தரமாக இருந்து கொண்டு இருக்கும்**




### ராஜினி

**விரிக்காதவரை சிறகுகள்கூட பாரம்தான்... விரித்துப் பறந்தால் வானம்கூட தொட்டுவிடும் தூரம்தான்**



### லிந்துஜா

**பிரச்சினைகளுக்கு இரண்டே காரணம்தான்... யோசிக்காமல் செயற்படுவதும் செயற்படாமல் யோசித்துக் கொண்டே இருப்பதும்**



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## பூஜித ஜெயசுந்தரவின்

# சத்தியக் கடதாசியை நீக்க சட்டமா அதிபர் கோரிக்கை



(கொழும்பு)

கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்ட பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர, உயர் நீதிமன்றத்தில் முன்வைத்த சத்தியக் கடதாசியை நீக்குமாறு சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா நேற்று முன்தினம் கோரிக்கை விடுத்தார்.

இந்தச் சத்தியக் கடதாசி மூலம் பூஜித ஜெயசுந்தர, தன்னைத் தேவையற்ற வகையில், குற்றம் சாட்டியிருப்பதாக சட்டமா அதிபர் உயர் நீதிமன்றில் தெரிவித்தார்.

ஜனாதிபதியும், அரச புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளரும், தானும் இணைந்து பூஜித ஜெயசுந்தரவுக்கு எதிராகக் குற்றவியல் குற்றச்சாட்டுக்களை முன்வைக்க சதித்திட்டம் தீட்டுவதாகக் கூறி கடந்த ஜூலை மாதம் 17ஆம் திகதி இந்த சத்தியக் கடதாசி முன்வைக்கப்பட்டதாகவும் சட்டமா அதிபர் தெரிவித்தார்.

தனக்கு எதிராக இவ்வாறு தவறான குற்றச்சாட்டை முன்வைப்பது அரசாங்கத்தின் பிரதான சட்டத்தரணி என்ற வகையில் தனது நற்பெயருக்குப் பாதிப்பாக அமைந்துள்ளதெனவும் சட்டமா அதிபர் தெரிவித்தார். (இ-7)

## உயர் நீதிமன்ற தீர்வு ஊடாக

# நாடாளுமன்றத்தின் பலவீனம் வெளிப்பட்டது

## விஜயதாஸ விளக்கம்



(கொழும்பு)

**மாகாண சபைத் தேர்தல் குறித்து உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் இருந்து நாடாளுமன்றத்தின் பலவீனம் வெளிப்பட்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.**

நடப்பு அரசாங்க நிலவரம் எதிர்காலச் சட்ட விபரணங்களை தெளிவுபடுத்தும் விதமாக நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ எழுதிய நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் புதன்கிழமை கொழும்பில் இடம்பெற்றது.

இந்'நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'சாதாரண முறையில் தேர்தல்கள் இடம்பெற வேண்டும் என்பதற்காக ஸ்தாபித்த சுயாதீனத் தேர்தல் ஆணைக்குழுவாலே இன்று சர்வஜன வாக்குரிமை கேள்விக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி வேட்பாளர் அறிவிக்கப்பட்டு சுதந்திரமான முறையில் தமக்காக ஜனாதிபதியை நாட்டு மக்கள் தெரிவு செய்கின்றார்கள். ஆனால் ஜனாதிபதியால் பயன்பெறுவது அமெரிக்காவா அல்லது சீனாவா என்ற போட்டித்தன்மை தற்போது ஏற்பட்டுள்ளது.

அந்தளவிற்கு சர்வதேசத்தின் தலையீடுகள் நாட்டுக்குள் பரந்தளவில் காணப்படுகின்றன' என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

# பொன்சேகா அரசியலில் ஈடுபடாதிருந்தால் நல்லது

## சஜித் அணி சுஜீவ சுட்டிக்காட்டு

(கொழும்பு)

சரத் பொன்சேகா அரசியலில் ஈடுபடாதிருந்தால் நல்லதாக இருந்திருக்கும் என தான் நினைப்பதாக அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அமைச்சர் சஜித் பிரேமதாஸவை பிரேரிக்குமாறு கோரி குருநாகலில் நடைபெறவுள்ள பொதுக்கூட்டம் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சரத் பொன்சேகா குருநாகல் கூட்டத்துக்குச் செல்ல வேண்டாம் எனக் குறிப்பிட்டுள்ளமை தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் வினவியதற்கே சுஜீவ சேனசிங்க இவ்வாறு குறிப்பிட்டார்.



சரத் பொன்சேகா என்ன சொல்கின்றார், என்ன செய்கின்றார் என்பது குறித்து கூறமுடியாதுள்ளது. முன்னர் ராஜபக்ஷக்களுக்கு எதிராகப் பேசிக் கொண்டிருந்தார். இப்போது சஜித்துக்கு எதிராக பேச ஆரம்பித்துள்ளார். அடுத்து யாருக்கு எதிராகப் பேசுவார் என்பது யாருக்கும் தெரியாதுள்ளது.

சரத்பொன்சேகா இராணுவ நடவடிக்கைகளுடன் தொடர்பு உள்ளவர். அவர் அரசியல் செய்யாமல் இருந்தால் சிறந்தது என தற்பொழுது தமக்குத் தெரிய வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# எந்தவொரு எம்.பிக்கும் மதுபான விற்பனை அனுமதிப்பத்திரம் வழங்கப்படவில்லையாம்

## அமைச்சர் கிரியெல்ல விளக்கம்

(கொழும்பு)

எமது அரசாங்கத்தால் எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் மதுபான விற்பனை அனுமதிப்பத்திரம் வழங்கப்படவில்லை. அதுதொடர்பில் உறுதியாகத் தெரிவிக்கின்றேன்.

ஆனால் மகிந்த அரசாங்க காலத்தில் அதிகமானவர்களுக்கு இவ்வாறு வழங்கப்பட்டிருந்தது என சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

எதிர்க்கட்சி உறுப்பினர் பந்துல குணவர்த்தன ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை முன்வைத்து கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாராளுமன்றம் நேற்று முன்தினம் சபாநாயகர் கருஜெயசூரிய தலைமையில் கூடியது. பிரதான நடவடிக்கைகள் இடம்பெற்ற பின்னர், எதிர்க்கட்சி உறுப்பினர் பந்துல குணவர்த்தன ஒழுங்கு பிரச்சினை ஒன்றை முன்வைத்து தெரிவிக்கையில்,



பாராளுமன்றத்தில் இருக்கும் 225 உறுப்பினர்களில் நூற்றுக் கணக்கானவர்களுக்கு மதுபான விற்பனைக்கான அனுமதிப்பத்திரம் இருப்பதாகவும் 75 பேருக்கு மண் அகழ்வதற்கு மற்றும் விநியோகிப்பதற்கான அனுமதிப்பத்திரம் இருப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க உயர் நீதிமன்றில் தெரிவித்ததாக அரச பத்திரிகை ஒன்றில் முதலாவது பக்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் ஒருவர் உயர் நீதிமன்றில் பெயர் குறிப்பிடாமல் இவ்வாறு தெரிவித்திருப்பது பாராளுமன்றத்தில் இருக்கும் அனைத்து உறுப்பினர்களின் கௌரவத்துக்கு பாதிப்பாகும். இதுதொடர்பாக சபாநாயகர் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கூறினார். இதற்குப் பதிலளித்த போதே அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 90 | 120 |
| உருளைக்கிழங்கு | 130 | 120 | 110 | 130 |
| பச்சைமிளகாய் | 150 | 180 | 140 | 200 |
| தக்காளி | 140 | 120 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 110 | 120 |
| கோவா | 80 | 80 | 60 | 80 |
| கரட் | 120 | 120 | 100 | 120 |
| பூசணி | 40 | 50 | 40 | 60 |
| புடோல் | 100 | 80 | 50 | 100 |
| வாழைக்காய் | 120 | 120 | 110 | 160 |
| சின்ன வெங்காயம் | 120 | 120 | 90 | 120 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 105 | 120 |
| பாகற்காய் | 150 | 160 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 50 | 120 |
| பயற்றங்காய் | 140 | 80 | 100 | 80 |
| லீக்ஸ் | 70 | 80 | 70 | 120 |
| பீற்றூட் | 60 | 80 | 60 | 80 |
| கறிமிளகாய் | 130 | 150 | 180 | 200 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 100 | 80 |
| போஞ்சி | 220 | 250 | 200 | 280 |
| கத்தரிதம்புள்ள | 70 | 160 | 50 | 100 |
| கீரை - 1பிடி | 25 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 400 | 350 | 280 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 35-40 | 30 | 20-40 |
| இராசவள்ளி | — | — | 150 | 240 |
| வெங்காயப்பூ | 140 | 160 | 110 | 200 |
| முள்ளங்கி | 100 | 80 | 30 | 100 |
| பொன்னாங்காணி | 35 | 40 | 20 | 30 |
| வல்லாரை | 50 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | — | 60 | 120 | 60 |




# வேண்டாம் திருவிழா!



“இந்த வருடம் நம்ம கோவில் திருவிழாவைப் போன வருஷத்தை விடச் சிறப்பாகக் கொண்டாடணும்” என்றார் தர்மகர்த்தா நாச்சிமுத்து

“அதுக்கென்ன ஜமாய்ச்சுப்புடலாம்” என்றார் அய்யாக்கண்ணு.

“ஜமாய்க்கிறதாம்! இவரு ஒரு பைசா குடுக்கப் போறதில்ல” என்று நினைத்துக் கொண்டார் மருதமுத்து.

வேறு யாரும் எதுவும் பேசாமல் மௌனமாகத் தலையாட்டினர்.

“சரி. அப்ப நானும் விழாக்குழு உறுப்பினர்களும் நாளையிலேருந்து வசூலுக்குக் கிளம்புறோம்” என்று தர்மகர்த்தா சொல்ல, கூட்டம் முடிந்தது.

இரண்டு வாரங்கள் கழித்து நாச்சிமுத்துவும் மற்றவர்களும் பொன்னம்பலத்தின் வீட்டுக்கு வந்தார்கள். பொன்னம்பலம் ஊரிலேயே பெரிய பணக்காரர். எந்த நல்ல காரியம் என்றாலும் தாராளமாக உதவி செய்பவர்.

வந்தவர்களை உட்கார வைத்து, கோப்பி கொடுத்து உபசரித்து விட்டு, பொன்னம்பலம் கேட்டார். “ஆமாம், வசூல் எல்லாம் எந்த மட்டிலே இருக்கு?”

“என்னத்தைச் சொல்றது? போன வருடம் வசூல் ஆனதில் கால் பங்கு கூட வசூலாகலை. எப்பவும் தாராளமாகக் கொடுக்கிறவங்க கூட இந்த வருடம் குறைவாத்தான் குடுத்தாங்க. எல்லாத்தையும் விடக் கொடுமை என்னன்னா, சில பேரு ‘இவ்வளவு பணம் செலவழிச்சுத் திருவிழா நடத்தணுமா?’ன்னு கேக்கிறாங்க. சில பேரு பிடிவாதமா பத்து ரூபாய் கூடக் கொடுக்க முடியாதுன்னு சொல்லிட்டாங்க. தெய்வ நம்பிக்கையே குறைஞ்சுக்கிட்டு வருது.”

“வழக்கம் போல நீங்கதான் பெரிய அளவில உதவி செஞ்சு திருவிழாவைச் சிறப்பா நடத்தி வைக்கணும்” என்றார் நமசிவாயம் என்ற விழாக்குழு உறுப்பினர். பொன்னம்பலம் கொஞ்சம் யோசித்து விட்டு, “இந்த வருடம் வசூல் ஏன் இவ்வளவு குறை என்று உங்களுக்குத் தெரியாதா?” என்றார்.

“தெரியாமல் என்ன? மழை பெய்யாததால விவசாயம் நடக்கல. ஊர்ல மத்த தொழில் செய்யிறவங்களுக்கும் வருமானம் குறைஞ்சு போச்சு. யாரிடமும் காசு இல்லை. காசு இருந்தாலும் நம்ம தேவைக்கே போதாதபோது கோவில் திருவிழாவுக்குக் கொடுக்க வேணுமா என்று யோசிக்கிறாங்க!”

“எல்லாருக்கும் அதே நிலைமைதான். உங்களையும் என்னையும் சேர்த்துத்தான் சொல்றேன். ஊரில மழை பெய்யாமல் விவசாயம் குன்றிப் போனா, திருவிழாக்கள் நடத்திறதில மக்களுக்கு எப்படி உற்சாகம் இருக்கும்?” “நீங்க என்ன சொல்ல வருகிறீங்க?”

“இந்த வருடம் திருவிழா வேண்டாம். வசூல் பண்ணின பணத்தைத் திருப்பிக் கொடுத்துடுங்க. அடுத்த வருடம் நல்லபடியா விழாவை நடத்திடலாம்” என்றார் பொன்னம்பலம். “விழா நடத்தலேன்னா சாமிக்குத்தம் ஆகிவிடாதா?’

“ஏங்க, மழை பெய்ய வைக்க வேண்டியது சாமிதானே? மழை பெய்யலேன்னா அது சாமியோட குத்தம் இல்லையா? நான் கடவுளுக்கு எதிராகப் பேசலே. நீங்க சாமிக் குத்தம்னு சொன்னீங்களே அதுக்காகச் சொன்னேன். நாம வருடா வருடம் விழா நடத்திக்கிட்டுத்தானே இருக்கோம்? இந்த வருடம் நாம விழா நடத்தலேன்னா அதுக்கு என்ன காரணம்னு சாமிக்குத் தெரியாதா? மழை பெய்து மக்கள் வளமாக இருந்தால்தானே சாமிக்கு விழா எல்லாம் எடுக்க முடியும்? குடும்பத்தை நடத்துறத்துக்கே கஷ்டப்படுகிற மனுஷன் சாமிக்கு விழா எடுக்கிறதைப் பத்தி எப்படி யோசிக்க முடியும்?”

“அப்ப நாங்க வருகிறோம்” என்று எழுந்தார் தர்மகர்த்தா.






**குறள் 18:**

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.

**பொருள்:**

வானிலிருந்து பெய்ய வேண்டிய மழை பெய்யாவிட்டால் வான் உலகில் வாழும் தெய்வங்களுக்கு நடக்க வேண்டிய பூசைகள் கூட நடக்காது.

## மனிதனும் மிருகமும்

உணவு தேடிக் காக்கையார்
ஊரைக் கூட்டி உண்ணுவார்
பணத்தைத் தேடி மனிதர் நாம்
பதுக்கி வைத்து வாழ்கிறோம்.

பாலில் நீரை நீக்கியே
பருகவல்லார் அன்னத்தார்
மாவில் கலப் படங்கள் செய்து
மற்றவர்க்குக் கொடுக்கிறோம்.

தேடி அலைந்து சத்துணவைத்
தேனீ நமக்குத் தருகிறார்
நாடி நாம் மற்றவர்க்கு
நன்மை புரிய முயன்றிலோம்.

வயலைப் பூச்சி அழித்திடாமல்
வெட்டுக்கிளியார் உதவுவார்
மயிலைப் பிடித்து சிறகொடித்து
மகிழ்ந்து நாமும் வாழ்கிறோம்.

பாலைத் தந்து நமதுடலைப்
பசுவார் பேணி வளர்க்கிறார்.
ஆடு மாடு விரும்பியுண்ணும்
அறிவிலியாய் வாழ்கிறோம்.

இரக்கம் நமது உள்ளத்தில்
இருக்க வேண்டும் தம்பிகாள்
சுரக்கும் அருள் இறைவனும்
தோன்றி நமக்கு அருளுவார்.

## ஆரோக்கியம் தொடர்பான பழமொழிகள்

- மருந்தேயாயினும் விருந்தோடு உண்.
- சுட்ட எண்ணெயைத் தொடாதே, வறுத்த பருப்பை விடாதே!
- வெட்டிவேரில் விசிறியும் விலாமிச்சை வேரில் தட்டியும் பண்ணு.
- வெந்தயம் போடாத கறியும் கறியல்ல, சந்தையில்லாத ஊரும் ஊரல்ல.
- வில்வப் பழம் தின்பார் பித்தம் போக, பனம் பழம் தின்பார் பசி போக.
- பலா உத்தமம், மா மத்திமம், பாதிரி அதமம்.
- கத்தரிக்காய்க்கு காம்பு ருசி. வெள்ளரிக்காய்க்கு விதை ருசி.
- சுக்குக்கு மிஞ்சின மருந்தும் இல்லை, சுப்பிரமணியனுக்கு மிஞ்சின தெய்வமும் இல்லை.
- உப்பில்லாப் பண்டம் குப்பையிலே.
- சுத்தம் சோறு போடும்.
- ஒருவேளை உண்பான் யோகி, இருவேளை உண்பான் போகி, மூவேளை உண்பான் ரோகி, நாலுவேளை உண்பான் போகியே போகி!

கனவு காணுங்கள், கனவுகளிலிருந்து சிந்தனைகள் பிறக்கும். சிந்தனைகள் செயல்களாகும்.
- அப்துல் கலாம்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் இனத்தை வலிமைப்படுத்த தமிழ் மக்கள் அணிதிரள வேண்டும்

தமிழ் இனத்தின் எதிர்காலம் பற்றிய கவலை தமிழ் இனப் பற்றாளர்களிடம் மிகுந்திருப்பதை அவதானிக்க முடிகிறது.

ஒரு பெரும் தியாகம் நடந்த இந்த மண்ணில் இப்படியொரு இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டு விட்டது என்ற கவலையோடு பலரும் மௌனமாக இருக்கின்றனர்.

2009ஆம் ஆண்டு வன்னிப் பெருநிலப் பரப்பில் நடந்த யுத்தமும் அதில் தமிழினத்துக்கு ஏற்பட்ட இழப்புகளும் தமிழினத்தை அந்தரத்தில் தவிக்க விட்டது.

தமிழ் மக்களை வழிப்படுத்திய விடுதலைப் புலிகள் என்ற அமைப்பு இல்லாமல் போனதன் வெற்றிடம், யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களை இழந்த வேதனை, பெற்றோர்களை இழந்து அநாதைகளாகிப்போன பிள்ளைகள், பிள்ளைகளைப் பறிகொடுத்த பெற்றோர்களின் பரிதவிப்புகள் என எல்லாமும் சேர்ந்து தமிழினத்தை சின்னாபின்னப் படுத்தியது.

இந்த மிக மோசமான சூழ்நிலையிலும் தமிழ் மக்கள் தங்களுக்கான அரசியல் தலைமையை வலுவாக்க வேண்டுமென நினைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை பாராளுமன்றத்துக்கு அனுப்பினர்.

மிக இக்கட்டான சூழ்நிலையில், இழப்புகளால் தமிழினம் அந்தரித்து நிற்கையில், எங்கள் இனத்துக்கான உரிமையை உறுதி செய்வதும் தமிழின அழிப்பில் ஈடுபட்டதற்கான தண்டனையை சம்பந்தப்பட்டவர்களுக்குக் கிடைக்கச் செய்வதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலையாய கடமையாக இருந்திருக்க வேண்டும்.

ஆனால் அந்தப் பணியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செய்யத் தவறியது மட்டுமன்றி, ஆட்சியாளர்களுடன் இணைந்து சென்று அற்ப சொற்ப நலன்களை சுயலாபமாகப் பெற்றுக் கொண்டு, தமிழினத்தைக் கைவிட்ட போது தமிழினம் சிதைபட்டது.

இத்தகைய நிலைமை தமிழ் அரசியல்வாதிகள் எவரையும் நம்ப முடியாது. அவர்கள் நேர்மையற்றவர்கள். விலை போனவர்கள் என்ற முடிவை தமிழ் மக்கள் எடுத்ததுடன் அரசியல்வாதிகளைக் கண்டாலே வெறுப்படைகின்ற மிகமோசமான மனநிலைக்கு எங்கள் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இதில் நேர்மை மிகுந்த ஒரு சில தமிழ் அரசியல் தலைவர்கள் இருந்தபோதிலும் அவர்களையும் பலயீனப்பட்டவர்களாகப் பார்க்கின்ற துரதிர்ஷ்டமான நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

இத்தகைய நிலையில் தமிழ் மக்கள் பேசாதிருந்தால், இனிவரும் காலங்களில் நடப்பவை மிகமோசமானதாக இருக்கும்.

இத்தகைய ஓர் இக்கட்டான கட்டத்தில் அரசியல் என்ற குறுகிய சிந்தனை கடந்து, தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு எங்களின் ஒற்றுமையை உறுதி செய்ய வேண்டிய தேவை அவசரமாக ஏற்பட்டுள்ளது.

இந்த இடத்தில் மக்கள் இயக்கமான தமிழ் மக்கள் பேரவை ஒட்டுமொத்தத் தமிழ் மக்களையும் அணிதிரட்டி எதிர்வரும் செப்ரெம்பர் 16ஆம் திகதி நடத்துகின்ற எழுக தமிழ் எழுச்சிப் பேரணியில் இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் அணி திரண்டால்; நிச்சயம் தமிழினத்தின் எதிர்காலம் ஆரோக்கியமாக அமையும். இது சத்தியம்.

# ஜனாதிபதித் தேர்தலை பிறகு பார்க்கலாம் எல்பிட்டிய தேர்தலில் கவனம் செலுத்துங்கள்

## பிரதமர் ஆலோசனை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் யார் போட்டியிடுவது என்பது தொடர்பில் பிறகு கலந்தாலோசிக்கலாம். அதற்கு முன்னர் எல்பிட்டிய பிரதேசசபைத் தேர்தலில் கவனம் செலுத்துங்கள் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர்களுக்கு ஆலோசனை வழங்கினார்.

எல்பிட்டிய பிரதேசசபைத் தேர்தல் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மாலைதீவு விஜயத்தின் போதும் அவதானத்தில் கொண்டிருந்தார். மாகாண மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் வஜிர அபேவர்த்தனவுடன் அங்கிருந்தவாறே தொடர்பு கொண்டிருந்தார்.

நாடு திரும்பியவுடன் ஐக்கிய தேசிய கட்சியின் பென்தர மற்றும் எல்பிட்டிய தொகுதி அமைப்பாளர் அமைச்சர் கயந்த கருணாதிலகவுடன் பிரதமர் கலந்துரையாடினார்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் கபிர் ஹாசிம் , கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் உள்ளிட்ட ஐக்கிய தேசிய முன்னணியின் முக்கியஸ்தர்கள் நேற்று அலரி மாளிகையில் எல்பிட்டிய தேர்தல் குறித்து கலந்துரையாடினர்.

இதன் போதே மேற்கண்டவாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கினார். (ஐ)

# கொழும்புத்துறைமுக நகரால் அழிந்து போயுள்ள நிலப்பரப்பு

## பிமல் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

சீனாவின் துறைமுக நகருக்காக இணைத்துக்கொண்ட நிலப்பரப்பை விட அதிகமான நிலப்பரப்பு கொழும்பு துறைமுகநகர் உருவாக்கப் பட்டதால் ஏற்பட்ட கடலரிப்பு காரணமாக அழிந்து போயுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க சுட்டிக்காட்டினார்.

அத்துடன் துறைமுக நகர்த் திட்டத்தை உருவாக்கியதாக மார்தட்டிக்கொள்ளும் ராஜபக்ஷ- ரணில் இருவரும் இந்த அழிவு குறித்த பொறுப்பை ஏற்றுக் கொள்ளத் தயாரா? எனவும் அவர் கேள்வியெழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை இன்று வரையில் சீனாவுடனும் தாய்லாந்துடனும் உடன்படிக்கை செய்துள்ளது. சிங்கப்பூருடன் இரகசிய உடன்படிக்கை செய்து கொள்ளவுள்ளது, இந்தியாவுடன உடன்படிக்கை செய்து கொள்ளவும் தயாராகி வருகின்றது.

இந்த உடன்படிக்கைகளில் இலங்கையின் கோரிக்கைக்கு அமைய இலங்கைக்கு ஏதுவான உடன்படிக்கை ஏதாவது ஒன்றாவது செய்து கொள்ளப்பட்டுள்ளதா? பொருளாதார ரீதியில் எமக்கு சாதகமான தன்மைகள் உள்ளதாக ஏதாவது ஒரு உடன்படிக்கை உள்ளதா? அவ்வாறு எந்தவொரு உடன்படிக்கையும் எமக்குத் தேவையான வகையில் உருவாக்கப்படுவதில்லை.

எனவே முதலில் எமக்கு ஆரோக்கியமானதும் சாதகமானதுமான உடன்படிக்கைகளை செய்துகொள்ளுங்கள் என அவர் மேலும் வலியுறுத்தினார். (ஐ)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **யாழ்.பிரதேசத்தில** பத்தானை, சுதுமலை, மாப்பியன், வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, முள்ளியன், கீவில் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில** உயிலங்குளம், கமலாம்பிகை அரிசி ஆலை, முதலைக்குத்தி, வட்டுப்பித்தன்மடு, புதுகாமம், நொச்சிக்குளம், கள்ளிக்கட்டைகாடு, சிறுநாவற்குளத்திலிருந்து தலைமன்னார் வரை, Timex ஆடைத் தொழிற்சாலை, மன்னார் வைத்திய சாலை, பூட் சிற்றி, மன்னார் நீர்பபாசனத் திணைக் களம், அரசாங்க அதிபர் அலுவலகம், ஆவேமரியா ஐஸ்தொழிற சாலை, மன்னார் தொலைத் தொடாபு நிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், Youth Crop பயிற்சி நிலையம், Palmyrah House, வங்காலைப்பாடு ஐஸ்தொழிற சாலை, பேசாலை ஐஸ்தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற் சாலை, தலைமன்னார் கடற்படைமுகாம், தலைமன்னா வைத்தியசாலை, தள்ளாடி இராணுவமுகாம், டயலொக் தொலைத்தொடர்பு நிலையம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# திறப்பு விழா

(முல்லைத்தீவு)


அன்னை ஸ்ரீசாரதா நிலைய திறப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 10 மணக்கு முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு அருகில் உள்ள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன், முலலைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ரு)

## இந்து சமய தத்துவங்கள் ஐநூறு

கோளறு பதிகம் 9 ஆவது பாட்டில் பசுவேறும் எங்கள் பரமன் என்று சிவபெருமானை அடியார் குறிப்பிட்டிருக்கின்றார். சிவபெருமானின் வாகனம் 'எருது' என்றாலும் பசு என்ற சொல்லுக்குக் 'கட்டுப்பட்டது' என்பது பொருள். பச் என்ற தாதுவிலிருந்து பசு என்ற சொல் வந்தது. ஆகவே கட்டுப்பட்டது தானே. ஆனால் உலகப் பெருவழக்கில் பசு என்பது பெண் இனத்தைக் குறிக்கின்றது. ஆராய்ச்சிப்படி பசு என்பது மாட்டின் பொதுப் பெயராகும்.

(தொடரும்)




ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

## ஆன்மாவைத் தூண்டல்

உன் உடலின் ஒரு பாகம் தூண்டப்படும்போது உனக்கு இன்பம் உண்டாகிறது. உன் ஆன்ம உணர்வு தூண்டப்படும் போது அன்பு உண்டாகிறது. அன்பிற்கு முடிவு இல்லை. ஆனால் இன்பத்திற்கு முடிவு உண்டு. பல சமயம் மக்கள் இன்பத்தை அன்பு என நினைக்கிறாாகள. இனபததிறகும அனபிறகும உளள வேறுபாடடைப் புரிந்துகொள்ள வேண்டும். பெரும் அதிர்ஷ்டசாலி மாத்திரம் தான் புரிந்து கொள்வான்.

சாககரையின சுவை நாககைத தூணடுகிறது. இசை செவிக்கும், காட்சி கண்களுக்கும் கிளர்ச்சியூட்டுகின்றன. ஆன்மாவைத் தூண்டுவது எது? சாதனையும் சத்சங்கமும் தான் ஆன்மாவைத் தூண்டுகின்றன.

ஆன்ம உணர்வு தூண்டப்படவேண்டும் என்றுதான் ஒருவா விருமபுகிறாா. வலுவறறிருநதாலும மிக இலேசான அந்த எண்ணமே வாழ்வை நடத்தி வருகிறது. மற்ற எல்லாத் தூண்டுகோலும் மேற்பரப்பில் இருக்கிறது. ஆன்மாவைத் தூண்டுவது செயலாற்றும் வலிமையைத் தருகிறது. உடலைத் தூண்டுவது களைப் பைத் தருகிறது. ஒவ்வொரு தூண்டுகோலும் உன்னை ஆத்மாவிற்கு வழிநடத்திச் (அழைத்துச்) செல்ல வேண்டும். அப்படியென்றால் நீ ஒரு நல்ல இசையைக் கேட்கும் போது நீ அதைக்கடந்து செல்லும் மனநிலையை அடைகிறாய். நீ ஞானத்தைக் கவனத்துடன் கேட்கும் போது அது உன்னை மௌன நிலைக்கு அழைத்துச் செல்கிறது.



அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## ராகு காலத்தில் சுப நிகழ்ச்சியைத் தவிர்ப்பது ஏன்?

ராகு கால நேரத்தில் நல்ல காரியங்கள் எதுவும் செய்யக்கூடாது என நமது பெரியோர்கள் கூறுவதுண்டு.

.புராணங்களின் படி ஒரு நாளில் உள்ள இருபத்தி நாலு மணி நேரத்தில ஒரு மணி நேரம் ராகுவும், ஒரு மணி நேரம் கேதுவும் அம்பிகையை பூஜிக்கின்றன.

அதில் ராகு வழிபாடு செய்யும் நேரம் "ராகு காலம்" என்றும், கேது வழிபாடு செய்யும் நேரம் "எமகண்டம்" என்றும் அழைக்கப்படுகிறது.

பொதுவாக மற்ற கிரகங்களின் ஆற்றல் அந்த நேரத்தில் குறைந்திருக்கும் என்பதால்தான், ராகு காலத்தில் சுப காரியங்களைத் தவிர்க்க வேண்டும் என கருதப்படுகின்றது.

அதே சமயம் ராகு காலத்தில் துர்க்கை அம்மனை வழிபட்டால் சிறப்பு பலன்களை தருகிறது எனப்படுகின்றது.

அதிலும் செவ்வாய்க்கிழமை ராகு காலத்தில் துர்க்கையை பூஜிப்பது சிறப்பு மிகுந்ததாக கருதப்படுகிறது.

மேலும் செவ்வாய், ராகு ஆகிய கிரகங்களால் தோஷம் இருந்தாலோ அல்லது வாழ்வில் தடைகளும், துன்பங்களும் தொடர்ந்தாலோ ராகு கால வழிபாட்டினை மேற்கொண்டு, துர்க்கையை வழிபடுவது நற்பலன்களை தருகின்றது.

# வடக்கு- கிழக்கு பிறிமியர் லீக் தமிழ் யுனைட்டட் அணி காலிறுதியில்



நடப்பாண்டிற்கான வட கிழக்கு பிறீமியர் லீக் தொடரின் லீக் ஆட்டங்கள் நிறைவில் குழு B இல் இரண்டாம் இடத்தை பிடித்து காலிறுதிக்குள் நுழைந்தது தமிழ் யுனைட்டட் அணி.

நடைபெற்ற 10 ஆட்டங்களில் ஆடியுள்ள இவ் அணி 06 வெற்றி , 03 தோல்வி மற்றும் 01 சமநிலை என 19 புள்ளிகளைப் பெற்று தனது குழுவில் இரண்டாம் இடத்தை பிடித்துள்ளது.

யுனைட்டட் அணி தனது காலிறுதி ஆட்டத்தில் குழு ஏ இல் மூன்றாம் இடத்தை பெறும் அணியை எதிர்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (க)

அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை
Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும்
Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்


# காலிறுதிக்குள் நுழைந்தது வல்வை எப்.சி.அணி



நடப்பாண்டிற்கான வட கிழக்கு பிறீமியர் லீக் தொடரின் லீக் ஆட்டங்கள் நிறைவில் குழு B இல் முதல் இடத்தை பிடித்து காலிறுதிக்குள் நுழைந்தது வல்வை எப்.சி.அணி.

இதுவரை 10 ஆட்டங்களில் ஆடியுள்ள வல்வை எப்.சி. அணி 09 வெற்றி மற்றும் 01 தோல்வி என 27 புள்ளிகளைப் பெற்று தனது குழுவில் முதல் இடத்தை பிடித்துள்ளது. இவ் அணி தனது காலிறுதி ஆட்டத்தில் குழு A இல் நான்காம் இடத்தை பெறும் அணியை எதிர்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (க)

# பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கு ஒரு தங்கம், இரு வெள்ளிப் பதக்கங்கள்





கனிஷ்ட பிரிவினருக்கான தேசிய மட்ட ஆண்களுக்கான சம்மட்டி எறிதல் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.மிதுன்ராஜ் தங்கப் பதக்கத்தையும் ரி.சந்தோஸ் வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றியதோடு எஸ். மிதுன்ராஜ் குண்டு போடுதல் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும் தமதாக்கிக் கொண்டனர்.

கனிஷ்ட பிரிவினருக்கான 57 ஆவது தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டிகள் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற 18 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான சம்மட்டி எறிதல் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.மிதுன்ராஜ் 32.85 மீற்றர் தூரம் எறிந்து தங்கப் பதக்கத்தையும், அதே கல்லூரியைச் சேர்ந்த ரி.சந்தோஸ் 31.07 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப் பதக்கத்தை தமதாக்கிக் கொண்டதோடு 18 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான குண்டு போடுதல் போட்டியில் எஸ்.மிதுன்ராஜ் 14.86 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப்பதக்கத்தையும் தமதாக்கிக் கொண்டனர். (க)

# குழு B ல் 3ம் இடம்பிடித்து காலிறுதியில் முல்லை.பீனிக்ஸ்




நடப்பாண்டிற்கான வட கிழக்கு பிறீமியர் லீக் தொடரின் லீக் ஆட்டங்கள் நிறைவில் குழு B இல் மூன்றாம் இடத்தை பிடித்து காலிறுதிக்குள் நுழைந்தது முல்லை.பீனிக்ஸ் அணி.

நடைபெற்ற 10 ஆட்டங்களில் ஆடியுள்ள இவ் அணி 05 வெற்றி , 03 தோல்வி மற்றும் 02 சமநிலை என 17 புள்ளிகளைப் பெற்று தனது குழுவில் மூன்றாம் இடத்தை பிடித்துள்ளது.

இவ் அணி தனது காலிறுதி ஆட்டத்தில் குழு A இல் இரண்டாம் இடத்தை பெறும் அணியை எதிர்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (க)

# மானிப்பாய், சாவகச்சேரி இந்துக் கல்லூரிகளுக்கு பதக்கம்

கனிஷ்ட பிரிவினருக்கான தேசிய மட்ட கோலூன்றி பாய்தல் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த கே.கபில்சன் வெண்கலப் பதக்கத்தையும் கனிஷ்ட பிரிவினருக்கான தேசிய மட்ட கோலூன்றி பாய்தல் போட்டியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ச.சங்கவி வெண்கலப் பதக்கத்தை தமதாக்கிக் கொண்டனர்.



கனிஷ்ட பிரிவினருக்கான தேசிய மட்ட கோலூன்றி பாய்தல் போட்டியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ச.சங்கவி வெண்கலப் பதக்கத்தை தமதாக்கிக் கொண்டனர்.

நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற 20 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ச.சங்கவி 35.10 மீற்றர் தூரம் எறிந்து வெண்கலப் பதக்கத்தை தமதாக்கிக் கொண்டார்.



கனிஷ்ட பிரிவினருக்கான தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டிகள் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில்நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் நடைபெற்ற 20 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான கோலூன்றி பாய்தல் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த கே.கபில்சன் 4 மீற்றர் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தை தமதாக்கிக் கொண்டார். (க)

# காலிறுதிக்கு முன்னேறியது கிளியூர் கிங்ஸ் அணி



நடப்பாண்டிற்கான வட கிழக்கு பிறீமியர் லீக் தொடரின் லீக் ஆட்டங்கள் நிறைவில் குழு B இல் நான்காம் இடத்தை பிடித்தது காலிறுதிக்குள் கிளியூர் கிங்ஸ் அணி.

நடைபெற்ற 10 ஆட்டங்களில் ஆடியுள்ள இவ் அணி 04 வெற்றி , 05 தோல்வி மற்றும் 01 சமநிலை என 13 புள்ளிகளைப் பெற்று தனது குழுவில் நான்காம் இடத்தை பிடித்துள்ளது.

இவ் அணி தனது காலிறுதி ஆட்டத்தில் குழு A இல் முதலாம் இடத்தை பெறும் அணியை எதிர்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (க)

## 7ஆவது ரயில்...

காங்கேசன்துறை ரயில் நிலையத்திருந்து தினமும் அதிகாலை 3.45 மணிக்கு சேவையை ஆரம்பித்து யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தை அதிகாலை 4.00 மணிக்கு வந்தடையும். யாழ்ப்பாணம் ரயில் நிலையத்திலிருந்து அதிகாலை 4.05 மணிக்கு சேவையை ஆரம்பிக்கும் சிறிதேவி ரயில் சேவை முற்பகல் 10.24 மணிக்கு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தைச் சென்றடையும் என அட்டவணையிடப்பட்டுள்ளது.

அத்துடன், கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து தினமும் மாலை 3.55 மணிக்கு சேவையை ஆரம்பிக்கும் சிறிதேவி ரயில் இரவு 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தை வந்தடையும் என அட்டவணையிடப்பட்டுள்ளது.

சிறிதேவி ரயில் சேவை இது வரை கொழும்பு - வவுனியா இடையே இடம்பெற்றது. அது இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் காங்கேசன்துறை வரை நீடிக்கப்பட்டுள்ளது. (ம-3,250)

## எவ்வித கால...

மாநகர சபை அமர்வில் சுகாதாரப் பகுதி சம்பந்தமான விவாதத்தின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ் மாநகரசபைப் பகுதிகளில் இடம்பெறும் அனுமதியற்ற வியாபார நிலையங்கள் மற்றும் உரிய தரம் பேணப்படாத உணவகங்கள் என்பவற்றுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் முன் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனினும் எமது நல்லெண்ணத்தை சிலர் பலவீனமாகப் பார்க்கும் நிலை ஏற்பட்ட காரணத்தால் மக்கள் நலனில் அக்கறை கொண்டதற்கமைய தரம் அற்ற உரிய வசதிகளற்ற உணவகங்கள் மற்றும் வியாபார அனுமதி அற்ற வர்த்தக நிலையங்கள் என்பன எதிர்வரும் மாதம் முதலாம் திகதியில் இருந்து சோதனைக்கு உட்படுத்தப்படும். குறித்த சோதனை நடவடிக்கையில் உரிய நடைமுறைகள் பின்பற்றப்படாத வர்த்தக நிலையங்கள் மற்றும் உணவகங்கள் அன்றைய தினமே சீல் வைத்துப் பூட்டப்படும் என முதல்வர் மேலும் தெரிவித்தார். (ம-3,10)

## சுதந்திரக்கட்சி...

இதனை தெரிவித்துள்ளார்.

விரைவில் ஜனாதிபதித் தேர்தல் குறித்த அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், பிரதான கட்சிகள் ஜனாதிபதி வேட்பாளரை அறிவித்து வருகின்றன.

எனினும், ஐக்கிய தேசியக் கட்சியும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திர கட்சியும் ஜனாதிபதித் தேர்தல் குறித்து உத்தியோகபூர்வமாக இதுவரையிலும் எந்த அறிவிப்பையும் வெளியிடவில்லை.

குறிப்பாக சுதந்திர கட்சியில் இருந்த பலர், மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுன கட்சியுடன் இணைந்து கொண்டுள்ள நிலையில், மைத்திரி தரப்பு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவு தெரிவிக்கும் என்ற கேள்வியே எழுந்திருந்தது.

இந்நிலையில், அண்மையில் இடம்பெற்ற சுதந்திர கட்சியின் மாநாட்டில் பேசிய ஜனாதிபதி, எதிர்வரும் 2020ஆம் ஆண்டு புதிய அரசாங்கம் ஒன்றை அமைக்க போவதாக தெரிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே, எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியும் போட்டியிடும் என் அதன் பொது செயலாளர் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம-3)

## சுகாதார தொண்...

வடக்கு ஆளுநர் சுரேன் ராகவனின் உறுதிமொழியையடுத்து சுகாதாரத் தொண்டர்களின் போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட சுகாதாரத் தொண்டர்களுக்கு நேற்று ஆளுநர் தலைமையில் நியமனங்கள் வழங்கப்படவிருந்தன.

இந்நிலையில் சுகாதாரத் தொண்டர்களுக்கான நியமனத்தை மீள் பரிசீலனை செய்யுமாறு கோரி புறக்கணிக்கப்பட்ட சுகாதாரத் தொண்டர்கள் போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

இதனையடுத்து நேர்முகத்தேர்வுக்கு தோற்றியும் இந்த நியமனம் தொடர்பாக பெயர் குறிப்பிடப்படாதவர்களின் மாவட்ட பிரதிநிதிகள் வடக்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனை ஆளுநர் செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

குறித்த கலந்துரையாடலின் பின்னர், வடக்கு மாகாண சுகாதார தொண்டர்களுக்கு வழங்கப்படவிருந்த நியமனங்கள், சில முறைப்பாடுகளின் அடிப்படையில் விசாரணை நிமித்தம் பிற்போடப்பட்டுள்ளதாக ஆளுநர் தெரிவித்தார். (ம-3,10,30)

## பலாலி விமான நிலைய...

பலாலி விமான நிலையத்தின் நிர்மாணப்பணிகளை அமைச்சர் நேற்று பார்வையிட்டார். இதன் பின்னர் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் பலாலி விமான நிலையத்தின் அபிவிருத்தி பணிகள் தொடர்பான மதிப்பீட்டுக்குழு கூட்டத்திலும் அவர் கலந்து கொண்டார். இதன்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதி அளவில் பலாலி விமான நிலையத்தின் முதல் கட்ட அபிவிருத்திப் பணிகள் நிறைவடையும். விமான சேவை உத்தியோகபூர்வமாக 16ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருக்கின்றது.

4 விமான நிலையங்கள் சர்வதேச விமான நிலையங்களாக அபிவிருத்தி செய்யப்படும். கட்டுநாயக்கா, மத்தள, இரத்மலானை மற்றும் மட்டக்களப்பு ஆகிய விமான நிலையங்கள் அவையாகும்.

இந்த விமான நிலையங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தப்பட்ட வலயமாக சர்வதேச விமான சேவைகள் ஆரம்பிக்கப்படும் என்றார். (ம-3,10)

## தனது மகனை தேடிவந்த மற்று...

இறுதி யுத்தத்தின் போது இராணுவத்திடம் கையளித்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மற்றும் யுத்த காலங்களில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்கள், வெள்ளை வான்களில் கடத்தப்பட்டவர்கள் உள்ளிட்ட பல்வேறு வகையில் காணாமலாக்கப்பட்ட தங்களுடைய பிள்ளைகளை, உறவுகளை தேடி வடக்கு கிழக்கில் 900 நாட்களை கடந்த தொடர் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

இந் நிலையில் தொடர் போராட்டத்தில் தனது மகனை தேடி வந்த தந்தை ஒருவர் நேற்று முன்தினம் சுகயீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

2009 ஆண்டு முள்ளிவாய்க்கால் பகுதியில் தனது மகன் காணாமல் ஆக்கப்பட்ட நிலையில் தனது காணாமலாக்கப்பட்ட மகனான நாகராசா நகுலேஸ்வரன் என்பவரை தேடி வந்த ஏழாம் வட்டாரம் சிவநகர் புதுகுடியிருப்பைச் சேர்ந்த சின்னையா நாகராசா என்ற தந்தை யாரே உயிரிழந்தவராவார். (ம-3,281)

## கோண்டாவிலில்...

மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருகையில், கோண்டாவில் அன்னுங்கை பகுதியைச் சேர்ந்த முச்சக்கர வண்டி சாரதி ஒருவரின் வீட்டிற்கு இரு மோட்டார் சைக்கிளில் நான்கு பேர் கொண்ட குழுவினர் முகங்களை மூடியவாறு சென்றுள்ளனர்.

அவர்கள் வீட்டின் யன்னல்களை அடித்து நொறுக்கியதுடன் வீட்டில் தரித்து நின்ற முச்சக்கர வண்டியையும் அடித்து நொறுக்கிவிட்டு வீட்டில் இருந்தவர்களை வாள்களை காட்டி அச்சுறுத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். (ம-3,101)

## ஜனாதிபதித் தேர்...

எதிர்வரும் 9ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழு கூட உள்ளதுடன், அதன் போது ஜனாதிபதித் தேர்தல் குறித்து கலந்துரையாடப்படும் என ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும, எல்பிட்டி பிரதேச சபைக்கான தேர்தல் குறித்தும் கலந்துரையாடப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் 10 முதல் டிசம்பர் மாதம் 8ம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது. (ம-3)

## கொக்குவிலில் வாள்...

இரண்டு இளைஞர்கள் மீதும் சரமாரியாக வாளால் வெட்டிவிட்டு தப்பிச் சென்றனர். தனிப்பட்ட முரண்பாடே இதற்கு காரணமென தெரிவிக்கப்படுகிறது. (ம-3)

## உழவு இயந்திரம்...

றில் இடம் பெற்றுள்ளது. குறித்த விடயம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

நேற்று நண்பகல் முல்லைத்தீவு பாலி ஆற்றில் மணல் ஏற்றுவதற்காக சென்ற நபர் குறித்த ஆற்றில் மணல் ஏற்றிக்கொண்டு உழவு இயந்திரத்தை ஆற்றில் இருந்து மேலே செலுத்த முற்பட்ட வேளையில் உழவு இயந்திரம் தலைகீழாக கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் குறித்த உழவு இயந்திரத்தை செலுத்திச் சென்ற சாரதி சம்பவ இடத்திலேயே உழவு இயந்திரத்துக்குள் சிக்குண்டு பலியாகியுள்ளார்.

குறித்த விபத்தில் துணுக்காயை சேர்ந்த தம்பிமுத்து சுரேஷ்குமார் என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

சம்பவ இடத்திற்கு சென்ற மல்லாவி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,281)

## ரணில், கருவின் ஆசீர்வாதம்...

குருநாகலில் இடம்பெற்ற பேரணியின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர் தன்னுடைய கைகளில் இரத்தக் கறைகள் இல்லை எனவும் தான் திருட்டு, கொள்ளை போன்ற செயல்களில் ஈடுபடவில்லை எனவும் தான் கொலைகாரர்கள் மற்றும் போதைப் பொருள் வியாபாரிகளுக்கு பாதுகாப்பு வழங்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார். தான் தற்போது காலை 4.00 மணிக்கு எழுந்ததிலிருந்து இரவு 12.00 மணி வரையில் அபிவிருத்தி வேலைகளில் ஈடுபடுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தான் தனது தூக்கத்தை குறைத்துக் கொண்டு தொடர்ந்தும் சேவை செய்வதாக உறுதி வழங்குவதாகவும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார். (ம-3)

## புதிய கட்டடத்திற்கான அடிக்கல்...

என யாழ் மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் தெரிவித்துள்ளார்.

மாகாண மற்றும் மாநகர அபிவிருத்தி அமைச்சினால் ஒதுக்கப்பட்ட 2 ஆயிரத்து 350 மில்லியன் ரூபாய் மதிப்பீட்டிலான அபிவிருத்திப் பணிகளின் முதற்கட்ட நிர்மாணத்திற்காக 700 மில்லியன் ரூபாய் செலவு செய்யப்படவுள்ளது.

குறித்த கட்டடம் யாழ்ப்பாண மக்களின் கலை, கலாசார விழுமியங்களைப் பிரதிபலிக்கும் நோக்கிலான கட்டட நிர்மாணங்களை உள்ளடக்கியதாக அமைக்கப்படுவதோடு குறித்த கட்டட நிர்மாண வேலைக்கு வட பகுதியைச் சேர்ந்தவர்கள் அதிகளவில் உள்ளீர்க்கப்படுவர்.

நான்கு கட்டங்களாக நான்கு வருடத்துக்கு முன்னெடுக்கப்படும் யாழ் மாநகரசபை புதிய கட்டடத்துக்கான அபிவிருத்திப் பணிகளை மத்தியில் ஆட்சி அமைக்கும் அரசாங்கத்தோடு இணைந்து குறித்த அபிவிருத்திப் பணியை முன்னெடுக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென யாழ் முதல்வர் கேட்டுக்கொண்டார். (ம-3,10)

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 722 வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.09.05
விசேட இலக்கம் 3470
வெற்றி இலக்கங்கள் 04 09 29 71 ஆங்கில எழுத்து F
தொலைபேசி: 0112 333 546-47

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1035
சீட்டிழுப்பு திகதி 05.09.2019 பச்சை
A 39 52 55 64
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.74,115,180
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
தானியங்கி குரல் பதிவுக்கு 0114 825 825 ஐ அழையுங்கள்.
ஜாதா, பச்சை, நீலம், சிவப்பு நிற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 05.09.2019 வெற்றி வாரம் 2608 வர்ணம் கபிலம்
இடபம் வெற்றி இலக்கங்கள் 06 24 42 51
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,148,178
06.09.2019ம் திகதி வெள்ளிக் கிழமை கருநீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1601 சீட்டிழுப்பு திகதி 05/09/2019
வெற்றி இலக்கங்கள் 22 24 26 45 ஆங்கில எழுத்து E
அடுத்த செவ்வாய்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 37,079,944
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

மஹஜன சம்பத
திகதி 2019/09/05 சீட்டிழுப்பு இலக்கம் 3999
ஆங்கில எழுத்து Q வெல்லப்பட்ட இலக்கங்கள் 5 8 0 9 2 1
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2019.09.05 சீட்டிழுப்பு இலக்கம் 2231
ஆங்கில எழுத்து O வெல்லப்பட்ட இலக்கங்கள் 14 24 53 80
தேசிய லொத்தர் சபை

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1559 திகதி 05/09/2019
ஆங்கில எழுத்து D வெற்றி இலக்கங்கள் 01 21 32 56
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 2019/09/05 சீட்டிழுப்பு இலக்கம் 594
லக்கினம் சிம்மம் வெற்றி இலக்கங்கள் 08 17 33 69
தேசிய லொத்தர் சபை

# தெல்லிப்பழை துர்க்கை அம்மனின் மஞ்சத்து சக்கரம் இறுகியது

வரலாற்றுச் சிறப்புமிக்க தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய மஞ்சத் திருவிழா நேற்று இடம்பெற்றபோது சக்கரம் ஒன்று இறுகியதால் அம்பாள் இடைநடுவே இறக்கப்படும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

பிள்ளையார், அம்பாள் மற்றும் முருகப் பெருமான் மஞ்சத்தில் எழுந்தருளி வீதியுலா வந்தபோது, இரவு 7.45 மணியளவில் ஆலயத்தின் மேற்கு வீதியில் மஞ்சத்தின் சக்கரம் ஒன்று இறுகிய நிலையில் அசைய மறுத்தது.

இதனையடுத்து அடியவர்கள் கூடி முயற்சித்தபோதும் மஞ்சம் அசையவில்லை.

தொடர்ந்து ஜேசிபி இயந்திரம் கொண்டு வரப்பட்டு முயற்சிக்கப்பட்டபோதும் மஞ்சம் ஓடவில்லை, அதனால் விநாயகப் பெருமான், அம்பாள், முருகப் பெருமான் மஞ்சத்தில் இருந்து இறக்கப்பட்டு காவு கொம்பில் வைத்து வீதி உலா நிறைவு செய்யப்பட்டது. (ம)

உலகின் முன்னணி நிறுவனங்களில் ஒன்றான சவுதி அரேபிய அரசாங்க 'அரம்கோ' வேலைத்திட்டத்தில்

100க் கணக்கான வேலைவாய்ப்புக்கள்!

| | | |
|---|---|---|
| கனரக வாகன சாரதிகள் (SL Licence) | 300 பேர் | 1200+300 SAR ரூ.72,000 |
| ஃபோக் லிஃப்ட் டிரைவர் | 50 பேர் | 1200+300 SAR ரூ.72,000 |
| பக்கோ லோடர் ஒப்பரேட்டர் | 600 பேர் | 1200+300 SAR ரூ.72,000 |
| கிறேன் ஒப்பரேட்டர் | 450 பேர் | 1500+300 SAR ரூ.86,400 |

மெக்கானிக் உதவியாளர், வெல்டர், ரயர் ஃபிற்றர், A/C டெக்னீஷியன், பெயின்ரர், டென்ரர், டிரைவர், ரைம் கீப்பர் இன்னும் பல...

2 வருட பணி ஒப்பந்தம் (மீள்புதுப்பிக்கத்தக்கது). தங்குமிடம், மருத்துவம், போக்குவரத்து, விமானச்சீட்டு வழங்கப்படும்.
நாளுக்கு 9 மணி / வாரம் 6 நாள் வேலை. (வயதெல்லை : 21 – 40)

வடக்கின் 1வது & ஒரேயொரு அரச அங்கீகாரம்பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்

Emerald Isle
Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
License No. 2268
077 00 38 215
077 55 46 956
021 221 9 221

221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
இஷாரா புடவையகம், The Lover க்கு அருகே
email: jaffna@emeraldisle.lk www.emeraldisle.lk

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (9946)

## துரித தபால்கள் பொதிகள் சேவை

DHL மூலம் அனுப்பப்படும் பொதிகள்
3 வேலை நாட்களில் ஒப்படைக்கப்படும்



திருமுருகன் கொம்நெற்
321, K.K.S.Road, Jaffna.
கிளை : திருநெல்வேலி, நெல்லியடி.
0777 554 528 (C-7109)

## கனடா மோகனின் இடியப்ப, முறுக்கு மெசின் இலங்கையிலும் பெற்றுக் கொள்ளலாம்


வீட்டு கையியக்க மெசின்


வர்த்தக கையியக்க மெசின்


வர்த்தக மின் (Automatic) இடியப்ப மெசின்

(8716)

தொடர்புகளுக்கு : 076 796 6000, 077 968 1118 (இலங்கை)
www.StringhopperMachine.com
Email : mo@college.ca
இல் 4164336006 இலக்கத்துக்கு Missed Call செய்யவும். (ரொரன்ரோ, கனடா)

## வேலைவாய்ப்பு

மன்னாரில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு சோடா ஏற்றி இறக்குவதற்கு ஆட்கள் தேவை. தங்குமிடம் வழங்கப்படும்.

தொடர்பு: 0770034130

## V2 TRAVELS

PASSPORT

வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு இலங்கை வீசா நீடிப்பு யாழ்ப்பாணத்திலேயே செய்து கொடுக்கப்படும்.

VISA EXTENSION
FOR FOREIGN PASSPORT
(வீசா எக்ஸ்ரென்சன்)

0768227499 (C-7320)

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● சாவகச்சேரி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS

UK – 550 */=Kg
கனடா - 950 */=Kg
ஜேர்மனி - 650 */=Kg
நெதர்லாந்து- 700 */=Kg
இத்தாலி- 700 /=Kg (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

0768226240

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● மானிப்பாய் ● திருகோணமலை ● கொடிகாமம் ● வல்வெட்டித்துறை ● பருத்தித்துறை ● சாவகச்சேரி ● சுன்னாகம் ● மருதங்கேணி

V2 TRAVELS

## மணமகள் தேவை

யாழ்.இந்து வேளாளர் குடும்பத்தைச் சேர்ந்த 1990இல் உத்தரட்டாதி 1ம் கால் இல் பிறந்த ஆசிரியராக பணி புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.,

தொடர்பு:- (094)

077 348 1963
070 448 1963

போட்டிப் பரீட்சை விசேட வகுப்புகள்

SLAS
Open / Limited
சனி, ஞாயிறு
9.00 - 3.30

கணக்காளர் சேவை
சனி, ஞாயிறு
9.00 - 4.00

M.A Ltd
ஞாயிறு
9.00 - 2.30

தொடர்புகளுக்கு
0766883394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் பஸ் நிலையத்திலிருந்து 100 M தூரத்தில்)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## JOB OPPORTUNITY

FRONT DESK OFFICER

VAVUNIYA

- Fluent in English (speaking & Writing)
- Computer Literacy
- Capable of Handling online reservation & Guest Services.
- Handle Social Media & marketing including Travel agents.
- tamil and sinhala able to speak

Note- Ladies and Gents can Apply. Accommodation will be Provided. (085)

HOTEL OVIYA
No.41, Mile Road, Vavuniya. hoteloviyajob@gmail.com

## வேலைவாய்ப்பு

AIA சர்வதேச நிறுவனத்தின் நெல்லியடி கிளைக்கு பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

- வெளிக்கள முகாமையாளர்
- வெளிக்கள உத்தியோகத்தர்
- அலுவலக உத்தியோகத்தர்

கல்வித்தரம்:
1. க.பொ.த சாதாரண தரத்தில் சித்தி
2. க.பொ.த உயர்தரம் தோற்றி இருத்தல் வேண்டும்.

தகுதியுள்ளவர்களுக்கான நேர்முகத்தேர்வு 09.09.2019 (திங்கட்கிழமை) நெல்லியடி அலுவலகத்தில் காலை 9.00 am தொடக்கம் 12.30 pm வரை நடைபெறும்.



தொடர்புகளுக்கு:
076 879 2992 (C-7506)

## British College of Higher Studies

BCHS

பெற்றோர்களே!! மாணவர்களே!!
A Level பரீட்சை எழுதியவர்களுக்கான புதிய பிரிவுகள் உங்களுக்கான அரியவாய்ப்பு

- 17 வருட சேவை மற்றும் 7000க்கும் அதிகமான மாணவர்கள்.
- சிறந்த அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர் குழு.
- தனிப்பட்ட அக்கறை.

| Course Details | Duration |
|---|---|
| Certificate in English (Basic) | 3 Months |
| Diploma in English | 6 Months |
| Advanced Diploma in English | 3 Months |
| Spoken English | 3 Months |
| Spoken Sinhala with Grammar | 3 Months |
| Diploma in IT | 3 Months |
| Diploma in Hardware and networking Technology | 6 Months |

Special 3 in 1 package 45000/=

Special discount up to 30.09.2019

வெளிநாட்டு முயற்சியாளர்களுக்கான பாடநெறிகள் மற்றும் விசா ஒழுங்குகள்

IELTS - Academic / General
IELTS - Life skills A1 B1 Exam
Canada Student visa

No.15, Sirambiyady Lane off Stanley road, Jaffna.
call 021 222 4550, 076 138 0212 (C-7507)

## புதிய பாடநெறிகள் ஆரம்பம்

- Diploma in English
- Spoken English
- Diploma in Computer Office Management
- Sinhala Language Course

ஆரம்பம்:
07.09.2019 காலை 10.30 மணி

யாருக்கு?
- இந்த வருடம் A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு
- பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு
- உயர் கல்வி கற்போர்
- 16 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்குமான பாடநெறி

☑ பாடநெறி முடிவில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்வாய்ப்புகளுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழ்கள்
☑ இலங்கையில் மூன்றாம் நிலைக் கல்விகளுக்கு அங்கீகாரம் வழங்கும் TVEC இன் அங்கீகாரம் பெற்ற பாடநெறிகள்
☑ வட மாகாணத்தில் பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் ஒரே தெரிவு (C-7491)

E-CITY COLLEGE OF ENGLISH & IT SKILLS DEVELOPMENT
இல.372D பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் (வீரமாகாளி அம்மன் கோவில் அருகாமை)
0212217106, 0773400418, 0770615242, 0774924166 www.ecitycollege.lk

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.09.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.